B 12MSA
176
19.5.14

J D·RC 3277
RRao.. 207-3-1896.

ஸ்ரீ

ஸ்ரீபாகவதத்திலோர் கதையாகவிளங்கும்

ஞானச்சொரூபராகிய

ஸ்ரீ குசேலவிலாசம்.

இஃது

ம-ா-ா-ஸ்ரீ

செங்காடு

சேஷாத்திரி ஐய்யங்கார்

அவர்கள் இயற்றியது

சென்னைமாநகரம்

வியவஹாரதரங்கிணி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

தாது௵ ஆனி௴

1876.

Registered Copy Right.

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ.

விளம்பரம்.

இதனால் சகலருக்கு மறிவிப்பதுயாதெனில் — சென்னப்பட்டணம் முத்துநாயகன்பேட்டை கிருஷ்ணமநாயகன் குளத்துக்குவடக்கு வெங்கய்யர்தெருவில் - அ - வது - நம்பர்வீட்டில் ஸ்ரீயவனாரதாரங்கிணி யச்சுக்கூடத்துத்தலைவர் - ம - ள - ள - ஸ்ரீ வங்கிபுரம்- இராகவாசாரியார் அவர்களிடத்தில் இந்தபுத்தகம் இருக்கிறபடியால் வேண்டியவர்கள் புத்தகம் க - க்கு - அணா - எ - ஆ - கொடுத்து வாங்கிக்கொள்ளலாம். வெளித்தேசத்தார் அதன் தபாற்கூலியுடன்செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டியது. கஉ - புத்தகங்கள் ஒரேதடவையில்வாங்குவோருக்கு ஓர்புத்தகம் இனாமாகக் கொடுக்கப்படும். இப்புத்தகத்தைமகாகனம்பொருந்தியகவர்ன்மெண்டாரின் - கஅகூஎ - வது - வருஷத்திய - உ௫ - வது - ஆக்டின்படி ரிஜஸ்டர் செய்வித்திருக்கிறபடியினாலே என்உத்தரவுபெறாமல் யாராவது - இப்புத்தகத்தை அச்சிடுவாராயில் - அவர்கள் - மேற்கண்ட ஆக்டிற்கண்டிருக்கும் தண்டனைக்கு உட்படுவார்கள்.

இங்ஙனம்,

செங்காடு சேஷாத்திரி அய்யங்கார்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ

வெளிப்பிரதேசத்து வித்வான்கள்

சாத்துகவி.

ஆறைமாநகர்

கவி - அரங்கப்பிள்ளையவர்கள் குமாரராகிய

முத்தமிழ்க்கவி

திருவேங்கடப்பிள்ளையவர்கள்

இயற்றிய ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டவெழுில் ஞானமோருருக்கொண்டெனத்
சிலக்குசேல மேலோர் ... ... *
திறனுற்றசரிதைமிகு நன்னடைவிலாசமாய்ச் ... *
செய்கவெனவேண்டப் பலோர் ... ... *
ஏர்கொண்டசெங்காட்டு நாராயணைப்புனித ... *
னின்பார்ந்த புத்ராக்ரம் ... ... *
இணையிலாப்புக ழிராமாநுசச்செல்வனுக் ... *
கிளைஞன் சடகோபஜீயர் ... ... *
சீர்கொண்டவன்புறுந் சேஷாத்திரிப்புலவ ... *
னெஞ்சினின் மகிழ்வுகொண்டு ... ... *
திருமலவகத்தியப் பாஷையிலியற்றியே ... *
சீர்புகழ் மேவினனால் ... ... *
பார்கொண்டகவிது ரிஃதற்புதமெனப்புகல்வர் ... *
பண்புள்ள சான்றோர்குழாம் ... ... *
பரிவாகநோக்கியே பாகதிகேறுசேர் ... ... *
பானமாமென்பர் மாதோ ... ... *

கட்டளைக்கலித்துறை.

சீரமர்நல்வளச்செங்காடெனுந்தலச் சேஷாத்திரி ... *
மாரன்செயிக்குசேலர்விலாசத்தை மகிழ்வுடனே ... *
பாரதிபார்த்துவியக்தனள்வேதன் சபாசென்றனன் ... *
வீரியஞானசொரூபவகத்தியன் மெச்சினனே ... *

சிற்றூர்ஜில்லாத் துரைத்தனவித்தியாசாலைத்
தமிழ்த் தலைமைப்புலவர்
தில்லையம்பூர்ச்

சந்திரசேகரகவிராஜபண்டிதரவர்கள்

இயற்றிய - நிலமண்டிலவாசிரியப்பா.

நிலமகண்முகமதி யிலகியதிலகமென் ... ... *
றெண்டிசையோர்புகழ் தொண்டைநன்னாட்டினில் *
பொங்குதண்டலைசூழ் செங்காடென்னும் ... ... *
நற்பதிதன்னிற் பொற்புடனுறைவோன் ... ... *
நாரணனடிதுதி நாராயணவேள் ... ... *
கற்றவத்தாலே பெற்றிடுபுதல்வன் ... ... *
சடகோபரான சடகோபஜீயர்தம் ... ... *
அடிமலர்க்கடிமை பூண்டிடுமன்பன் ... ... *
பொய்யொருக்காலும் புகலாப்புண்ணியன் ... ... *
மெய்யைத்தழுவி மேவிடுந்தன்னியன் ... ... *
இன்னியற்றமிழின் சொன்னடையுணர்ந்தோன் ... *
நான்குவேதப்பொருள் பாங்குடனறிந்தோன் ... *
நவரசத்துடனே நன்குபம்பலபாப் ... ... *
புவிதனிலியற்றிப் புகழ்பெறுநாவலன் ... ... *
சேஷாத்திரிவாழ் திருமாலடிதொழும் ... ... *
சேஷாத்திரியெனுந் திருப்பெயரழகன் ... ... *
கற்றவர்மற்றவர் எத்திறத்தோரும் ... ... *
எளிதினுணர்ந்தே யொளிர்வீடடையத் ... *
தன்னுளத்துன்னுபு கன்னறேன்பொருவும் ... *
குசேலவிலாச மெனுநற்குணநூல் ... ... *
விசேஷஞானமே விடற்பொருட்டு ... ... *
நாடகத்தமிழில் நவின்றனன்மாதோ ... ... *

வாலாஜாதாலூகு - வில்லேஜ் - ஸ்கூல்
இன்ஸ்பெக்டர்
புதுவை

வேலாயுதமுதலியாரவர்கள்

இயற்றிய அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நகத்தொடிரணியற்கீண்ட வரியிணைப் ... ... *
போதடிபோற்று நண்பன்செங்காட் ... ... *

டிகத்தலிலா நாராயணையங்காருந்தவசரு ... ... *
னெனுஞ் சேஷாத்ரி ... ... *
ஜகத்திடைமுத்தமிழ்வாணரிஃ தமுதின்சுவையதெனச் *
சாற்றச் செஞ்சொன் ... ... *
மகத்தவநற்குசேலமுனி சரிதையைவிலாசமதாய் ... *
வழங்கினனே ... ... *

இராணிப்பேட்டைத் தமிழ்ப்பாடசாலைப்புலவர்

அண்ணாமலைசெட்டியாரவர்கள்.

இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

நான்மறையுணர்ந்த வியாதமாமுனிவ ... ... *
னற்சுதற் சுகர்பரீச்சித்தா ... ... *
நாமனுக்கிசைத்த பாகவதத்தி ... ... *
னிலொருகதை யெனுங்குசேலர் ... ... *
தேஞ்வழிக்கன்ன சரிதையைவிலாசச் ... ... *
செந்தமிழாற் புனைந்திசைத்தான் ... ... *
செய்யுறுங்குவளை நந்தினமணியின் ... ... *
செறிநிலவாற் பகற்பொழுதில் ... ... *
காண்பெறவிரிந்துகூம்புதலில்லாக் ... ... *
கழனிசூழ்ந்திலங்கு செங்காட்டுக் ... ... *
காவலனால் வேதங்களாய்ந்தோர் ... ... *
கால்வழிவரு குலோத்துங்கன் ... ... *
ஆன்றிரட்டியயொற்குழற் கண்ணன்றன்பா ... ... *
லன்ப னாராயணையங்கா ... ... *
ரருந்தவத்தநயனாய சேடாத்ரி ... ... *
யாய் புலமைசிறந்தவனே ... ... *

நேரிசைவெண்பா.

செங்காட்டுக்கோணியாஞ் சேஷாத்ரியையங்கார் ... *
நன்காயுரைத்தாரிந் நானிலத்தில் - சிங்காரப் ... *
பாகவதத்தோர்கதையாப் பன்னுகுசேலனெனும் ... *
பாகவதன்றன்விலாசப் பா ... *

வெளிப்பிரதேசத்து வித்வான்கள்

சாத்துகவி முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

சென்னைமாநகரம் வித்வான்கள்

இயற்றிய

சாத்துகவி.

சென்னைச்சர்வகலாசாலைத் தமிழ்த்தலைமைப்புலவர்

ஸ்ரீமத், உபய,

சச்சம்பாடி ஸ்ரீநிவாசராகவாசாரியரவர்கள்

இயற்றிய

கொச்சகம்.

சீர்மன்னுஞ்செங்காட்டிச் சேஷாத்ரியையங்கார் ... *
கார்மன்னுங்கண்ணபிரான் கருணைப்பெருக்கத்தால் ... *
பார்மன்னுஞ்செல்வமெலாம் பற்றியகுசேலர்தம ... *
தேர்மன்னுவிலாசமதை நன்னடையாவியற்றினனே ... *

சென்னைச்சர்வகலாசாலைத் தமிழ்ப்புலவர்

ஸ்ரீமத், உபா, சுதரிசனம்

கிருஷ்ணமாசாரியரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அங்காட்டுபுனலரனார் முன்னிட்டுசடைத்தலைக்கணாவிந்த [லின்
கொங்காட்டுபசுந்துளவத் தனிமுதற்குப்பிடியவலைக்கொடுத்துநல்
பங்காட்டுமிருசெல்வம்பெற்றுய்ந்த குசேலன்சீர்பகர்விலாசம்
செங்காட்டுள்வாழ் சேஷாத்திரிப்புலவனன்கியற்றிச்சிறப்புற்றனே

கிழவீதி - வங்கீபுரம் - ஸ்ரீமத்-உபய

இராகவாசாரியரவர்கள் இயற்றிய

நேரிசைவெண்பா.

சீர்வளர்செங்காட்டிற் றிகழ்நான்மறைக்குலத்தோன் ... *
ஆர்புகழ்சேர் சேஷாத்ரியையங்கார் - பார்மேல் ... *
குசேலவிலாசந்தன்னைக்கூறிப் பேர்பெற்றான் ... *
விசேடமதாக வியந்து ... *

சாத்துகவி.

சென்னை

பிரீசர்ச் மிஷன்ஸ்கூல்

தமிழ்ப்புலவர்

ஸ்ரீமத், வை.த. இலட்சுமணராயரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கற்றுணர்பைங்காப்புடைசூழ் செங்காட்டினனிதமிழி ... *
னயத்தை நன்கு ... *
முற்றுணர்சேடாத்திரி யாமுகிஞருரைசால்புலவன் ... *
முந்நீர் வைப்பின ... *
கற்றுணர்மெய்ஞ்ஞானத்தின் பெருஞ்செல்வக்குசேலமுனி ...
கதை ராக்குற்றம் ... *
செற்றுணர்நவலர்களிப்ப விலாசமதாய்ச்செய்திட்டான் *
சிறப்பீமாதோ ... *

சென்னைச்சர்வகலாசாலைத் தமிழ்ப்புலவர்

கோமளபுரம

இராசகோபாலபிள்ளையவர்கள்

இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வில்லான்றபிறைநுதன் மங்கையரினன்னம் ... ... *
வீழ்நடைபயில் பசியவயற்செங்காட்டு ... ... *
நல்லான்றவைணவத் தொன்மறையோர்பெம்மா ... *
ஞாயணைப்பெயரோன் றவத்தில்வந்த ... ... *
சொல்லான்றசெந்தமிழ் மிக்குணர்ந்தமைந்த ... ... *
தூயகுணசேஷாத்திரிப் பேர்வள்ளல் ... ... *
தொல்லான்றகுசேலர் விலாசமதைநன்கு ... ... *
சொற்றிட்டான் மால்கழலிற்பற்றிட்டானே ... ... *

ம - ா - ா ஸ்ரீ

கா - பச்சையப்பமுதலியாரவர்கள்

சென்னை ஐஸ்கூல், தமிழ்த்தலைமைப்புலவர்

ஆ - வித்வான்

சுப்பராயபிள்ளையவர்கள்

இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆங்குறுசெங்கதிர் காப்பப்பொதும்பர்மேய ... ...
வணிகொள்செங்காடெனு நாடுசெய்தவத்தின் ... ...
ஓங்குறுமெய்ம்மைப் பயனுவுரைக்கவந்த ... ...

உயர்மும்மைத்தமிழை பொருந்துணர்ந்தமேலோன் *
நாங்குறுசீர்வைணவ வேதியர்குலத்தோன் ... ... *
றநுபுகழ்ச்சேஷாத்திரி நாவலன்வான்கீர்த்தி ... ... *
வீங்குறுதற்குசேலர் விலாசத்தைக்கூறி ... ... *
விரிஞன்கண்ணனையே தேறினனே ... ... *

சென்னை

வெஸ்லியன்மிஷன் ஸ்கூல்

தமிழ்ப்புலவர்

ஸ்ரீநிவாசமுதலியாரவர்கள் இயற்றிய.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தண்ணறுந்துளவத் தணிப்பருங்கடப்பாற் ... ... *
றனிமையாம் பத்திமைவாய்ந்த ... ... *
எண்ணுறுகுசேலர் விலாசநன்கியற்றி ... ... *
யிருங்கடற்புவியினர்க் கீந்தான் ... ... *
பண்ணுறுவிளரி படர்சிறைச்சுரும்பர் ... ... *
பாடிகாவுடுத்த செங்காடு ... ... *
நண்ணுறுசேடாத்திரிப்பெயர் மறையோர் ... ... *
நற்குலனுதித்த நாவலனே ... ... *

புரசை

அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள் மாணாக்கரும்

ப்ரீசர்ச்மிஷன் காலேஜ் தமிழ்த்தலைமைப்புலவருமாகிய

திரு,

சின்னசாமிபிள்ளையவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எந்தையெனுங்கண்ணபிரானுக்கினிய குசேலனிருங் *
கதையோர்ந் தியாரும் ... ... *
சிந்தைகனிந்துய்யும்வகை நாடிநாடகத்தமிழாற் ... *
செப்பினனால் ... ... *
கந்தமலர்ப்பொழிலமர் செங்காட்டுநாராயணமால் ... *
காதலன் சீர் ... ... *
வந்தமறைகமழ்வாயான் சேஷாத்ரிவள்ளலுள ... *
மகிழ்ந்து மன்னே ... ... *

காஞ்சிபுரம்

இராமாநுசப்பிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருவளருமணிமார்பன் சேவடிக்கேயன்புறுநற்றுஞ் ... *
செல்வன்வேத ... *
உருவளரும்வித்தா நாராயணமால்தவமதனி ... *
னுதித்த மைந்தன் ... *
மருவளரும்பொழிற் செங்காடெனுந்தலத்துச்சேஷாத்ரி *
வள்ளலாவோன் ... *
குருவளருங்குசேலர் விலாசஞ்செய்தானிதன்மகிமை *
கூறொணாதே ... *

சென்னை

யஸ் - பி - ஜி - ஆங்கிலோவர்னக்யுலர்

கல்விச்சாலைத் தமிழ்ப்புலவர்

ப - வாசுதேவமுதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மடலுலாமலர்ப்பொதும்பர்ச் செங்காட்டுள்வருமறையோர் *
மரபில் வந்த ... *
மிடலுலாஞ்சீர்வைணவச் சேடாத்திரிப்பெயர்கொண் *
மேதக்கோன் மாண் ... *
உடலுலாமுயிர்கணனி யுணர்ந்துய்யுநெறிகாண ... *
வொண்ட ரங்கக் ... *
கடலுலாம்புவியின்மிசைக் குசேலர்விலாசத்தையின்று *
கழறினனே ... *

திருவெவ்வுளூர்

இராமசாமிசெட்டியார் அவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வாரணமுன்வந்தருளு மாதவனுக்கவலளித்து ... *
வளமபெற் றோருகும ... *
சீரணவுங்குசேலருயர்சரித்திரம் விண்ணவருமனு ... *
தின் முவக்கப் ... *
பூரணமாமறையுணர்ந்த காரணமாவினியதவப் ... *
புதல்வ னென ... *
காரணசேஷாத்ரியெனுங்கவி வலோன்விலாசமதாக் *
கழறினனே ... *

ஷியற்றமிழ்ப்போதகாசிரியர்

திரு. சண்முகப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உலகமெலாமீரடியா லளந்திட்டுத்தன்னுதாத்
தாழி வைக்கும் ... *
அலகின்மறைப்பொருட் கவலோர்பிடியளித்தி
டருஞ்செல்வ மன்றுபெற்றே ... *
இலகியகுசேலசரித்திர மிரவாரிஷயைநா
டகமென் றேத்த ... *
கலமறையோர்குல சேஷாத்திரிக்கொண்மூமுகந்தவண
நலமிற் றன்றே ... *

சென்னைமாநகரம் வித்வான்கள் சாத்துகவி

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

இந்தக் குசேலவிலாசத்தைச் செய்தளிக்கவேண்டுமெனக்

கேட்டுக்கொண்ட

கலியாணபுரமென்னும் பெங்களூரைச்சார்ந்த

கோலார் டிஸ்டிரிக்டு

சிந்தாமணி ஸப்டிவிஷன் முன்ஸிப்

ம-ா-ா-ஸ்ரீ

ஸ்ரீநிவாஸஐயங்காரவர்களுடைய

சிறப்பு இதன்கீழ்சொல்லப்படுகிறது.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டசங்குசக்கரமேந்துமெம்பிரான்
றிருவடித் தாமரைகளைச் ... *
சிந்தித்துவந்தனைசெய் நாராயணப்புனிதன்
செய்தவமுதித்த குமரன் ... *

ஏர்கொண்டகலியாணபுரமெனும் பெங்களூர்
நெடுநகர்தனைச் சார்ந்திடும் ... *
சிருமலக்கோலார்டிஸ்டிரிக்டு சிந்தாமணியி
னிலைகொள் ஸப்டிவிஷன்முன்ஸிப் ... *
தார்கொண்டதிண்புயன் சத்தியவரிச்சந்த்ரன்
றான கர்ணவதாரன் ... *
தருமகுணசீலனற் சீநிவாசப்பெயர்கொள்
சௌந்தரிய சுபமன்மதன் ... *
ஏர்கொண்டஞானக் குசேலரதுசரிதமதை
யின்பாவாச மமைத்தே ... *
இனையில்லாநாடக விலாசஞ்செய்தருளென
வியம்பினன் சேஷாத்ரியே ... *

கட்டளைக்கலித்துறை.

திருவளர்தோங்குங் குசேலவிலாசத்தைச்
செய்க வெனும் ... *
தருவளரும்பொழிற் சிந்தாமணிநகர்
ஸப் டிவிஷன் ... *
பெருவளமுன்ஸிப் துரையதிகாரத்தைப்
பெற்ற தயா ... *
கான்சீநிவாசமுகில் வாழிவாழியிக்
காசினி யே ... *

முற்றிற்று.

வாழ்த்து.

கொச்சகக்கலிப்பா.

முச்சகத்தோர்கள்புகழ் கண்ணன்வாழ்கவே ... ... *
மூவர்தலைவனன்பர்கள் வாழ்கவே ... ... *
உச்சிதமுகில்வாழி தமிழ்வாழ்க ... ... *
வுயர்ந்தநான்மறைவாழி யிப்புத்தகம் ... ... *
எச்சமறப்படிப்பவர் கேட்பவர் ... ... *
எழுதுவோர்வாழ்க வ்யவஹாரதரங்கிணி ... ... *
அச்சுக்கூடம்நாளுக்கு நாள்ரம்பவு ... ... *
மபிவிருத்தியடைந்தோங்கி வாழ்கவே ... ... *

பிழை திருத்தல்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
க	உகூ	யுமா	வமா
அ	௸	ருக்மிணி	ருக்மிணி தன்மினை
கூ	எ	யுள்ளாள்	யுற்றுள்
கஉ	கங	கட்டின	கட்டின்
கங	ககூ	நிலதோ	நிலததோ
உக	உக	முடைட்	முடைடய
உசா	அ	யோசிக்கின்றேன்	யோசிக்[illegible]றேன்
௸	கூ	பூசிக்கிறேன்	பூசிக்கின்றேன்
உஎ	கஉ	அவி	அவ
ங0	கூ	களுக்கு	களிக்க
ஙகூ	௸	கேழி	வேழி
சஉ	உகூ	வன	வள
சங	ங	கோபிகாஸ்திரீகள்	ஸ்திரீகள்
௸	உசா	நிநில	நிதில்
சஅ	ங0	யரா	யாரா
ரு0	அ	வார்த்தை	வாசல்
எ0	ஙரு	மறவா	மாமா
எஉ	உகூ	சேரழகு	பேரழகு
எங	உ0	தருப்பு	தருப்ப
எரு	கூ	கொடு	கொண்டு

ஸ்ரீ

ஸ்ரீநிகமாந்தகுரவேநம:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ குசேலவிலாசம்.

காப்பு.

ஆழ்வார்கள் துதி.

கட்டளைக்கலித்துறை.

சீரார்செழிற்கண்ண னட்புள்ளஞான சிரோமணியாம் *
ஏரார்குசேலர் விலாசத்தைச் செய்திடவென்னெஞ்சமே *
வாரார்மகிமைகொள் பன்னிரண்டாழ்வார் வனசபதம் *
நீராரப்போற்றுவையேல் மாற்றுவாய்பந்தம் நிச்சயமே. *

வேதாந்ததேசிகர் - துதி.

நேரிசை - வெண்பா.

விசிட்டாத்துவிதத்தை மேதினியிலென்றும் *
இசையுறவேநாட்டிவைத்த வெங்கை - திசையோற்றும் *
சீரார்ஸ்வேதாந்த தேசிகன்றன்செஞ்சரண *
வாரீசநெஞ்சே வழுத்து. *

ஸ்ரீகண்ணபிரான் துதி.

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தங்கள்

கல்லறிவுடைய துரியன்கட்டளை யாற் ... ... *
கற்புப்பாஞ் சாலியையிழுத்து ... ... *
வல்லபார்முன்னர் வத்திரங்களைய ... ... *
வாசுதேவாவெனத் தொழவே ... ... *
நல்லதண்ணருள்வைத் தகஷயத்துகிலே ... ... *
நல்கிக்காத் தருளியநாதன் ... ... *
சொல்லருமாவிக்கப் பதயுகளத் ... ... *
தொழுவன்யான் வழுசிதைதரவே ... ... *
புத்திபுமிளாப் போக்கியபரமன் ... ... *
பொலியுமர்வேணுகா தத்தோன் ... ... *
நாதவிழ்மாலை யருச்சுனனுக்குத் ... ... *
தக்கசாரதிபென வமைக்தோன் ... ... *

போதகமருப்பை யொடித்தவல்லமையோன்
  பூரிக்கும்பாஞ்ச ஜன்னியத்தோன்
பாததாமரைகளி ரண்டையுமன்பாய்ப்
  பணிந்தியா னுய்ந்திடுவேனே (௨
கண்டகனான கஞ்சனை வதைத்த
  கருதரும்புஜபல முடையோன்
விண்டலப்பாரி ஜாதமாந்தருவை
  மேதினிதன்னிலே நட்டோன்
கண்டனமொழி யாய்ச்சியர்மையல்கொள்ளும்
  கட்டழகுள பரந்தாமன்
புண்டரீகாக்ஷன் திருவடியிணையைப்
  போற்றுதல் செய்குவன்யானே

கலிவிருத்தம்.

சிலர்கள்மனமெனுஞ் செய்யதாமரை
ஆலயமாகவே யமைந்தமாயவன்
நீலமேகத்தைநேர் நிறத்தையுற்றகோ
பாலன்பாதங்களைப் பணிகுவேனரோ

சேனைமுதலிகள் துதி.

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

நீதில்லாக்குசேலரது விலாசந்தன்னைச்
  செந்தமிழிலடியேன் யான்பாடுதற்கு
வேதன்மகிழ்காதலிசீர் வாணிநீதி
  மேவியகல் விச்சொரூபிவிளங்குஞானி
போதமுறுபுத்தமுது மறைகளுணர்கும்
  புகலரியமகிமைமிகு மன்னையென்றன்
நாதகமேவச்சேனை நாதர்செய்ய
  நல்லடிகளுள்ள மிசைநாட்டுவேனே

அவையடக்கம்.

எழுசீரடி யாசிரிய விருத்தங்கள்.

உயர்தரும்பரன்வ முகிலினைக்கண்டென்
  னுவருதகத்தை நன்றாக்கி
உயிர்களுக்கெல்லா மின்புடன்பெய்யென்
  றுரைத்திடா தென்றுமம்மேகம்

நியமமாய்ச்செயுமென் விலாசத்தின்குற்றம்
  நீக்கியெல்லோர்க்குமே யினிதா
அயர்தரலான்றோர் களுக்கியல்பாகும்
  அவரைக் கேளாதிருப்பினுமே. (௧)

அழகமருத்தி குழுமிவ்வுலகில்
  அமைந்தசின்னஞ் சிறுகுழந்தை
மழலைச்சொல்கேட்டுத் தந்தைதாய்மிகவு
  மனமகிழ் வடைவதுபோலப்
பழுதுடையடியே னுரைவிலாசத்தைப்
  பூர்த்தருள் மிகவுமேவைத்து
முழுதுணர்சான்றோ ரேற்கவன்னவர்க்கு
  முக்கியப் பெருங்கடனன்றோ (௨)
அகமகிழ்வாக வனுதினம்பாலு
  மன்னமும் பழங்களுந்தந்து
சுகந்தனைவளர்ப்போ ரதன்மொழிகேட்டுச்
  சொல்லருவியப் படைவதுபோல்
ஜகந்தனில்கல்வி கனவிலுந்தெரியாத்
  தமியனே னுரைவிலாசத்தின்
புகரொழித்தங்கீ கரித்தினிதாக்கப்
  போதவுங்கற்றவர்க் கியல்பே (௩)

ஸ்ரீகுசேல சரித்திர சங்கிரக அகவல்.

இராகம் - எதுகுலகாம்போதி.

இருவர்கண்ணனுஞ் சீலகுசேலரும்
மருவியசிறுபரு வத்திலொற்றுமையாய்ச்
சாந்தீபாது தக்கநோர்பள்ளியில்
சேர்ந்துவாசித்தனர் திடம்பெறுங்கல்வியைப்
பின்னரவ்விருவரும் பிரிந்திடாமற்படி
அன்யோன்யவிஷ்டா யமைந்திருந்தனர்கள்
விந்தைகோவிந்தனை விடுத்துத்தன்னூர்க்கு

வந்தனர்குசேலர் மணமவர்க்காச்சு
உத்தமிசுசீலை யுடன்பற்பலநாள்
சித்தங்களித்துச் சேர்ந்திருக்கையிலே
தரித்திரம்வந்து தங்கிடவதிகமாய்ப்
பெருக்கவோரிருபத் தேழுபிள்ளைகளைப்
பெற்றனளொன்றன் பின்னொன்றாக
நற்றவக்குசேலர் நாயகியானாள்.
தரித்திரந்தன்னைத் தபித்துளியுழல
வருத்திடச்சுசீலையை மக்கள்பலரும்
அந்தோநம்மை யண்டியில்லாமை
எந்தவிதத்தி லேகிடுமென்பாள்
நெஞ்சமகிழ நிகரிலாச்செல்வம்
பஞ்சந்தன்னைப் பறக்கவோட்டுமென
எண்ணித்தன்புருஷனை பின்புடனடைந்து
புண்ணிற்கோலிட்டாற் போலிருக்கின்ற
சஞ்சலவறுமை தன்னைநாம்நீக்க
பஞ்சவர்தூதனைப் பரிவுடன்கண்டு
வேண்டியசெல்வம் விருப்பமாய்ப்பெற்றே
ஈண்டுநீர்வருகவென் றியம்பினள்சுசீலை
அதற்குடன்பட்டே யவல்தனைக்கொண்டு
இதயங்களிகூர்ந் தேகினர்குசேலர்
நல்லபல்சகுனம் நண்ணிடக்கண்டு
சொல்லருவியப்பைத் துன்னியேபின்பு
நாராயணனைநாடியே வேண்டிச்
சீரியபட்டினமேற் சென்றுதுவாரகையைத்
தடையறவடைந்து துவாரபாலகர்கள்
இடத்திற்றம்வருகையை யெடுத்துரைத்திடவே
பக்கத்திலிருந்த பார்த்திபருமயர்கள்
எக்களிப்புடனே யென்னஞ்செய்ய
த்வாரபாலகர் தக்ஷணமோடி
சீரியகண்ணனைச் சேவித்துபக்தியாய்ப்
பெருகியஞானம் பெற்றிடுகுசேலர்
வருகையைச்சொல்ல மாதவன்கேட்டு

அந்தக்ஷணத்திலே யவரையழைத்து
வரவேண்டுமென்ன வாய்மலர்ந்தருளினர்
குசேலரைக்கண்டு கோடிதண்டஞ்செய்
தசைவிலாக்காவலர்க ளனைத்துமேதாண்டிக்
கோபாலரிடம் கொண்டுபோய்விட்டார்
சாபமென்னும் த்வாரபாலகர்தாம்
அருளனுதினமு மன்பர்மேல்வைக்கும்
கிருட்டினபகவான் கிட்டவந்தவர்க்கு
வந்தனைசெய்து மார்புடனணைத்து
ஆந்தாளிஷ்டு மனைத்தையுஞ்சொல்லி
அவல்தனைப்பிடுங்கி யன்புடனுண்டு
செகவையாயக்ஷயச் செல்வமளித்தார்
அச்சுதனிடத்தி லாக்கினைபெற்று
மெச்சுந்தன்னூர்க்கு மேவியேகுசேலர்
போகபாக்கியத்தைப் புகழுடன்பெற்று
பேராகமாய்ப்பலநா ளுவந்துவாழ்ந்தனரே

ஒழுகூரிலெழுந்தருளியிருக்கும்
மாகம்பிள்ளையார் வருகிற - விருத்தம்.

மகியணிசண்டயோன்றந்த வளமிகுதனயனானோன் ... *
பதிபுகழ்மேருகன்னிற் பாரதமெழுதும்வல்லோன் ... *
சதிருடனன்பர்போற்றுந் தயாநிதியானமூர்த்தி ... *
துதிமாகம்பிள்ளையார்தான் துலங்கிடுஞ்சபைவந்தாரே ... *

வசனம்.

இக்கோலம்படியென்றால் ஒழுகூர்க்கிராமத்தில் வீற்றிருக்கின்ற மாகம் பிள்ளையார் இந்தசபையில் வருகிறவிதங்காண்க.

மாகம்பிள்ளையார்வருகிறதரு.

இராகம் - கலியாணி - தாளம் - ரூபகம்.

மாகம்பிள்ளையாரிதோவந்தார் - வந்தாரிதோ
மாகம்பிள்ளையா ரிதோவந்தார்
நாகநீசனா லாஜாதா ஆகா
யோகவொழுகூரி லுற்றிடுஞ் சீலர்
மாகனைபசொல் வல்லமைநாயகர்
சாதாப்புவிபோற்றுந் தக்கவிநாயகர் (மாகம்)

ஆதியம்பிகையின்குமாரர் அன்பர்க்
காதாரமாம் மூலாதாரர்
தீதில்லாப்பிரணவாகாரர் - நல்ல
திவ்யவொற்றைக்கொம்பு வீரர்
வேதங்களுன்கும் விருப்புடனேபோற்ற
மாதவர்பற்பலர் மலர்கள்வாரித்தூற்ற.
பாதககஜமுகன் பதைக்கவேவாட்டிய
நாதனவ்வைக்கு நற்கதிகாட்டிய
துய்யனங்குச - கையன்மகிமைசேர்
அய்யனளவிலா - மெய்யனம்பியு
அன்பர்கள்வேலையை யனுதினமுடிப்பவர்
வம்பர்கள்காரிய - முடிக்காமல்கெடுப்பவர் (மாகம்)

தபோதனரூரிலெழுந்தருளியிருக்கும், ஸ்ரீகுசேலர் வருகிற விருத்தம்.

திருவளர்மார்பன்பாதஞ் சிந்தனைசெய்யுமன்பர் *
அருமையாம்ஞானநூல்களனைத்தையுந்தெரிந்தசீலர் *
பெருமைவேதியர்குலத்திற் பிறந்திடும்மகிமையுள்ளோர் *
குருமுகமறைகளாய்ந்த குசேலர்தாம்வருகின்றாரே. *

வசனம்.

தபோதனரூரி லெழுந்தருளியிருக்கின்ற ஞானசிரோமணியாய் விளங்குகிறவரும், ஸ்ரீகிருஷ்ணபகவானை யெப்போதும் தமதுமனத்தில் துதித்துவரும் படியானவருமாகிய குசேலமுனிவர் வருகிறவிதங் காண்க.

குசேலர்வருகிற தரு.

இராகம் - பந்துவராளி. தாளம் - ஆதி.

குசேலமுனிவர்வந்தார் - ஞானவித்தாகும்
குசேலமுனிவர்வந்தார்
திசைகளெட்டிலுமுள்ள - அசேஷஜனங்களிவர்
சேவைசெய்தால்தங்கள் - பாவம்போமேபறந்து (குசேல)
வேதம்நான்கையுங்கற்றோர் - மாயையைநீக்கி
விளங்குந்திடத்தைப்பெற்றோர்
பூததயையுள்ள மாதவரிவரைப்போல்
பூவுலகிலுண்டென்று நாவால்சொல்லப்போமோ (குசேல)

ஸ்ரீபதியைப்பாடுவார் நல்லோர்களைச்
சேர்ந்தானந்தக்கூத்தாடுவார்
சாபானுக்ரகம்பெற்றோர் ஆபாசவாசையற்றோர்
ஸாரமாய்க்கண்ணனோ டோர்பள்ளியில்வாசித்த (குசேல)
நாள்பலகண்டகந்தையோர் - மிகுதரித்ரம்
நண்ணியுந்துன்பமில்சிந்தையோர்
வேளைப்போலிருபத்தேழு - காளையரைப்பெற்றோர்
மேவுமருந்ததிநேர் - தேவிதன்னையுற்றோர் (குசேல)
ஐம்புலசேஷ்டையறுத்து - உலகவாழ்க்கை
அநித்தியமென்றுவெறுத்து
தம்புருதனைமீட்டித் தருப்பைமோதிரமிட்டு
எம்பெருமான்றனை யிருதயத்திற்சேர்த்திருத்தி (குசேல)

ஸ்ரீகுசேலர் போற்றி விருத்தம்.

எண்சீர் - விருத்தம்.

அகிலாண்டகோடிகளை வயிற்றொடுக்கி ... ... *
யாலிலைமேல்யோக நித்திரைசெய்மூர்த்தி ... ... *
மிகுதுயரோடலைந்து கஜமாதியென்று ... ... *
விளம்பியதக்ஷணம் வந்தாண்டருள்பிரானே ... ... *
அக்ருருக் தாஸானுதாஸராகி ... ... *
யவரவர்கேட்கும் வரத்தையளிக்குந்தேவே ... *
நிகரில்லாவெள்ளினுளெண் ணெயைப்போலெங்கும் ... *
நிறைந்தொளிரும்பரம் பொருளே நின்றாள்போற்றி. ... *

வசனம்.

யுகாந்தகாலத்தில் அகிலாண்டகோடிகளையெல்லாம் வயிற்றிலடக்கிக் கொண்டு ஆலிலையின்மேல் யோகநித்திரைசெய்தருளும் மூர்த்தியே, கஜேந்திரனைவன் முதலையினால் பிடிபட்டு ஆதிமூலமேயென்று முறையிட்டபோது வந்து அன்றக்காத்த எம்பெருமானே, தநேகத்யானமாய்த் துதிக்கும்படியாகிய தாஸர்கள் இச்சிக்கும்வரங்களை யனுக்ரகிக்கும் தேவனே, எள்ளினிலிருக்கு மெண்ணெயைப்போல எல்லாவஸ்துவிலும் நிறைந்துபிரகாசிக்கும்படியாகிய பரம்பொருளே, போற்றிபோற்றி, ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர் பிக்ஷைக்கு வருகிற தரு.

இராகம் - எதுகுலகாம்போதி - தாளம் - ஆதி.

தாமோதரா முகுந்தா தாசனையாளாய்வை தந்தா (தா
அநித்தியமானகாயம் அழியாதென்பதன்யாயம் (தா
மண்பெண்பொன்னாசையில்லோர் மகிமைதங்கியநல்லோர் (தா
நாராயணாபரந்தாமா நரஹரிரூபாரகுராமா (தா
அன்பாய்ப்பிக்ஷைபோடுங்கள் அறத்தைநீங்கள்தேடுங்கள் (தா
ஐம்புலத்தாசைபோக்கி ஆணவங்களைநீக்கி (தா
பெருத்ததயாநிதியே பெருமைலக்ஷ்மீபதியே (தா
சஞ்சலங்களைப்போக்கித் தன்னியனாகவாக்கி (தா
பலதிபிக்ஷாந்தேகி பாத்ரம்பார்த்திடுவார்யோகி (தா

ஸ்ரீகுசேலர்மனைவியாகிய சுசீலைவருகிற

விருத்தம்.

வாங்கருங்குசேலர்முன்னாள் மகிழ்வுடன்செய்தநல்ல ...
பெருந்தவத்தாற்கிடைத்த பேர்பெற்றகற்புமிக்காள் ...
பரந்தசீரழகுபெற்ற பாவையர்க்கரசியான ... ...
அருந்ததிநேர்சுசீலை யம்மன்றான்வருகின்றாளே ... ...

வசனம்.

அகோர்தேப்படியென்றால் மகாபதிவிரதா சிரோமணியாகியும் ஸ்ரீகுசேலருடைய மனத்திற்கிசைந்த மனைவியுமாகிய சுசீலையம்மன் இதோ சபையில்வருகிறவிதங்காண்க.

சுசீலை - வருகிற - தரு.

இராகம் - மத்தியமாவதி - தாளம் - சாப்பு.

மாதுசுசீலையம்மன்வந்தாள் - குசேலர்தேவி
மாதுசுசீலையம்மன்வந்தாள்

ஸாதுவானகுண - மாதுஇவளைப்போல
பூதலந்தனிலெப் போதுங்கண்டதில்லை (மாது)

புருஷனைக்கினைதல்லாள் - என்னசரித்திரம்
பொருந்திடுமனதில் சஞ்சலங்கொள்ளாள்
கருணாநிதிமுகுந்தன் திருவடியைத்துதிப்போள்
அரியபுகழைப்பெற்ற அரிவையர்கள்மாணிக்கம் (மாது)

அன்னத்தைப்போன்ற நல்லநடையாள் - சீலத்தைப்பெற்ற
தன்னிகரில்லாக்கற்பை யுடையாள்
சொர்ணக்கிளியைப்போலத் துன்னிடும்வாக்கினள்
கன்னியர்களுள்ளே கனத்தசிரோமணி (மாது)

இருபத்தேழுபிள்ளைகள் பெற்றாள் - இல்லறதர்மம்
என்னும்நடாத்துஞ்சிந்தை யுள்ளாள்
பெருந்தமுனிவர்பதங் கருத்தினிலெப்போதும்
இருத்தித்துதிப்பான்பொல்லாத் தரித்திரத்தைப்பெற்ற. (மா)

சுசீலை ஸ்ரீகுசேலருக்குப் போற்றி

விருத்தம்.

தாமரையிலையின்மீது தளம்பிடும்நீரைப்போலப் ... ... *
பூமியில்குடும்பவாழ்க்கை பொருந்தியும்பற்றில்லாதோய் ... *
சேமமாம்ஞானநூல்கள் நிலைதனையறிந்தவென்றன் ... ... *
ஸாமியேயுன்றன்பாதஞ் சந்ததம்போற்றிபோற்றி ... ... *

வசனம்.

சரணஞ் சரணம்ஸ்வாமி யென்பிராணநாதா.

ஸ்ரீகுசேலர் வாழ்த்து

விருத்தம்.

இப்புவிதன்னிலென்று மிணையில்லாவில்லறத்தைத் ... *
தப்பின்மைநடாத்திக் தக்கோர்புகழைக்கொண்டோய் .. *
ஒப்பிலாக்கற்புக்கெல்லா மோரிருப்பிடமாய்வந்த ... ... *
செப்புமென்மனத்திற்கொத்த தேவியேவாழிவாழி ... ... *

வசனம்.

மஹாபதிவிரதா சிரோமணியாய் விளங்கும் எனதுநாயகியேவாழிவாழி.

சுசீலைசொல்லுகிற - தரு

இராகம் - மத்தியமாவதி - அடதாளசாப்பு.

புருஷரே தெய்வம் - அடியாட்கு
புருஷரே தெய்வம்

அரியமகிமைமாயிவர் திருவடிகளையென்றும்
சிரசில்வைத்தேனினி வருமோவேறேஜன்மம் (புரு)

அடித்தாலுமென்றனை யனைத்தாலுமிவர்பாரம்
மடித்தனைத்தாலெதிர்த்தால் வருமேநரககோரம் (புரு)
சீலமுடையஞானச் செல்வங்கைக்கொண்டவர்
காலாலிட்டவேலையைக் கையாற்செய்வேனென்றும். (புரு)
பண்ணுடைப்புருஷனைப் பழித்தமங்கையர்பல
புண்ணியங்கள்செய்தாலும் போமேகாற்பில்பஞ்சாய் (புரு)
வைதாலுமோநாளும் வாழ்க்கினுஞ்செய்யாது
செய்தாலுமோஎப்போதுஞ் சிந்தைமகிழவேண்டும் (புரு)
நாயகர்க்குப்பூசை நன்குசெய்யுமஸ்திரீகள்
கோயிற்சென்றுஸ்வாமியைக் கும்பிடவேண்டாமே (புரு)

சுசீலையுடன் பிள்ளைகள் - உ௭- பெயரும் வந்து

புலம்புகிற தரு

இராகம் - முகாரி - அடதாளசாப்பு.

தொப்பைப்பசிக்கிற தாய்பிற்பாச்சியைக்குத்தி
துரிதமாய்ப்போடுவாயன்னையே - உண்டு
இப்பொழுதேபோக வேண்டுமென்றேழுர்காத்
திருக்கிறார்விளையாட வன்னையே
அண்டைவீட்டுப்பையன் போட்டிருக்கின்றமோன்
னாளுநானேப்பார்த்தாயாவன்னையே - அதுபோல்
எண்டிசையும்புகழ் தசஷணமேசெய்வித்
திடுப்பிற்கட்டிமகிழ்வா யன்னையே
நவரத்தினமிழைத்த குண்டலங்காகடுக்கன்
நற்செவிகளிற்பூட்டாயன்னையே - நாலு
சவரன்களைபுருக்கிப் பொன்காப்படித்தென்கை
தன்னிற்போடாமல்விட்ட னன்னையே
பத்துவராகன்பெற்ற பட்டஞ்சுவேஷ்டியும்
பளபளப்பாச்சொக்காயுமன்னையே - வேண்டும்
உத்தமச்சாதிமுத் தாரத்தோடுபதக்கம்
உயர்பாஜிபந்துமவேண்டு மன்னையே
அதிரசமவடைதோசை யன்னமுடனேசெய்
அழகானபாயஸமன்னையே - நல்ல
சதிர்பெறுங்கோதுமை யப்பிச்சிகளுஞ்செய்து
ஸாதிக்காதிருப்பதே னன்னையே

ஆயிரம்பொத்தலுள்ள வவலகூஷணங்கொண்ட
அழுக்காமிக்கந்தையைப்பாரன்னையே - இதை
நேயமாயொருவர்மேற் போட்டிருப்பதிலும்
நெருப்பிற்போட்டால்நன்மை யன்னையே
எங்களுக்காய்க்கஷ்ட மெத்தனைநாள்பட்டோ
விக்கப்பறைதேடினாயன்னையே - நல்ல
இங்கிதமாய்வெள்ளிக் கிண்ணிபோட்டாலுனக்
கென்னகுறைந்துபோ மன்னையே
இரக்கப்போனாலுமொருவர் பரக்கப்போகவேண்டு
மென்னும்வார்த்தையோசித் தன்னையே - இப்போ
சிறககச்சோமன்களை வாங்கியுடுத்தப்போதென்
முறுக்கைக்கொஞ்சம்நீபா ரன்னையே
ஜாணடிபிண்டிலோ மூரடிகட்டாவென்று
சாற்றுவார்தெலுங்கானன்னையே - அதுபோல்
நாணயமில்லாவிந்தச் சிறுபொத்தற்குடிசைக்குள்
நாங்களெவ்விதமிருப்போ மன்னையே
அஞ்சாறுதினத்திற்கோர் தட்வைகஞ்சிகாட்டினால்
ஆருயிர்நிற்குமோவன்னையே - கண்கள்
பஞ்சடைந்திருள்மூடிக் காலனுனைக்கிட்டி
பார்க்கிறதென்செய்வே னன்னையே.

சுசீலைசொல் - விருத்தம்.

தனத்தினைமிகவும்பெற்றோர் தனயர்களடையவேண்டி ... *
மனத்துயரோடநேக மாதவஞ்செய்துமில்லை ... *
தனத்தவோரிருபத்தேழு காண்முளையனையெனக்கேன் ... *
ஜனித்திடவிதித்திட்டானோ சதுரானனகிலேனை ... *

வசனம்.

ஸம்பத்தை யடைந்தவர்கள் ஓர் பிள்ளைவேண்டுமென்று எவ்வளவு தவஞ் செய்தாலு முண்டாகிறதில்லை, மஹாதரித்திரத்தில் வருத்தப்படும்படியாய் எனக்கு இந்த -உ௭-பிள்ளைகளை அந்தப் பிரமதேவன் ஏன் கொடுத்தானோ தெய்வமே.

சுசீலைசொல் - விருத்தம்.

சம்பத்தையடைந்தோருக்கே தனயர்களிருக்கவேண்டும் ... *
வெம்பசிதன்னுடனே மெலிந்திடுமெனக்கோவிந்தக் ... *
கும்பலாமைந்தர்தமமைக் கொடுத்துச்சஞ்சலப்படுத்தும் ... *
எம்பெருமான்றன்கூத்தை யென்னென்றுசொல்லலாமே ... *

வசனம்.

பாக்கியத்தை யடைந்தவர்களுக்கே பிள்ளைகளிருக்கவேண்டியது, ரம்ப வும் பசியினால் வருத்தப்படும் இந்தச்சுத்த வேளைமக்கு அநேகம் பிள்ளைகளைக் கொடுத்துச் சஞ்சலப் படுத்தும்படியாகிய எம்பெருமானது திருவிளையாட்டை என்னவென்று சொல்லப்போகிறேன்,

சுசீலைபுலம்புகிற தரு

இராகம் - நீலாம்பரி - தாளம் - ரூபகம்.

என்னசொல்வே னிச்சிசுக்கள்
எனைப்படுத்தும்பாட்டினை (என்ன)
அன்னியவீட்டுச்சிறுவ ரன்பாயுண்பதைக்கண்டு (என்ன)
கையிலிலோர்காசுமில்லை கடன்கொடுப்பார்யாருமில்லை
அய்யயோவிதையபியா தழுகின்றார்களேவெகுவாய் (என்ன)
பட்டுத்தலைக்குட்டைகளும் பசந்தாய்ச்சொக்காய்களும்மை
குட்டைகளுஞ்சரிகைசோமனுங் கொண்டுவாவென்றழுகிறாரே
கட்டினமேல்மெத்தையைப்பரப்பிக் கனத்ததலைக்காணிபோட்டுப்
பொட்டெனத்தந்திடுவென்று புலம்புகின்றார்பலவிதமாய் (என்ன)
நாலுவிதக்கறியமுதும் நற்றயிர்நெய்யோடன்னம்
சாலவும்வேண்டுமாமெந்த ஜன்மத்திலதுகிடைக்கும் (என்ன)
சிறுவர்களையளித்ததெய்வம்செல்வத்தைக்கொடுத்திடாமல்
வறுமைதந்துசோதித்தால் மானிடர்கள்செய்வதென்ன (என்ன)
என்னைப்போலச்சிறுவர்களை இன்புடன்பெற்றபேசெல்லாம்
நினைக்கரியதரித்திரத்தில் நிலைத்தவரார்கொஞ்சம்புண்ணாய் (என்ன)
உள்ளவர்க்குழகைகளுண்டு ஓடியதைப்பார்த்துவந்து
துள்ளியழுகின்றதுகள் சொன்னாலுந்தெரியாது (என்ன)
சிறுபிள்ளைபயமறியா தென்றிடும்வாக்கியம்கண்டேன்
தறையிலென்னைப்போலிந்தச் சஞ்சலப்படுவாருமுண்டோ (என்ன)

சுசீலைசொல் விருத்தம்.

குழந்தைகள்கண்ணீரோடுங் கோவென்றுவாய்திறந்து ... *
அழுதபோதிலுங்கசிந்திட் டிறைவனேவேனுமென்றன் ... *
கொழுநனார்பக்ஷம்வைத்துக் கூப்பிட்டுச்சாந்தஞ்செய்து ... *
பழுதறச்சீராட்டாமற் பாராமுகஞ்செய்கின்றாரே ... *

வசனம்.

அய்யய்யோ தெய்வமே குழந்தைகள் தாரைதாரையாகக் கண்ணிலேஜலம் பெருகி ஓவென்றழுதபோதிலும் என்கணவனானவர் கொஞ்சமாகிலும் இதுகள் மேல் பக்ஷம்வைத்துக் கிட்டக்கூப்பிட்டுச் சாந்தப்படுத்தாமல் பராமுகமாயிருக் கின்றார் இதற்கென்னசெய்வேன் கடவுளே.

சுசீலைசொல் - விருத்தம்

பிள்ளையார்பெண்யார்நாம்யார் பேருலகத்திலென்று ... ... *
கள்ளமதறவுணர்ந்த கணவனார்குடும்பத்தின்மேல் ... ... *
எள்ளளவேனுஞ்சிந்தை யின்றிதுடன்வையாரிந்தச் ... ... *
சள்ளையையகந்தனுலுஞ் சாற்றிடமுடிந்திடாதே ... ... *

வசனம்.

உலகத்தில் பிள்ளையார் பெண்யார் நீயார் நான்யார் என்று மஹா வேதாந் தமாயிருக்கும் என்புருஷரானவர் இந்தக்குடும்பத்தை ரக்ஷிக்கக் கொஞ்சமும் கருத்துவைக்காமலிருக்கின்ற இந்தவருத்தத்தை ஆதிசேஷனாலுஞ் சொல்லி முடிவுபெறாது தெய்வமே.

சுசீலை தன்பிள்ளைகளுக்குச் சொல்லுகிற

விருத்தம்.

வட்டமாகிலதோரென்றன் மைந்தர்காள்கிட்டாதாயின் ... *
வெட்டெனமறவென்றிங்கு விளம்புறுமொழிநினைத்து ... *
மட்டில்லாப்பிடிவாதத்தில் மனத்தினைச்செலுத்தாதீர்கள்... *
கட்டியேயணைத்தோர்முத்தங் களிப்புடன்றருகின்றேனே... *

வசனம்.

அய்யய்யோ என்னருமையாகிய பிள்ளைகளே - பூலோகத்திலே தனக்குக் கிட்டாத வொருபொருளைச் சீக்கிரத்திலேமறந்துவிடு என்று உலகத்தார் வழ ங்குகிறவாக்கியத்தையுங்கள் மனதில் நினைத்துக்கொண்டு இல்லாதவொருபொ ருளைக் கொண்டுவாவென்று சொல்லும் இந்த முரட்டுப் பிடிவாதத்தை விட்டு விடுவீர்கள் இதோ உங்களைக்கட்டியணைத்து முத்தங் கொடுக்கிறேனப்பன் மாரே.

பிள்ளைகள் - சுசீலைக்குச்சொல் -

விருத்தம்.

அன்னையேமூலைவீட்டி லடக்கமாயொளித்திருக்கும் ... *
உன்னதபதார்த்தமெங்க ளொருவர்க்குந்தெரியாதல்ல ... *
பன்னருமுத்தமிட்டுப் பரபரப்புடனேமாற்ற ... ... *
என்னென்னமயக்கினாலு மிதற்குடன்படமாட்டோமே ... *

வசனம்.

ஆம் நாங்களிப்போது சொல்வதைக்கேளும் தாயே, நீ எங்கள்கண்ணில் காட்டாமல் மூலைவீட்டில் ஒளித்துவைத்திருக்கிற அநேகவித பதார்த்தங்கள் எங்களுக்கு நன்றாய்த்தெரியும் ஆகையாலிப்போது எங்களைமுத்தமிட்டு நாங்கள் கேட்பதை மறந்துவிட எவ்வளவு நீர் எங்களை பரபரப்பாகவுமாற்றினபோதி லும் நாங்களந்தவுமாற்றலுக்கு உட்படமாட்டோமெங்கள் தாயே.

சுசீலைசொல் - விருத்தம்.

விகியினாலமைந்தபொல்லா விபரீததரித்திரத்தை ... ... *
இதயத்திலறிந்துகொள்ளா ரிந்தப்பிள்ளைகள்தானய்யோ ... *
அதிதிகள்பாலர்மன்ன ரழகியபெண்களானோர் ... ... *
கிதமுமேயொருவர்சக்தி நெஞ்சத்திலுணர்வதுண்டோ ... *

வசனம்.

நான் முற்காலத்தில் செய்த வினைக்குத் தக்கபடி இப்போது அனுபவிக் கும் இந்தப்பொல்லாத தரித்திரத்தை என்னுடைய -உஎ- பிள்ளைகளும் கொஞ் சமாவது தங்கள்மனத்தில் அறிந்துகொள்ளவில்லை, அதிதிகளும் குழந்தைக ளும் ராஜாக்களும் பெண்களும் ஒருவருடைய சக்தியைக்கண்டறியமாட்டார் கள்தெய்வமே.

சுசீலைசொல் - தேவாரம்.

அமரர்கள்போற்றுமெங்க ளாதியாகியமுகுந்தா ... ... *
கமலைவாழ்மார்பாநல்ல கருணையங்கடலேசோதி ... ... *
சமமில்லாவழகைப்பெற்ற தனையர்களிப்பிடிவாதத்தை ... *
அமைத்தென்னைவருத்திவைத்த லய்யனேயடுத்திடாதே ...*

வசனம்,

தேவர்களெல்லாம் வணங்கத்தக்கஆதியாகிய முகுந்தனே, லக்ஷ்மீபிராட்டி வாழ்கின்றமார்பையுடையவனே, கருணாஸமுத்திரமே, சோதியே, அழகியஇந்த க்குழந்தைகளுக்கு நானெவ்வளவு சொன்னபோதிலும் அதைக்கேட்காதஇந்தப் பிடிவாதத்தை இதுகளுக்குண்டுபண்ணி என்னை வருத்திவைக்கிறது உமக்கழெக்கு மாதெய்வமே.

சுசீலை புலம்புகிற தரு

இராகம் - புன்னாகவராளி - தாளம் - சாப்பு.

என்னசொன்னபோதிலு மிச்சிறுவர்கேட்பதில்லை
தெய்வமே - ஓகோ தெய்வமே
பன்னருமென்னைப்போல்துன்பம் பாரிலடைந்தோரில்லை
தெய்வமே - ஓகோ தெய்வமே

தமக்குந்தெரியாதொருவர் சாற்றிலுங்கேளாரெனுஞ்சொல்
தெய்வமே - ஓகோ தெய்வமே
ஏமக்குத்தானுண்டானதோ வென்றேயோசிக்கின்றேன்
தெய்வமே - ஓகோ தெய்வமே
குழந்தைகள்வயிற்றுக்கில்லாக் கொடுமையாலிளைத்துப்போச்சே
தெய்வமே - ஓகோ தெய்வமே
செழும்மறையோருக்கிந்தச் சிந்தனைகொஞ்சமுமில்லை
தெய்வமே - ஓகோ தெய்வமே
மாதவர்மைந்தர்கள்பேரில் வாஞ்சையில்லாதிருப்பதால்
தெய்வமே - ஓகோ தெய்வமே
எதுவுமவரிடத்தி லெட்டிப்பார்க்கிறதில்லை
தெய்வமே - ஓகோ தெய்வமே
குழந்தைகளுந்தெய்வமுங் கொண்டாடினோரிடத்தில்
தெய்வமே - ஓகோ தெய்வமே
அழகாயிருக்குமென்பா ரதைநான்கண்டுகொண்டேன்
தெய்வமே - ஓகோ தெய்வமே
பத்துமாதஞ்சுமந்து பரிவுடன்பெற்றவயிறு
தெய்வமே - ஓகோ தெய்வமே
பற்றுகின்றதுசிசுக்கள் பட்டினியிருப்பதினால்
தெய்வமே - ஓகோ தெய்வமே
வருத்தமிகவுண்டாக்கி மனத்தைப்புண்ணாக்குமிந்த
தெய்வமே - ஓகோ தெய்வமே
தரித்திரத்தைப்பார்க்கிலுஞ் சண்டாளம்வேறொன்றுண்டோ
தெய்வமே - ஓகோ தெய்வமே
அணுவளவுங்குடும்ப மாதரிக்கவேண்டுமென்று
தெய்வமே - ஓகோ தெய்வமே
கணவனானவர்க்கோ கருத்தில்லையென்னசெய்வேன்
தெய்வமே - ஓகோ தெய்வமே *

பொது - விருத்தம்.

புருஷரேதெய்வமன்னோர் புகலுமாக்கினைக்குவேறு... ... *
உரைத்திடலாகாதென்றே யுணர்ந்தவுத்தமியானாலும்... ... *
பெருத்தவோரிருபத்தேழு பிள்ளைகள்படுத்திவைக்கும்... *
வருத்தத்தாற்சமயம்பார்த்து மாதவருடன்சொல்வாளே ... *

வசனம்.

அதெப்படியென்றால், புருஷரே தெய்வம் அவர்சொல்லும் உத்தரவுக்கு ஒருக்காலத்திலும் எதிர்வார்த்தைச்சொல்லக்கூடாதென்று நன்றாய்த்தெரிந்த பதிவிரதாசிரோமணியா யிருந்தபோதிலும் தானன்புடன் பெற்றெடுத்த ௨௭ - பிள்ளைகள் தன்னை நித்தியமும் செய்துவருகிற தொந்தரையைச் சகிக்கமாட்டாமல் ஒருநாள் சமயம்பார்த்து ஸ்ரீகுசேலமுனிவருடன் அவர் மனைவியாகிய சுசீலையம்மன் சொல்லுகிறவிதங்காண்க.

சுசீலை ஸ்ரீகுசேலருக்குச்சொல் விருத்தம்.

அருமைமாதவஞ்செய்தென்று மழிந்திடாஞானம்பெற்ற... *
பெருமைசேர்என்மனாளா பிரமத்தினிலையைக்கண்டோய்... *
திருஸமுகத்திற்பேதை செப்பிடும்விண்ணப்பத்தை... ... *
கருத்துடன்கேட்கவுன்றன் கழலிணைபோற்றிபோற்றி ... *

வசனம்.

மஹாதவத்தைச்செய்து ஞானத்தைப்பெற்றிருக்கும் என்பர்த்தாவே, தேவரீருடைய ஸமுகத்திலிந்தப்பேதையாகிய யான் சொல்லிக்கொள்ளும் விண்ணப்பத்தைக் கிருபையுடன் கேட்டருள இரண்டுபாதாரவிந்தங்களையும் இதோமிகவும் வணங்கினேன்ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர் சுசீலைக்குச் சொல்லுகிற

எண்சீர் - விருத்தம்.

பதிவிரதாதருமத்தை யுலகிலுள்ள ... ... *
பாவையர்கள்கண்டறிய நடாத்துந்தேனே ... ... *
அதிசுகுணமுடையவளே பூமியைப்போல் ... ... *
அமைந்தபெரும்பொறுமை வகித்தவளேயென்றன் ... *
எதிர்நின்றுநீயிதுவரைக்கு மொன்றை ... ... *
இயம்பினதேயில்லை யப்படியிருக்க ... ... *
எதுவோவோர் விண்ணப்பஞ்செய்வேனென்று ... ... *
யென்னமோவதையிப்போ வெளியிடாயே ... ... *

வசனம்.

உலகத்திலுள்ள ஸ்திரீகள் பதிவிரதாதருமத்தை இன்னதென்றுகண்டறியும்படியாக நடத்திவரும் பெண்ணே, பூமிதேவியையொத்த பொறுமையுள்ளவளே நீ யென்னுத்தரவில்லாமல் இதுவரைக்கும் என்முன் வாயைத்திறந்ததேயில்லை அப்படியிருக்க இன்றையதினம் என்னிடத்திலெதுவோ ஓர்விண்ணப்பஞ் செய்வேனென்றாய் அதென்னசங்கதி இப்போதேசொல்ல உத்திரவு இதோ செய்தேன் என்றனையே.

சுசீலை சொல் விருத்தம்.

பன்னருந்தரித்திரத்தைப் பாலர்கள்சகித்திடாமல் ... ... *
அன்னமோதுணியோநல்ல வணிநகையோவென்று ... ... *
என்னையேமிகவருத்து மிச்சஞ்சலத்தைநீக்க ... ... *
உன்னுமோருபாயமொன்றை யுவப்புடன்யோசிப்பீரே ... *

வசனம்.

ஞானஸ்வரூபராகிய எனதுப்பிராணநாதரே இந்தப்பொல்லாத தரித்திரத்தை நமதுகுழந்தைகள் சகிக்காமல் அன்னமோ துணியோ நகையோவென்று என்னை நிரம்பவும் வருத்துகின்றார்கள். இந்தச் சஞ்சலத்தை நீக்கத்தகுந்த உபாயஞ்செய்வீரென்பர்த்தாவே.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

இல்லாமைத்தனத்தைநீக்க வின்றுயோசிப்பீரென்று ... *
சொல்லியமாதேயுன்றன் ஸூக்ஷ்மபுத்தியையென்சொல்வேன்
எல்லவர்முன்னாட்செய்த வினையிற்புண்ணியத்திற்கேற்க *
நல்லதோர்சுகதுக்கங்கள் நண்ணிடுமறிந்திடாயே... ... *

வசனம்.

நமதுதரித்திரத்தைநீக்க இன்றுயோசிப்பீரென்று சொல்லியமாதே, உன்னுடைய நுட்பமாகியபுத்தியை நானென்ன சொல்வேன்? அவரவர்கள் முன்ஜன்மத்திற்செய்த புண்ணியபாவங்களுக்குத் தக்கபடி இப்போது சுகமுந்துக்கமுமனுபவிக்கவேண்டும். இதையறிந்து கொள்வாயென்றனையே.

சுசீலைசொல் - விருத்தம்.

உதரபோஷணையில்லாம லுடல்மிகவிளைத்துநல்ல ... ... *
வதனத்தினழகுமாறி வாடிடுஞ்சிறுவர்தம்மை ... *
இதயத்திற்கருணைகூர்ந்தே யின்றுற்றுப்பார்ப்பீராகில் ... *
அதிதவத்திரும்சிந்தை யனலிடுமெழுகாகும்மே ... ... *

வசனம்.

வயிற்றுக்குச்சோறில்லாமல் சரீரம் நிரம்பவுமிளைத்து முகங்களிலுள்ள அழகுமாறிப்பட்டு வருந்தும்படியாகிய இந்தப்பிள்ளைகளைக் கருணையோடும் உற்றுப்பார்ப்பீரானால் தேவரீருடையமனது நெருப்பிலிட்டமெழுகைப்போல உருகிப்போம் எனதுப்பிராணநாதரே.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

பதியினிற்பிறக்கும்போது பரமேஷ்டியெழுதிவிட்ட
விதியினவ்வளவேயன்றி வேறொன்றையடையவேண்டி
அதிப்ரயாசப்பட்டு மாவதேள்ளளவுமில்லை
புதுமையாற்றினிற்கரைத்த புளிதனைப்போலவீணே

வசனம்.

நான்சொல்வதைக்கேளாய் என்ப்ராணநாயகியே, பூலோகத்தில் பிறக்கும்போது நமத்தலையில் பிரமதேவனெழுதிய எழுத்தைப்போல நடக்குமேயல்லாமல், இப்போது அதிகமாய்வேண்டுமென்று எவ்வளவு ப்ரயாசப்பட்டபோதிலும் எள்ளளவுகூட சித்திக்காது. அதுவுமல்லாமல் நாம்பட்ட கஷ்டமெல்லாம் ஆற்றினில்கரைத்த புளியைப்போல் வீணாகப்போய்விடும் பெண்ணே.

ஸ்ரீகுசேலருக்கும் - சுசீலைக்கும் - நடக்கிற - தர்க்கம்.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - ஜம்பை.

சுசீலை.

என்னசொல்வேனிச்சிறுவ ரென்னைநித்தியம்படுத்திவைக்கும்
பன்னரியபாடுகளைப் பலர்புகழுமென்பதியே

குசேலர்.

உனக்கென்னவருத்தத்தை யுண்டுபண்ணுகின்றார்கள்
மனக்கவலைநீங்கியதை வழுத்திடுவாய்பெண்ணே

சுசீலை.

பலவிதமாகியநகையும் பட்டுஞ்சுவேஷ்டிகளும்
விலையுள்ளமோதிரமும் வேண்டுமாம்பதியே

குசேலர்.

நகைகள்நம்மூதாதை நாளிலும்போட்டதில்லை
பகரும்பட்டுச்சோமன்களைப் பார்த்ததில்லைபெண்ணே

சுசீலை.

அக்கம்பக்கச்சிறுவர்பல ரன்பாயுண்பதைக்கண்டு
மக்குவமாயதைப்போலப் படையென்றார்பதியே

குசேலர்.

அவரவர்களும்வினையி னவ்வளவேபுசிப்புக்கிட்டும்
புவியிலதிகமாய்வந்து பொருந்துமோபெண்ணே

சுசீலை.

துய்யனேயென்னுயிர்போலத் தோன்றும்ஞானமாமணியே
வையகத்தில்தரித்திரத்தை மாற்றுவிப்பீர்பதியே

குசேலர்.

மாற்றுதற்குங்கொடுப்பதற்கு மகிமைமனிதருக்குண்டோ
சாற்றரியபதிவிரதத் தன்மையுள்ளபெண்ணே

சுசீலை.

மிகவுமேமுயற்சிசெய்வோர் மேதினியிலெந்நாளும்
இகழ்ச்சியடையாரெனுஞ்சொல் இருக்கிறதென்பதியே

குசேலர்.

எதுவுந்தெய்வபலமிருந்தால் கூடுமன்றிமாந்தர்
அதிமுயற்சிசெய்தாலு மமையாதுபெண்ணே

சுசீலை.

கொடுக்கவேண்டுந்தெய்வமென்று கோரிப்பின்வாங்காமல்
இடத்தகருமஞ்செய்தால் சித்திக்கும்பதியே

குசேலர்.

என்றும்நாம்தலைகீழா யெவ்வளவுமுயன்றாலும்
அன்றெழுதுந்தலையெழுத்தை யழித்தெழுதான்பெண்ணே

சுசீலை.

தனயர்களும்யானும்பசி தாகத்தால்வருந்தாமல்
கனிவுடன்காக்கவுன்றன் கடனாகும்பதியே

குசேலர்.

உன்னையுஞ்சுதர்களையு முலகத்தில்ரக்ஷிப்பான்
பன்னகத்தின்மேல்மகிழ்ந்து பள்ளிகொள்வோன்பெண்ணே

சுசீலை.

காட்டுமேதெய்வமன்றிக் காட்டினதைவலியநமக்
கூட்டுமோதிரிகால முணர்ந்தவென்பதியே

குசேலர்.

காட்டுந்தெய்வமதைநமக்குக் கருணையுடன்கொண்டுவந்து
ஊட்டுமேமனோதிடத்தையுற்றிருந்தால்பெண்ணே

சுசீலை.

அன்னமில்லாமல்போனாலாகும் போமானையாம்
கன்னமாயைக்கேது குலகன்மையுந்தேய

குசேலர்.

காட்டினுமேட்டினுமுள்ள கனத்தாளனூலவ் கட்டுறும்
போட்டினாகவேயாவர் போஷிக்கிறார்பெண்ணே

சுசீலை.

தினாகடலோடியுமரிய திரவியந்தேடினும்
உனைத்திருக்கின்றனர் உயர்தருமென்பாயே

குசேலர்.

நிலைத்திருப்பொருளிருக்கும் நின்றுமசைவாக்கப்பட்டால
ஆனையுண்டவிளாங்கனிபோலழிந்துபோம்பெண்ணே

சுசீலைசொல் - விருத்தம்.

கலத்தினிலிட்டசோற்றைக் கையினாலள்ளியுண்டாலன்றி
பலத்ததன்பசிபோமன்றிப் பார்த்திருந்தாலென்றேனும் ...
நிலத்தினிலதைப்போற்காரியம் நினைத்ததை முடிக்கவேண்டி
நலத்தகுமுயற்சிசெய்யார் நாக்கதுவிலைவேறுண்டோ ...

வசனம்.

இலையில் போடப்பட்ட சாதத்தைக் கையினாலெடுத்துச் சாப்பிடாமலிருந்தால் பசிபோகுமா? அதைப்போலொரு காரியத்தை முடிக்கத்தகுந்த பிரயத்தனஞ்செய்யாத மனிதர்களுக்கு அதுநிறைவேற மாட்டாது, என்பதாகத்தான்

சுசீலைசொல்லுகிற - தரு

இராகம் - கல்யாணி - தாளம் - சாபு.

கணவரே முயற்சியாற்சுகம் பெற்றோர்
கதைசொல்வன் கேட்டருள்வீர் (கணவ)
மணவாளராகும்ஞானசி காமணி
மாதவனேயுன்றன் பாதம்போற்றிபோற்றி (கணவ)
வல்லமைமிகவுள்ள முதலை
வாயிலகப்பட்டு யானை
அல்லலடைந்துமெய் சோர்ந்துகாத்தருளென்ன
நலமுத்தகாலாண்டான் செழித்தவைகுந்தன் (கணவ)

இரணியனுக்காக முன்பு
நரசிங்கரூபமதாய் விஷ்ணு
பிரகலாதன் வேண்டுகின்றதைப்பற்றி
பிறந்தார்தூணில் சிறந்தமாதவா (கணவ)
பாஞ்சாலிவஸ்திரத்தை மிகப்
பழிபாவிதுச்சாதனன் களைய
வாஞ்சையுடனவள் கண்ணனைத்துதிக்க
வளர்த்தேயப்போ தளவில்லாத்துகில் (கணவ)
அடியார்கள்பற்பலர்கள் வேண்டும்
அரியவரங்கொடுப்பான் நெடுமால்
கடுகவேயவனைத் துதித்தோர்காரியம்
கஷ்டப்பட்டுச்செய்ய நஷ்டம்வருவிக்கான் (கணவ)

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

திருமாலைத்துதித்துச்செல்வம் சேர்ந்திடவேண்டியின்றோர் *
கருமத்தைச்செய்வாயென்று கழறியமாதேயந்தப் ... ... *
பெருமைசேருவல்தன்னைப் பிசகறவின்னதென்று ... *
தெரிவிக்கவேண்டுமிப்போ சீக்கிரமாகத்தானே ... ... *

வசனம்.

விஷ்ணுவைத் தோத்திரஞ்செய்து நாம்பாக்கியத்தை யடைவதற்கு இப்போது ஒருகாரியத்தைச் செய்யென்று சொல்லிய பெண்ணே! அந்தக்காரியம் என்னமோ அதை விவரமாய்ச் சொல்லவேண்டும் எனது நாயகியே.

சுசீலைசொல் - விருத்தம்.

கண்ணனும்நீருமொன்றாய்க் கலந்துபள்ளியில்வாசித்தீர் ... *
எண்ணருமந்தவிஷ்ட மென்றைக்குமவர்மறக்கார் ... *
கண்ணியமுடைத்வாரகாபுரத்தினிலேயிப்போ ... ... *
புண்ணியவஷ்டலக்ஷ்மீ பொருந்திவாழ்ந்திருக்கின்றாரே ... *

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியும் தேவரீரும் சிறுபருவத்திலே சாந்தீபரிடம் ஓர் பள்ளிக்கூடத்தில் கலந்து வாசித்துவந்தீர்கள். அந்தப்பாலிய இஷ்டத்தை அவர் ஒருகாலத்திலும் மறக்கமாட்டார், இப்போது அந்தமஹானுபாவர் த்வாரகாபுரத்தில் அஷ்டலக்ஷ்மீ ஸமேதராய் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என் ப்ராணநாதரே.

சுசீலைசொல் - விருத்தம்.

கிஞ்சித்துவருத்தப்பட்டுக் கிருட்டினரிடத்திற்சென்று ... *
பஞ்சத்தைநீக்காயென்று பகர்ந்திடினமதுபொல்லாச் ... *
சஞ்சலம்நீக்கிமெத்த ஸம்பதைக்கொடுப்பார்பின்பு ... *
மிஞ்சியசுகத்தோடிந்த மேதினிதனில்வாழ்வோமே ... *

வசனம்.

தேவரீர்கொஞ்சம் பிரயாசமெடுத்துக்கொண்டு கிருஷ்ணஸ்வாமி யிடத்திற்குப்போய், என்னுடைய தரித்திரத்தை நீக்குவாயென்று சொல்வீரானால் நமது பொல்லாத இந்தச்சஞ்சலம் நீங்கும்படி ரம்பவுஞ் சம்பத்தைக் கிருபைசெய்வார். அப்புறம் நாம் சுகமாய் வாழ்ந்துகொண் டிருக்கலாம் ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

கற்பகத்தருவைச்சேர்ந்தோர் காஞ்சிரங்காயைக்கேட்கும்... *
அற்பமாஞ்செய்கைபோல அச்சுதன்சமுகங்கிட்டிச் ... *
சொற்பகாலத்திற்கண்ட சொப்பனம்போலநீங்கும் ... *
உற்பாதச்செல்வந்தன்னை யொருக்காலும்வேண்டிலேனே ... *

வசனம்.

நான்சொல்வதைக் கேளாய் பெண்ணே? தெய்வலோகத்தி லிருக்கும் கற்பகவிருக்ஷத்தைச் சேர்ந்து நல்லபொருள்களைக் கேட்காமல் எட்டிக்காயைக்கேட்கும் அல்பர்களைப்போல ஸாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியைச்சேவித்து நல்லகதியை வேண்டாமல் அழிந்துபோகும் படியாகிய ஸம்பத்தை யொருகாலத்திலும் இச்சிக்கமாட்டேன் பெண்ணே.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

அமுதங்கையினிற்சித்தித்து மதையுண்டுமகிழ்ந்திடாமல் ... *
அமர்ந்திடுங்கூழ்குடிக்க ஆசைவைப்பவர்கள்போல ... *
சமயிலெம்பெருமான்றன்னைச்சார்ந்துமோக்ஷம்வேண்டாமல் *
மமதையைக்கொடுக்கத்தக்க மாநிதிவிரும்பல்மாதே ... *

வசனம்.

கேளாய்பெண்ணே? தேவாமிர்தங் கையிற்கிடைத்தும் அதைச்சாப்பிட்டுச் சந்தோஷ மடையாமல், கூழைக்குடிக்க ஆசைவைப்பவர்கள் போலாகும், யான் ஸ்வாமி ஸமுகத்தைச் சேர்ந்து மோக்ஷத்தை விரும்பாமல் அகங்காரங் கொடுக்கத்தக்க திரவியத்தை யிச்சிக்கிறது என்னையகியே.

சுசீலைசொல் - விருத்தம்

நிதியில்லாதபேரை நிலத்திலுள்ளோர்சிரிப்பார் ... ... *
மதித்திடார்மனைவிமார்கள் மக்களேளனஞ்செய்வார்கள் ... *
எதுவொன்றைச்செய்திட்டாலு மினிதுடன்முடிந்திடாது ... *
அதிதவத்தோரேசெல்வ மடைந்திடில்மிகவுநன்றே ... *

வசனம்.

நான்சொல்வதைக்கேளீர் ப்ராணநாதரே? திரவியமில்லாத மனிதர்களைப்பார்த்துப்பூமியிலுள்ளவர்களெல்லாரும் சிரிப்பார், தம்பெண்சாதிமாரும் மதிக்கமாட்டார்கள் பிள்ளைகளும்பரிகாசஞ்செய்யும், எந்தக்காரியம்செய்தாலும் முடியாது ஆகையால் ஸம்பத்தையடைந்தால் ரம்பவும் நல்லது ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

ஒழுக்கத்தைநீக்கிஞான வுணர்வினைப்போக்கிநல்லோர் ... *
பழக்கத்தைத்தவிர்த்துப்பொல்லாப் பாவங்கள்வருவிக்கின்ற *
இழுக்குடைச்செல்வம்வேண்டே னெம்பெருமானைக்கண்டு ... *
முழுகப்போய்ச்சேற்றைப்பூசு மூடருண்டோசொல்வாயே *

வசனம்.

கேளாய் பெண்ணே? ஆசாரத்தைநீக்கி ஞானத்தைப்போக்கடித்துப் பெரியோர்களுடைய சினேகத்தைத்தவிர்த்துப் பொல்லாதபாவங்களை வருவிக்கின்ற செல்வத்தை யான் எம்பெருமானைக்கண்டு ஒருகாலத்திலும் கேட்கமாட்டேன் ஸ்நானஞ்செய்யப்போய்ச் சேற்றையள்ளிப்பூசிக்கொள்ளும் மூடர்களுண்டாகாயகியே.

சுசீலைசொல் - விருத்தம்.

இல்லறமல்லதின்று மிருக்கிறதர்மமெல்லாம் ... ... *
நல்லறமல்லவென்றே நவிலுவர்பெரியோர்தாமும் ... ... *
எல்லையிலென்பொருட்டு மின்சுதர்பலர்பொருட்டும் ... *
சொல்லருஞ்செல்வந்தேடீர் துணையடிபோற்றிபோற்றி ... *

வசனம்.

இல்லறமல்லது நல்லறம்அன்றென்கிறதாய், பெரியோர்சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் தேவரீரென்பொருட்டும் இந்தப்பிள்ளைகள்பொருட்டும் கிருபைசெய்து செல்வத்தைத்தேட உம்முடையபாதாரவிந்தங்களை இதோ வணங்கினேன் என்ப்ராணநாதரே.

ஸ்ரீகுசேலர்சொல் - கொச்சகம்.

இராகம் - புன்னாகவராளி.

பன்னரியவாசைக்குப் பாழியபோயிருப்பிடமாம் ... ... *
இன்னல்தருஞ்செல்வமென்றே யிதயத்தினன்கறிந்தும் ... *
அன்னமேநல்லொழுக்க மறுவளவும்நீங்காத ... ... *
சொன்னமேயுன்னுடைய சொற்குடன்பட்டிடுவேனோ ... *

வசனம்.

நான்சொல்வதைக் கேளாய் பெண்ணே, பலவித ஆசைகளுக் கிருப்பிடமாகிய செல்வத்தை யடைகிறது சரியான தல்லவென்று என்மனத்தில் நன்றாய்த்தெரிந்திருந்தும் நீ ரம்பவும் வருந்தியென்னைக் கேட்டுக்கொள்ளும் வார்த்தைக்கு இதோ உடன்படலானேன் எனது நாயகியே.

சுசீலைசொல் - தரு.

இராகம் - ஆநந்தபைரவி - அடதாளம்.

மனமகிழ்ந்தேனே இப்போது
மனமகிழ்ந்தேனே

கனமானசஞ்சலத்திலேங்கிக் கருத்தழியாமல்மிகவுமோங்கி (ம)

தரித்திரம்பொறுப்பாரோ உலகில்
ஸம்பத்தைவெறுப்பாரோ
வருத்தம்பிள்ளைகள் செய்திடாமல்
வாடித்தெய்வத்தை வைதிடாமல் (மனம்)

மாதவர்கருணையின்று புண்ய
வசத்தால்வந்ததே நன்று
ஏதோதரித்திரமிது வளைக்கும்பட்டோம்
இன்றுமுதற்போக பாக்கியத்தைத்தொட்டோம் (மனம)

உலகத்திற்பிறந்தோர்கள் செல்வம்
உற்றால்தான்சிறந்தோர்கள்
கலக்கமறவதைக் கண்டுகொண்டோமே
கைப்புண்ணுக்குக்கண் ணாடியும்வேண்டுமோ (மனம)

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

அருமைமாதவஞ்செய்தென்று மழிந்திடாஞானம்பெற்ற ... *
குருவிடுந்தெய்வத்தின்பால் கோதில்மன்னவரில்சேர்கள் *
கருணையையடையவேண்டிக் காணவேபோகாநின்ற ... *
நாசிறந்திடவேதேனும் நதர்வைக்கவேண்டுந்தானே ... *

வசனம்.

கேளாய் எனதுநாயகியே? மகாதவத்தைச்செய்து ஞானத்தைப்பெற்ற குருவிடத்திலும் தெய்வத்தினிடத்திலும் இராஜர்களிடத்திலும் அவர்கள் கிருபையை அடைதற்குப் போகின்றமனிதர்கள் ஏதாவது சிறந்த நதர் கொண்டுபோய்வைத்துக் காணவேண்டும் பெண்ணே.

சுசீலைசொல் - விருத்தம்.

கிணறுவெட்டிடவேபூதங் கிளம்பியதென்பதைப்போல் ... *
கணவருடன்வாதித்தேன் கருத்திணுச்கவரிசைந்தும் ... *
இணையில்கண்ணபிரான்றன்னை யின்புடன்காணவேண்டில் ... *
அணிநதர்வேண்டுமாமே அதற்கென்னசெய்யலாமே ... *

வசனம்.

என்னுடையகணவரை ரம்பவும் வருந்திக் கேட்டுக்கொண்டு அவரை என்மனத்தின்படி செய்ய வொத்துக்ககாள்ளச்செய்தும், ஸாக்ஷாத்ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமியைப்போய்க் காணவேண்டுமானல் ஏதாவது சிறப்பாகிய நதர்கொண்டு போய்வைத்துக் காணவேண்டுமாம். இதற்கு என்னசெய்யலாம்; கிணறு வெட்டப் பூதம்புறப்பட்டாற்போ லாச்சு தெய்வமே.

சுசீலை - புலம்புகிற - தரு.

இராகம் - அசாவேரி - தாளம - ரூபகசாப்பு.

வாசுதேவனைத்தரிசிப்பதற்கு மகிழ்ந்துசென்றாலோ கையில்
தேசுலாவியநதர்வேண்டுமென்று செப்புகின்றாரே
குஞ்சாறுதினங்களுக்கோர் நட்டை யருக்குழந்தைகள் உப்புக்
கஞ்சிக்குங்கதியொன்றுமில்லாமற் கதறுகின்றதுகள் (வாசு)
செல்லாக்காசுமில்லாமற்படி திகைத்துவருந்தும் நாம்
நல்லநதெதனைக்கொண்டுபோய் நண்ணிடுற்பொருந்தும் (வாசு)
சுவிருக்தாற்சித்திரந்தன்னைச் சொகுசாய்த்தீட்டலாம் அதுபோல்
புவியிற்பொருளிருந்தால்கண்ணனும் புகழ்நதர்காட்டலாம் (வாசு)
உயிர்ச்சுற்றின்மேலைவிழுந்தாற்போ லும்பிடியில்லாமை பேரில்
தருந்தநதர்தேடுவதிதுக்ாக சாரத்தின்பொல்லாமை (வாசு)

மலையைக்கெல்லியெலியைப்பிடிக்கு மதியில்லார்போலாம் நாம்
நிலமிசைநல்லபொருள்கொண்டுபோக நினைப்பதிக்காலம் (வாசு)
ஆஸ்திக்குமிஞ்சினவபராதம் ஆர்போடுவார்கள் தங்கள்
வாஸ்தவசக்திக்குமீறினால் வருந்திவாடுவார்கள் (வாசு)
விலையுள்ளவபூர்வவஸ்துவைக்கொண்டு போயிவ்வேந்தர்கள்காண்பர்
நிலமிசையெதைக்கொண்டுபோவார்நம்மை நிகர்த்தயாந்தர்கள் (வாசு)
எந்தப்பொருளைக்கொண்டுபோகலா மென்றுயோசிக்கின்றேன் என்
சிந்தையில்தெரிவையுண்டுபண்ணத்தெய்வத்தைப்பூசிக்கிறேனே (வா)

சுசீலைசொல் - விருத்தம்

விரலுக்குத்தக்கவீக்கம் மேவினாற்சகிக்கக்கூடும் ... ... *
தரணியிலதிகமாகச் சமைந்திடிற்பொல்லாத்துக்கம் ... ... *
ஒருபரம்பொருளாமந்தக்கிருஷ்ணருக்கு ... ... *
வரிசைகளெதனைக்கொண்டு வைப்பதுதெரிகிலேனே ... *

வசனம்.

ஒருவருக்கு விரலுக்குத்தக்க வீக்கம் உண்டானால் சகிக்கக்கூடுமேயல்லது அதிகமாக வீக்கமுண்டானால் ரம்பவும் வருத்தத்தைக்கொடுக்கும் அது போல நம்முடைய இந்தத்தரித்திரமாகிய சக்திக்குத்தக்கபடி பரம்பொருளாகிய கிருஷ்ணஸ்வாமிக்கு என்னவிதமாகிய நதர்கொண்டுபோய் வைப்போம், அது தெரியவில்லையே ஓதெய்வமே.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

நலமுடைக்கண்ணனுக்கு நதர்சிறந்திடவேதேடச் ... ... *
சலனத்தைக்கொண்டிருக்குந் தையலேசொல்லக்கேளாய் *
மலையொத்ததெய்வத்திற்கு மலையளவாய்ப்புட்பத்தை ... *
உலகத்திற்போட்டர்ச்சிப்போ ரொருவருமில்லைதானே ... *

வசனம்.

நான் சொல்வதைக்கேளாய்பெண்ணே? கண்ணபிரானுக்குத் தக்கபடி நல்லசிறப்பாகியநதர் எந்தவஸ்துவைக்கொண்டுபோய் வைக்கிறதென்று நீ கவலைப்படவேண்டியதில்லை. மலையொத்ததெய்வத்திற்கு மலையளவாவ்புஷ்பத்தைப்போட்டுப் பூசைசெய்பவர்கள் உலகத்திலில்லை, ஆகையால் நமது சக்திக்கு லோபமில்லாமல் ஏதாவது சொற்பப்பொருளைக் கொண்டுபோய்க் கண்டு ஸேவித்துவரலாம்பெண்ணே.

பொது - விருத்தம்

கனமுனிவரர்சொற்கேட்ட காதலியாளுநான்கு ... *
தினங்கள்பட்டினியிருந்து சேர்ந்ததன்பங்குநெல்லை ... *
மனமகிழ்ந்திடவறுத்து வலிமைசேருரலிற்போட்டுக் ... *
குனிந்துலக்கையைக்கொண்டேதன் குறைவறவிடிக்கின்றாளே *

வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீ குசேலமுனிவர் சொல்லியதைக்கேட்டு, அவர் மனைவியாகிய சுசீலையம்மாள் அன்றுமுதல் நாலுநாளாகத் தான்பட்டினியாயிருந்து, தன்பங்குநெல்லைச் சேர்த்து, அதைவறுத்து உரலிற்போட்டு உலக்கையெடுத்துக்கொண்டு இடிக்கிறவிதங் காண்க.

சுசீலை - அவலிடிக்கிற - தரு.

இராகம் - மத்தியமாவதி - தாளம் - ரூபகம்.

அவலையிடிக்கிறேன் என்றன்
கவலைவிடுக்கிறேன்

புவிதனிலிந்தச் சுதர்தினந்தோறும்
புலம்பியென்றனைக் கலங்கச்செய்யாமல் (அவலை)

ஆதியநாதியே என்னை
ஆள்வாய்தயாநிதியே

நீதிசேர்விதுரன் விருந்தையுண்டு
நெஞ்சமகிழ்ந்திட்ட பஞ்சவர்தூதர்க்கு (அவலை)

தரித்திரமோடிடவே நல்ல
ஸம்பத்தைத்தேடிடவே

பெருத்தவிருபத்தேழு பிள்ளைகள்
வருத்தத்தோடெண்ணுங் கருத்தைமுடிக்க (அவலை)

இதுவரைக்கும்பட்டேன் கஷ்டம்
இனிமேலதைவிட்டேன்

எதுகுலத்தினிற் றோன்றியகிருஷ்ணர்
பதங்களிரண்டும் கதியென்றுசொல்லி (அவலை)

இதைத்தின்றுகளிப்பார் நமக்
கதிஸம்பத்தளிப்பார்

இதயத்தின்மிக வன்புடன்கூழை
இட்டாலுமமுதமா மிஷ்டருள்ளோர்க்கு (அவலை)

சுசீலைசொல் - விருத்தம்.

அவலினைபிடித்தேனென்ற னகமகிழ்ந்திடவிப்போது ... *
செவையுடனிதையெடுத்துத் திட்கவோர்முறத்திற்போட்டே
எவர்களும்புகழக்கற்க ளில்லாமல்நோம்பிவிட்டேன் ... *
பவமறுத்துயர்ந்தவென்றன் பர்த்தாவுக்கறிவிப்பேனே ... *

வசனம்.

இதோ அவலை இடித்தாச்சு. இதையெடுத்து இந்தமுறத்தில் போட்டுக் கல்லுகளில்லாதபடி நோம்பிவிட்டேன். இந்தச்சங்கதியை எனது கணவருக்குத் தெரிவிக்கிறேன்.

சுசீலைசொல் - விருத்தம்.

உம்பர்கள் துதிக்குமந்த வொய்யாரக்கண்ணனுக்கு ... ... *
எம்பெருமானேபேதை யின்றிந்தநர்கொணர்ந்தேன் ... *
ஐம்புலத்தாசைநீக்கி யருமைசேர்ஞானம்பெற்றீர் .. *
அம்புஜபாதம்போற்றி யடியாளையாள்விர்போற்றி ... *

வசனம்.

ஐம்புலன்களால் வரப்பட்ட சேஷ்டையைநீக்கி அருமையாகிய ஞானத்தைப் பெற்ற மஹாநுபாவரே? தேவர்களெல்லாம் வணங்கும்படியாகிய ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமிக்குத் தேவரீர் நதர்கொண்டுபோய் வைக்க இதோஇந்த அவலைக் கொண்டுவந்தேன். இதை யங்கீகரிக்கவேண்டும் என்பிராணநாதரே.

ஸ்ரீகுசேலர்சொல்

வஞ்சித்துறை.

மங்கையேயீது ... *
துக்கமாமயிலே ... *
பங்கஜநாபனுக் ... *
கிங்கிதமாமே ... *

வசனம்.

நீகொடுத்தஇந்த அவல் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிக்கு ரம்பவும் அங்கீகாரமாகும்பெண்ணே.

சுசீலைசொல் - விருத்தம்.

நம்முடையவலையந்த நாதர்கைக்கொள்வாரென்று ... ... *
உம்முடைத்திருவாக்காலே யுரைத்தநக்ஷணமேநல்ல ... *
செம்மைசேர்செல்வம்வந்து சேர்ந்ததற்கட்டியுண்டோ ... *
இம்மையினல்லோர்சொற்க ளென்றைக்கும்பொய்யாகாவே ... *

வசனம்.

நம்முடையஇந்த அவலை ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி அங்கீகரிப்பாரென்று தேவரீர் திருவாக்காலே சொன்னதக்ஷணமே நமக்கு மகத்தாகிய செல்வம்வந்து சேர்ந்ததற்கு யாதொரு சந்தேகமுமில்லை. பெரியோர்களுடையசொல் எந்தக்காலத்திலேயும் பொய்யாகமாட்டாது ஸ்வாமி.

சுசீலைசொல் - விருத்தம்.

அவலினையிலேயாலஸ்ய மமிர்தமும்விஷமாமென்றே ... ... *
புவியினிற்கல்விகற்ற புண்ணியருரைப்பதாலே ... ... *
அவலினைமுடியவேணும் ஆகையாலோர்வஸ்திரத்தை ... *
உவகையாய்ச்சீக்கிரத்தி லுதவிடவேண்டுந்தானே ... ... *

வசனம்.

ஆலஸ்யமமிர்தம் விஷமென்று பெரியோர்கள் சொல்வார்கள். ஆகையால் யாதொரு அட்டியுஞ்சொல்லாமல் இந்த அவலைமுடிகிறதற்கு ஒருவஸ்திரத்தைச் சீக்கிரத்தில் அடியாளுக்குக் கிருபையுடன் கொடுத்தருளவேணும். என் பிராணநாதா.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

எத்தனைதினங்கள்கண்டோ இருக்குமிப்பழமையான ... *
பொத்தல்வஸ்திரமொன்றல்லாற் புனைந்திடவேறேயேது ... *
கர்த்தனுக்களிக்கத்தக்க கதிர்பெறுமவலைநல்ல ... ... *
உத்தமப்பெண்ணேநீதா னுவந்ததில்முடிந்திடாயே ... *

வசனம்.

எத்தனையோதினங்கள் பார்த்திருக்கிற இந்தப்பழையகந்தையொன்றல்லாமல் எனக்கு வேறேவஸ்திரமேது இது உனக்குத்தெரியாதா? இருக்கிறதுவாயிருக்கிறதிலிருந்து நீ கொடுத்தக்க அந்த அவலை இதில்ஒருபக்கத்தில்முடிந்து கொடுப்பாய் உத்தமகுணத்தையுள்ள எனது நாயகியே.

சுசீலைசொல் - விருத்தம்.

எந்தப்பக்கம்பார்த்தாலு மிருக்கிறதேபொத்தல்கள் ... ... *
சிந்தாமலெப்படிக்குச் சிறக்கவேமுடியப்போறேன் ... ... *
விந்தைசேர்ந்தமூலை விடமற்றோரிடத்திற்காணேன் ... ... *
சிந்தைநான்மகிழ்ச்சிகொண்டு சிக்கெனமுடிந்திட்டேனே ... *

வசனம்.

இந்தவஸ்திரத்தில் எந்தப்பக்கம் திருப்பித்திருப்பிப்பார்த்தபோதிலும் அநேகங்கந்தல்களாயிருக்கிறது. இந்த அவலையெப்படி சிந்தாமல் இதில் முடியப்போகிறேன். ஓகோகோ இந்த இடத்தில்மாத்திரம் கொஞ்சம் கந்தலில்லாமலிருக்கிறது இதில்முடிந்துவிட்டேன். ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியைக் கண்டு சேவித்துவருவீர் ஸ்வாமி.

ஸ்ரீகுசேலருக்குச் சகுனமாகிற - தரு.

இராகம் - தோடி - தாளம் - சாப்பு.

சகுனங்கள்நன்றாகவாச்சு — தேவிகளுக்கு
தரித்திரமின்றேட்டேபோச்சு

மகத்துவந்தங்கிய பகவானருளினாலே
மங்களமாகிய வருகின்றபெருமைசேர் (சகுன)

கன்னிகைபசுபேரிகைச்சங்கம் எதிரிலதோ
காண்கிறதேசுபத்துக்கிதே யங்கம்

உன்னதமாகிய வுயர்பாற்குடம்மலர்
நன்னயப்பழவர்க்கம் நானிதோகண்டேன் (சகுன)

திருவிளக்குவருகிறதுகோராய் இரண்டுமறையோர்
சீலமாயெழுந்தருள்கின்றார் சீராய்

கரியுமெருதுங் களிப்புடனேமுன்னம்
வருகின்றனபுண்ய வசத்தினாலன்றோ (சகுன)

தீர்த்தக்குடமிரண்டுகொண்டே மங்கல்யஸ்திரீகள்
திடமாய்வருவதையான் கண்டேன்

சாத்தியகட்டு சாதமுமதன்பின்சபம்
வேசியுமாம்ஸமும் விருப்புடன்பார்த்தேன் (சகுன)

கருடன்வாநரம்பாம்புபன்றி — மூன்றுநரி
கலைமான்பாரத்வாஜம் வென்றி

மருவியபுலியெலி காடிகாட்டான்பூனை
வருகிறதிப்போதே மன்னிநேனேபலன் (சகுன)

ஸ்ரீகுசேலர்சொல் - தரு

இராகம் - ஆநந்தபயிரவி - அடதாளம்.

ஸ்ரீகிருஷ்ணநாதுன்றன் சொந்தம் — என்றன்
சிந்தையில்வைப்பாயுன் பாதாரவிந்தம் (ஸ்ரீகிரு)

மலையையெடுத்தகோபாலா — மிக
வஞ்சகக்காளிங்கன் மேலாடுஞ்சீலா
விலையானகருணாலவாலா — என்னை
க்ஷேமமாயாண்டுகொள் ருக்மணிலோலா (ஸ்ரீகிரு)

ஆதிநாளுன்னுடன்வாசித்தேன் — அந்த
அன்யோன்யஸ்நேகத்தாற்காண யோசித்தேன்
ஏதுமறியேன்பூசித்தேன் — இந்த
ஏழையைக்காப்பாற்றுவாய் நேசித்தேன் (ஸ்ரீகிரு)

நாள்பலகண்டவிக்கந்தை — தன்னில்
நாயகிசிறிதவல் முடிந்ததேவிந்தை
சாலவுஞ்செல்வம்பெறச்சிந்தை — வைத்தான்
தாமோதரனேநீயே தாய்தந்தை (ஸ்ரீகிரு)

ஸ்ரீகுசேலர்சொல் - தேவாரம்.

ஆதியுமந்தமில்லா வச்சுதாவமரர்போற்றும் ... ... *
சோதியேசித்சொரூபா துங்கனேகளங்கமில்லா ... ... *
நாதனேயெங்குமுள்ள நம்பனேகருணைவாழ்வே ... ... *
ஆதரவாகவிந்த வடியனையாட்கொள்வாயே ... ... *

வசனம்.

ஆதியுமந்தமுமில்லாதஅச்சுதனே? தேவர்களெல்லாம்வணங்கும்படியாகிய சோதியே? சித்சொரூபமாகிய பரிசுத்தனே எந்தவஸ்துவிலும் நிறைந்த ஸ்வாமியே அடியேனை கிருபையுடன் ரக்ஷிக்கவேண்டும் அய்யனே.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

ஒப்பில்லாசித்சொரூப வுத்தமப்பிரணவத்தைத் ... ... *
தப்பறத்துத்திதாநங்கள் சாற்றுதொருவிட்டிராமல் ... *
செப்பருவெயிலெரிக்கச் சிவந்துகால்கொப்புளிக்க ... *
எப்போதுமடந்ததில்லை யித்தனைதூரந்தானே ... ... *

வசனம்.

சித்சொரூபமாகிய பிரணவத்தைத்தகதத்யானமாய்த் தோத்திரஞ்செய்துத்தி லசைசலைவற்று உட்கார்ந்திராமல் மகத்தாகிய இந்தக்கொடிய வெயிலில்டம்புதகிக்க இரண்டுகால்களும் பூமியிலூன்றக்கூடாமல் சிவந்து கொப்ள எந்தக்காலத்திலும் இவ்வளவுதூரம் நடந்ததேயில்லை தெய்வமே.

ஸ்ரீகுசேலர் - வழிப்போக்கருக்குச் - சொல்

விருத்தம்.

ஆய்யாவெதிரிற்கின்று மமலமாயெகல்லோரே ... ... *
பேரென்னவூர்தானென்னவெயர்க்கெங்கேசெல்லுகின்றீர் ... *
காரணபூதனுகுங் கண்ணன்வாழ்ந்திருக்கத்தக்க ... ... *
த்வாரகையெந்தமூலே தயையுடன்காண்பிப்பீர் ... ... *

வசனம்.

ஆய்யர்களே எதிரில்வருகிற மஹானுபாவர்களே? உங்களுடையபேரென்ன? ஊரென்ன? எவ்விடம் போகின்றீர்கள்? ஸாக்ஷாத்ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமியெழுந்தருளியிருக்கும் த்வாரகாபுரி யெந்தமூலையி லிருக்கிறது? அதையெனக்குக்காண்பிப்பீர்கள். அய்யாவுத்தமர்களே.

வழிப்போக்கர் - போற்றி - விருத்தம்.

அம்புவிதன்னி லமைந்திடும்பொல்லா ... ... *
வெம்பவமொழித்த வேதியாபோற்றி ... ... *
எம்பெருமானையே லெழுந்தருள்வோய்நின் ... ... *
அம்புஜபாத மனுதினம்போற்றி ... ... *

வசனம்.

எம்பெருமானைப்போல எழுந்தருளிய மஹானுபாவரே? தேவரீருடைய திருவடித்தாமரை போற்றிபோற்றி ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர் - வாழ்த்து - விருத்தம்.

சொல்லருஞ்செல்வம துலங்கியேவாழி ... ... *
நல்லமைந்தர்களுடன் நலமபெறவாழி ... ... *
வெல்லருஞானம் மேவியேவாழி ... ... *
எல்லையில்லன்றும் இனிதுடன்வாழி ... ... *

வசனம்.

செல்வத்தையும் நல்லபுத்திரர்களையு மடைந்து ஞானத்துடனேஎப்போதும் வாழக்கடவீர் அய்யர்களே.

வழிப்போக்கர்சொல் - விருத்தம்.

பேதைகள்பேரில்மெத்த பிரீதியைவைத்தேநல்ல ... *
மாதவன்வாழுமூரைவழுத்திடுவீர்சொன்ற ... ... *
போதேதன்னியராய்விட்டோம்புகழ்பெற்றோமெல்லாம்பெற்றோ[ம்
ஆதலாலெங்களைப்போ லருந்தவஞ்செய்தோர்யாரே ... *

வசனம்.

இந்தஏழைகள்பேரில் தேவரீர் கிருபைசெய்து எங்கள் முகத்தைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி யெழுந்தருளி யிருக்கும் த்வாரகாபுரியெங்கே காட்டவேணுமென்று சொன்ன க்ஷணமே நாங்கள் தன்னிய ராய்விட்டோம். எங்களைப்போ லொருவரும் புண்ணியஞ் செய்தவர்களில்லை ஸ்வாமி.

வழிப்போக்கர்சொல் - விருத்தம்.

கண்ணன்வாழ்ந்திருக்கும்த்வார காபுரம்போகவேண்டில் ... *
எண்ணரும்பலகாதங்க ளிருக்கிறதய்யாநம்ம ... ... *
கண்ணுக்குத்தோன்றுதந்தக் கனத்தபட்டணமிப்போது ... *
புண்ணியதவத்தீர்நாங்கள் போகின்றோம்விடையீவீரே ... *

வசனம்.

கண்ணபிரானெழுந்தருளியிருக்கிறத்வாரகாபுரம் இன்னமநேககாதவழித்தூரமிருக்கிறது. இப்போது அது நமதுகண்ணுக்குத்தோன்றுது. நாங்கள்போய்வருகிறோம். உத்தரவுகொடுப்பீர் ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

கால்களில்முட்கள்தைத்துக் கலங்கிடவாருயிரத்தம் ... *
சாலவுமோடமூர்ச்சை தான்வந்துகீழேதள்ள ... ... *
பாலனையிப்படிக்குப் பரீக்ஷித்தாலென்னசெய்வேன் ... *
நீலமேகத்தைப்போல நிறத்தையுற்றிடுமெம்மானே ... *

வசனம்.

என்னுடைய இரண்டுகால்களிலும் முள்ளுகள்தைத்து ரத்தம் ஆறுய்ப்பெருகியோடவும், தேகங்களைத்து மூர்ச்சையாகிக் கீழேவிழவும், அடியேனைப் பரிக்ஷை செய்தாலென்னசெய்வேன், நீலமேகத்தைப்போல நிறத்தைப்பெற்று விளங்கும்எம்பெருமானே.

ஸ்ரீகுசேலர்சொல் - தரு

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தன்புத்திப்படிசெய்தால் சவுக்கியம்குருபுத்தி
தன்னைக்கேட்டால்விசேஷம் திருநாதா
அன்னியர்சொல்புத்தியை யனுஸரித்துநடந்தால்
அமையுமநேகநாசம் திருநாதா
பெண்புத்தியைக்கேட்டாற் பிரளயம்வருமென்று
பெரியோர்கள்சொல்வார்கள் திருநாதா

எண்ணிப்பார்க்காமலதை யென்மனைவியாள்சொல்லுக்
கேளுடன்பட்டுவந்தேன் திருநாதா
எண்ணுதொன்றையெண்ணி யெவர்களுஞ்செய்யக்கூடா
தென்றைக்குமேஅய்யோ திருநாதா
கண்ணனெங்கேயானெங்கே கனத்தத்வாரகையெங்கே
காலோவுளோக்கிறதே திருநாதா
பட்டணமெங்கேயென்று பலரைக்கேட்டாலுமின்னும்
பலகாதங்களென்கிருர் திருநாதா
பட்டால்தான்தெரிந்திடும் பார்ப்பானுக்கென்னுமொழி
பலித்ததென்மட்டிலய்யோ திருநாதா
அன்னமோவில்லைபசி யதிகமாயுண்டாகி
யலட்டுகிறதுடம்பை திருநாதா
பன்னருந்தாகத்தாலே பரிதவிக்கிறேன்குளம்
பார்த்தாலோஎங்குமில்லை திருநாதா
இந்தவலைக்கண்டா லெவர்கள்தான்சிரியார்கள்
இதுவோகிருஷ்ணருக்கென்று திருநாதா
சிந்தைகவலைகொண்டு திகைக்கிறேன்மேல்வருஞ்
செயலென்னமோவடியேன் திருநாதா
கடலோவெகுதூரமாய்க் காண்கிறதேயதனைக்
கஷ்டப்பட்டுச்சேர்ந்தேன் திருநாதா
கடக்கப்படகுவேண்டும் கொடுக்கவேண்டுமேகூலி
கையிற்காசுமில்லையே திருநாதா
ஆதியந்தமில்லாத வச்சுதாபரந்தாமா
அகண்டபரிபூரணனே திருநாதா
சோதியேசிற்சொரூபா தூயனேமாயவனே
துரிதமாயென்னையாள்வாய் திருநாதா

பொது விருத்தம்.

மாதவர்வெய்ர்வுதோன்ற மலரடியிரண்டும்நோகச் ... ... *
சீதநீர்க்கடற்சமீபஞ் சேர்ந்தனரிங்கிருக்கத் ... ... *
தீதில்தோணியைச்செலுத்தித் திடமுடன்மீராலப்பை ... *
ஆதாரமாகவந்தவிதிசயமுரைக்கிறேனே ... ... *

வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீகுசேலமுனியானவர்தமது இரண்டு பாதங்களும் மிகவும்நோக, வெயிலினு லுடம்பெல்லாம் ஜலம்பெருகி, கஷ்டப்பட்டுநடந்துவந்து மேற்குச்சமுத்திரக்கரையில் சேர்ந்தார். இப்படியிருக்க அந்தச்சமுத்திரக்கரை யண்டையில் மீராலப்பை தனதுபடவைநடத்திக்கொண்டு வருகிறவிதங்காண்க.

மீராலப்பை - வருகிற - விருத்தம்.

கையினிற்படவுக்கோலை களிப்புடன்பிடித்துக்கொண்டு ... *
மெய்யினிற்சொக்காய்பூண்டு மேன்மைநிஜாரணிந்து ... *
பையவேகுல்லாய்போட்டுப் படவினைத்தள்ளிக்கொண்டு ... *
வையகமதிக்குமீரா லப்பைதான்வருகின்றனே ... *

வசனம்.

படவுதள்ளுங்கோலைக் கையில்பிடித்துக்கொண்டு, உடம்பில் சொக்காயும் காலில் நிஜாரையும்போட்டுக்கொண்டு, தலையில் குல்லாமாட்டிக்கொண்டு, படவை செலுத்திக்கொண்டே யிதோ மீராலப்பை வருகின்றான்.

மீராலப்பை - வருகிற - தரு.

இராகம் - நாட்டை - தாளம் - ரூபகம்.

மீராலப்பைவருகிறான் இதோபாருங்கள்
மீராலப்பைவருகிறான்
மீராலப்பைவருகிறான் விருப்புடனேபடவைத்தள்ளி
ஆரார்வதேறுவாரிருந்தா லதிசீக்கிரததில்வாருங்களென்று (மீரா)
எவ்வளவுதூரமானாலுமிந்தக்ஷணமேகொண்டுபோய்சேர்க்கிறேன்
செவ்வையானகூலிமாத்திரஞ் சிந்தைமகிழ்ந்துதந்திட்டாலென்று)
கடுகவாருங்களேறக்கருதுவோர் காற்றுவிசேஷமாயடிக்கிறது
முடுக்கினுலிப்போபடவைகொடிக்குள் விடுக்குமேபலகாதத்துக்கப்பால் (மீ)
புளுக்கப்பயலிதிலேறவிட்டேன்பொன்னுயிர்தந்திட்டபோதிலும்
பளக்கமில்லாதபேர்களைச்சேர்த்தால் முழுகிப்போகுமென்குடித்தனமென்று)

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

தோணியைச்செலுத்திவந்த ஜோனகலப்பையாரே ... ... *
வேணமட்டுக்குமிப்போ விளம்பினேனாசீர்வாதம் ... ... *
காணுதற்கரியத்வாரகாபுரிக்குதனிலேயென்னை ... ... *
காணயாகச்சேர்த்தால் நல்லபுண்ணியமுண்டாமே ... ... *

வசனம்.

படவைச்செலுத்திக்கொண்டுவந்த ஓ ஜோனகரே உமக்கிதோ ரம்பவுமா சீர்வாதஞ்சொல்லுகிறேன். நீர் என்னை இந்தப்படவிலேற்றி த்வாரகாபுரியில் கொண்டுபோய்விட்டால் உமக்குநல்ல புண்ணியம் உண்டாகும்அய்யா.

மீராலப்பை - சொல் - விருத்தம்.

யார்காணுமெதிரிருக்கு மருக்கானகந்தைகொண்ட ... ... *
நீரெந்தவூர்பேரென்ன நிலவரமாகச்சொல்லும் ... ... *
சீரியத்வாரகைக்குச் செல்லுவதற்குத்தக்க ... ... *
காரணமென்னமோதான் கடுகவேயுரைத்திடுரே ... ... *

வசனம்.

யார்காணும் ஓய் பழையகந்தைக் கட்டிகிட்டு இருக்கிற அய்யரே? உமது ஊரென்ன? பேரென்ன? த்வாரகாபுரிக்கு நீர் போகவேண்டியகாரியமென்ன? இவைகளையெனக்குச் சீக்கிரமாய்ச் சொல்லிகிட்டுவாருங்காணும் பார்ப்பானே.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

தாணியிற்சீலம்பெற்ற தபோதனருரென்பேரோ ... ... *
இருநிலத்தினிற்குசேல னென்றிடுவார்கள்யாவும் ... ... *
கருமுகில்மேனியோனுங் கலந்தொன்றாய்வாசித்தோமவ் ... *
வரியிடம்போகின்றேனே யறிந்திடுவாயிப்போதே ... ... *

வசனம்.

நான்சொல்வதைக்கேளீர் ஜோனகரே - என்பெயரோ குசேலன், தபோதனரூரிலிருப்பவன், ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியும் நானும் பாலியத்தி லொருபள்ளிக்கூடத்தில் வாசித்துவந்த கூட்டாளிகள், அந்தமஹானுபாவ ரிப்போது த்வாரகாபுரியில் இருப்பதால் அவரைக்கண்டு சேவித்துவரப்போகிறேன். அய்யா லப்பையாரே.

மீராலப்பை - சொல் - விருத்தம்.

அரியிடம்போனாலென்ன யாரிடம்போனாலென்ன ... ... *
காமதிற்கூலிதந்தால் களிப்புடனேற்றிக்கொள்ளும் ... ... *
பரிகவித்தென்னேடேநீர் பஞ்சாங்கம்பேசவேண்டாம் ... *
விரைவாய்ப்போகவேண்டும் வெகுநேரமாச்சுதானே ... ... *

வசனம்.

என்னகாணும் ஓய் ஏழைப்பார்ப்பானே - நீர்கிருஷ்ணரிடத்தில் போனாலென்ன மற்றயாரிடத்தில் போனாலென்ன இந்தப்படவுக்குக்கூலி நம்மிட கையில் தந்திட்டால் ஏறிக்கொள்ளுங்காணும், வீண்பஞ்சாங்கம் பேசவேண்டாம், வெகுநேரமாச்சுது. படவை யோட்டிக்கிட்டுப் போகவேணுங்காணும்.

ஸ்ரீகுசேலருக்கும் - மீராலப்பைக்கும் நடக்கிற - தர்க்கம் - தரு.

இராகம் - மோஹனம் - அடதாளம்.

ஸ்ரீகுசேலர்.

நானேரம்பவுமேழை கையினிற்காசில்லை
நம்புவீரிதனைநீர் நல்லஜோனகரே

மீராலப்பை.

ஏனிவ்வளவுதூரம் வந்தீர்காசில்லாமல்
எந்தவேலைமுடியும் சொல்வீர்பார்ப்பாரே

ஸ்ரீகுசேலர்.

கட்டிருந்தாற்பல கந்தையுள்ளவிந்தத்
துணியைப்போட்டிருப்பேனோ சொல்வீர்ஜோனகரே

மீராலப்பை.

கட்டியிருந்தாலென்ன கந்தையுள்ளசீலை
காசுவைத்திருந்தா லாகாதோபார்ப்பாரே

ஸ்ரீகுசேலர்.

பணமென்னசெய்திடும் பத்தெட்டுவகைசெய்யும்
பாரிலென்பதுபொய் யாமோஜோனகரே.

மீராலப்பை.

பணத்தைப்புதைத்தாலைவத்தே யொன்றுமேயில்லாத
பரதேசிபோலிருப்பா ரிலையோபார்ப்பாரே

ஸ்ரீகுசேலர்.

இருபத்தேழுபிள்ளையும் நானும்பத்தியுமன்னம்
இல்லாமலிருக்கிறோ மினியஜோனகரே

மீராலப்பை.

வருத்தமுனக்கநேகமுண்டானா லென்னிடம்
வருத்தினாலென்னபலன் வறுமைப்பார்ப்பாரே

ஸ்ரீகுசேலர்.

என்னையிந்தப் படவிலேற்றியந்தக்கரையில்
இறக்கிவிட்டால் ரம்பப்புண்யம்ஜோனகரே.

மீராலப்பை.

என்னென்னவிதமாகக் கெஞ்சிப்பல்லைக்காட்டி
யிரந்தாலுமேறவிடேன் சும்மாபார்ப்பாரே

ஸ்ரீகுசேலர்.

திரும்பிவரும்போது கொடுக்கிறேன்வேண்டிய
திரவியமிதை நம்புவீர்ஜோனகரே

மீராலப்பை.

வரும்போதும்மை நான்காண்பதுநிச்சயமோ
வஞ்சித்தேயிடப் பார்த்தீரோபார்ப்பாரே

ஸ்ரீகுசேலர்.

ஒருநாளைக்கெவ்வளவோ சம்பாதிக்கிறீயேழை
யொருவன்கொடுக்காவிட்டாலென்ன ஜோனகரே

மீராலப்பை.

சரிசரிநீர்நன்றாய்ச் சொன்னீர்பலதுளி
பெருவெள்ளமென்ப தறியீரோபார்ப்பாரே

ஸ்ரீகுசேலர்.

நாகூர்மீராசாய்ப்பு ரம்பவுக்கிருபைசெய்வார்
நலமாயென்னையேற்றினாலோ ஜோனகரே

மீராலப்பை.

ஓகோகோவிதென்ன லச்சையிந்தப்படவில்
ஒருபக்கமுட்காருமையா பார்ப்பாரே

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

கல்லினைப்போன்றவந்தக் கடினஜோனகன்சித்தத்தை ...
மெல்லவேதிருப்பியென்றன் விருப்பத்தின்படிமுடித்தேன்
சொல்லுமிப்படவிலேறித் துரிதமாயிதோவுட்கார்ந்தேன் ...
நல்லத்வாரகைக்குச்சென்றே நாதனைத்தரிசிப்பேனே ...

வசனம்.

இந்தஜோனகனுடைய கல்லைப்போலொத்த கடினமனத்தைப் பலவிதமாக வேண்டிக்கொண் டென்மனதின்படிதிருப்பி யிதோஇந்தப்படவிலேறியொருபக்கம்உட்கார்ந்தேன் த்வாரகைக்குப்போய்க்கிருஷ்ணரைச்சேவித்துவருகிறேன்.

மீராலப்பை - ஓடம் - விடுகிற.

ஏலப்பாட்டு.

நல்லகடல் சூழ்ந்திருக்கும் - இந்த - நானிலத்திலுண்டான
சொல்லரிய பலர்களிதோ - வந்து - சூழ்ந்துகொண்டேபடகேறினார்
நில்லாமலொருநொடியில் - இதை-நேராகச்செலுத்தியந்தப், பல்லோ
ர்புகழ் த்வாரகைக்கு - இப்போ - பண்புடனேசேர்க்கின்றேன்.

(முடுகு) செல்லாநீரொருமூலை திரண்டெல்லோர்களும் - எல்லாருஞ்சரியாக,இங்குட்காருங்கள் காற்றேவதிகமாய்க்காண்கிறதிப்போ, சாற்றுமோர்நொடியில் தான்கொண்டுசேர்ப்பேன், பருத்தமீன்கள்வந்து படவைக்கவ்வித்து, வருத்தமென்னதவிடு வாரியெறிந்தேன் பயப், படாதீர்கள் பக்குவமாக, நயமுடனித்தோணி நான்செலுத்துவனே,கவலைவேண்டாமிதைக் கவிழ்ப்பேனென்கிறதாய், கவிழ்க்கமாட்டேனொரு காலத்திலேயும், கடந்துவிட்டோம்பல காததூரந்தான், நடந்துவந்தாற்பல நாள்கள்பிடிக்கும், கறுப்பாயிருக்குமிக் கடனீரைப்பாரும், குறுக்கேமலைபோற் குலாவுமீன்காணக, இந்தவேகத்தைப் போலெவர்தானுங்கட்கு, சிந்தைமகிழ்கொண்டு செலுத்தினார்சொல்லும், சாலவுமென்றன்முத், தாதாமுதற்கொண்டு மாலுமீசாஸ்திரம்வகைநன்றாயத்தெரியும், த்வாரகைக்குத்தானிதோ சார்ந்துவிட்டோமே, சீராயிறங்குவீர் செப்பினேனன்றுனே. ஏலேலோ ஸ்வாமிகிருபைதன்னாலிப்படவு கரைசேர்ந்ததே.

மீராலப்பை சொல் - விருத்தம்.

என்னவோயேழைப்பார்ப்பா னெங்கிருக்கின்றாய்நீதான் ... *
உன்னதத்வாரகைக்கே உவப்புடன்வந்துவிட்டோம் ... *
இன்னதோர்படவைவிட்டு இப்பவேகீழிறங்கி ... ... *
உன்னுடையலுவலுக்கே உசிதமாயேகுவாயே ... ... *

வசனம்.

என்னவோய் ஏழைப்பார்ப்பானே எங்கேகுந்திகிட்டு இருக்கிறீர்காணும் த்வாரகாபுரிக்கிதோ படவைக்கொண்டுகிட்டுவந்து விட்டேன். இதைவிட்டுநீர் இறங்கி உம்மிடஅலுவலுக்குப்போங்காணும்.

ஸ்ரீகுசேலர்சொல் - விருத்தம்.

ஜோனகலப்பையாரே நூயவிவ்வுபகாரத்தை ... ... *
நானெனதாயுள்மட்டும் நன்றாகநினைத்திருப்பேன் ... ... *
நானிலந்தனிலேநீர்தான் நீளுமெசெல்வம்பெற்று ... ... *
மானிடர்புகழவாழி வருகிறேனுரைத்திட்டேனே ... ... *

வசனம்.

ஒ ஜோனகரே நீரிப்போதெனக்குச்செய்த இந்த மகா வுபகாரத்தை நானென்னு ப்ராணன்உள்ளவரையிலும் மறக்கமாட்டேன். மகத்தாயைஸ்வர்த்தைப்பெற்று நீர் தீர்க்காயுஸாய் எல்லாரும்புகழும்படியாக வாழக்கடவீர். யான் போய் வருகிறேன் ஜயாலப்பையாரே.

ஸ்ரீகுசேலர் - த்வாரகையைக்கண்டு,

வர்ணிக்கிற - வழிநடைப்பதம்,

இராகம் - தன்னியாசி - தாளம் - ஆதி.

இந்தத்வாரகையி னழகைக்கொஞ்சம் நீ
இதயமேயுற்றுப் பாராய்

நந்தகுமாரனும் கோவிந்தன்
சிந்தைமகிழ்கொண்டு தங்கும்நகரிது
நாடியிதைக்கண்டா லோடிப்போம்பாவம்
நாவாகனன்திருப் புரமுஞ்சரியாமோ

ஒன்றுக்கொன்றுயின் னடையாதபற்பல
உசிதமாளிகைகள் பார்த்தேன் இதன்
ஒப்பாரத்தையாதி சேஷனுமுஞ்சொல்ல
வொண்ணாதென்று தீர்மானித்தேன்
வென்றிசேர்சோலையில் மயில்குயிலாடும்
விந்தையைப்போலெந்த நாட்டில்சொல்லக்கூடும்
மேன்மைசேருங்கும்பு அகம்
மேவினரேதெம்பு மிக
விரும்பத்தகும்பல முல்லையின்
அரும்பின்பரிமளம் போலுண்டோ

பற்பலசரக்குகள் வைத்திருக்கின்றவிப்
பாவியகடைசேர்த்து இதைப்
பரிவுடனேசுற்றி வாங்குகின்ற
பாவையரழகே பரகயாதி
கற்புநிலைகொண்ட வுத்தமப்பெண்களை
கண்டாலேங்கிப்போகும் அண்டினபாவங்கள்
கற்றறிந்தோர் பெருமைஎவர்
கருதவசமருமை இவர்
கள்ளத்தன முள்ளத்தினி
லெத்தனையும் உள்ளோரலர் (இந்த)

வேதியரெங்குமே வேள்விகளைச்செய்து
விளங்குகின்றார்களே சீராய் அதன்
மேன்மையவிர்ப்பாகங்கைக் கொள்ளத்தேவர்கள்
மேவுகின்றார்களே நேராய்
வேதகோஷமன்றி வேறொன்றையுங்காணேம்
வீண்காலம்போக்காமல் விளம்புகின்றார் நூல்கள்
விருப்பங்கொள்ள சித்திரம் எழுதி
விந்தைதரும ஸத்ரம் பூமியில்
மேவுந்தன்மை பூவுலகத்தில்
யாவர்தங்கள் நாவால்சொல்வர் (இந்த)

கோடானகோடி ராஜர்கள்கண்ணன்ஸேவை
கோரியேதோவந்து காத்தும் இல்லை
மேட்டானமேடை சக்ரவர்த்திகள்பலர்
மேவிஸமயங்கள் பார்த்தும்
வாடித்திரிகின்ற ரேழையாகும்யானே
வந்தேன்கோவிந்தனை விந்தையாய்க்காண
என்தனது புண்யவசம்
ஈடேறினது கண்யம்நிசம்
இம்மாம்த்வார புரமதனை
பயமின்றியே சேர்ந்தேனிதோ (இந்த)

பொதுவசனம்.

அதெப்படியென்றால்! ஞானசிரோமணியாராகிய ஸ்ரீகுசேலமுனிவர் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி யெழுந்தருளியிருக்கும் அந்தப்புரத்தின் ஸமீபம்வந்து சேர்ந்தார். இப்படியிருக்க அங்கே த்வாரபாலகர் வருகிற விதங்காண்க.

த்வாரபாலகர் - வருகிற - விருத்தம்.

கண்ணனையென்றுந்தங்கள் கருத்தினிற்றுதிக்குஞ்சிலர் ... *
புண்ணியதிருமண்தன்னைப் புகழ்பெறவிடுங்குணாளர் ... *
மண்ணினில்மாயைநீக்கி மகத்துவமடைந்தமேலோர் ... *
திண்ணியத்வாரபாலர் சிறப்புடன்வருகின்றாரே ... ... *

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியை எப்போதும் தமதுமனத்தில் தியானிப்பவரும், திருமண் ஸ்ரீசூர்ணங்களை நெற்றியிலணிந்து பிரகாசிப்பவரும், மாயைவிட்டு நீங்கி மகத்துவமடைந்தவருமாகிய த்வாரபாலகர் இதோ வருகிறவிதங்காண்க.

த்வாரபாலகர் - வருகிற - தரு.

இராகம் - அபூருபம் - தாளம் - ஆதி.

தாரணியோர் புகழெம்பெருமான் வாசல்த்வாரபாலகர்வந்தார்
சீருடனிவர்களைக் கண்டமாத்திரத்தில்சிதைந்துபோகும்பாவந்தான்
மண்ணுளரசர்கள் சக்ரவர்த்தியென்று மனத்தினில்தாக்ஷண்யம்காட்டார்
கண்ணனனுமதி யின்றியெவரையுங் கண்டிப்பாய்விடமாட்டார் (தார)
எந்தக்காலமும் கண்ணன்துதியன்றி யிதரதுதிகளைச்செய்யார்
வந்தபோதிலும்பதினாயிரம்பொன் மனத்தையதனிடம்வையார் (தார)
பூருவஜனனத்தி லிவர்கள்செய்திட்ட புண்ணியமேநல்லபுண்யம்
சீர்வளர்கண்ணன்த்வாரபாலகராய்ச் சிறப்புடனிருப்பதேகண்யம் ()

த்வாரபாலகர் வசனம்.

யார் அய்யா அரசர்களே! சந்தடிசெய்யாமல் மவுனமாயிருங்கோள்.

ஸ்ரீகிருஷ்ணர் - வருகிற - விருத்தம்.

ஆரணம்நான்கும்போற்று மாதியாகியமுகுந்தன் ... ... *
வாரணந்தன்னையாண்ட! வனமிகுசக்கரதோன் ... ... *
த்வாரகாபுரியில்வாழுஞ் சச்சிதாநந்தனான ... ... *
சீரியகிருஷ்ணமூர்த்தி செழுஞ்சபைதனில்வந்தாரே ... *

வசனம்.

த்வாரகாபுரியில் வீற்றிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவான் அநேக கோபிகாஸ்திரீகள் தன்னைச் சூழ்ந்துவர இதோ கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

ஸ்ரீகிருஷ்ணர் - வருகிற - தரு.

இராகம் - தோடி - தாளம் - ஆதி.

நந்தகுமாரனாகும் நாதன்ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி
நலமாயிதோவந்தாரே
அந்தமாகுமசோதை சிந்தைமகிழும்பாலன்
விந்தைகோபிகாலோலன் சுந்தரமுகவொய்யாரன் (நந்த)

எண்டிசையின்மாந்தர்கள் தண்டமிட்டேவேந்தர்கள்
அண்டியடியைத்தாழப் பெண்டுகள்புடைசூழ
அண்டரரம்பையாட கண்டுமொழியார்பாட
தொண்டுநல்லோர்கள்பேச சாமரம்
கொண்டிருபுறம்வீச
வண்டுமொய்க்குமநறு மாலைதுலங்க
அண்டரும்பேரியோசை கண்டுமனங்கலங்க
பண்டுநான்மறையும் விண்டிவர்மகிமையை
பன்னுகின்றவய்யன் மிகவுந்துய்யன்
சங்குகையன் நல்லமெய்யன் (நந்த)

ஆதித்தனைவென்னச் சோதிமுடிமின்ன
வேதனையன்றளித்த நாதனன்பர்க்களித்த
பாதமுடையதூயன் மாதலமுண்டவாயன்
நீதிவிதானென்போன் இட்டவிருந்
தாதரமாகவுண்போன்
யாதவகுலந்தோன்றும் திலபராக்ரமன்
ஆதிமூலமென்ற போதுவந்தாண்டநேமன்
க்யாதியுள்ளவேணு நாதஞ்செய்வாயன்
கருணைபெற்றதாயன் பார்த்தநேயன்
கறுத்தமாயன் தீனசகாயன் (நந்த)

அஞ்சத்தக்ககாதி கஞ்சனாலேப்பூதகி
சஞ்சலங்கொள்ளக்கொன்றோன் கஞ்சனையன்றுவென்றோன்
பஞ்சபாண்டவர்கொன்று வேண்ட
செஞ்சரணநோகச்சென்று
கஞ்சமென்றயனை அஞ்சலென்றுரக்ஷிக்கும்
தாமோதரன்ரா ஜூநனைப்பக்ஷிக்கும
மிஞ்சுபுகழுடைய த்வாரகாபுரியில்
மேவுகின்றவாசன் மிகுப்ரகாசன்
ஸ்ரீநிவாசன் பொன்னாசன் (நந்த)

த்வாரபாலகர் - ஸ்ரீகுசேலருக்குப், போற்றி - விருத்தம்.

அய்யனேபோற்றிபோற்றி யருந்தவக்குன்றேபோற்றி ... *
மெய்யனேபோற்றிநான்கு வேதமுங்கற்றோய்போற்றி ... *
துய்யனேபோற்றியிங்கே தூயடிநோவவந்த ... *
செய்தியைச்சொல்லவேண்டும் திருவுளமகிழ்ந்துதானே ... *

வசனம்.

சரணம் சரணம் அய்யாமாதவரே, தேவரீரிவ்வளவுதூரம் திருவடிகளிரண்டும் நோகும்படி எழுந்தருளிய சங்கதியை எங்களுக்குக் கிருபைசெய்து தெரிவிக்கவேண்டும் ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர் - வாழ்த்து - விருத்தம்.

பாரினிற்கண்ணன்பாத பங்கஜம்போற்றிநித்யம் ... *
பேரானந்தத்தைப்பெற்றுப் பிறங்கிடுங்குணமுள்ளீர் ... *
சீரியவுங்கட்கெப்போ செப்பினேனாசீர்வாதம் ... *
த்வாரபாலகரேநீங்கள் சந்ததம்வாழியவாழி ... *

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியின் திருவடித்தாமரைகளை எப்போதும் வணங்கிப் பேரானந்தத்தைக்கொண்டிருக்கிற மஹானுபாவர்களே உங்களுக்காசீர்வாதம் நீங்கள் மேன்மேலும்வாழக்கடவீர்களய்யா.

ஸ்ரீகுசேலர் சொல் - எண்சீர் விருத்தம்.

ஆதியிலே சாந்தீபரிஷியிடத்தில் ... *
அன்புடனே யானும்ஸ்ரீகிருஷ்ணருந்தான் ... *

ஓதினோம்போர் பள்ளிக்கூடந்தன்னில் ... *
உத்தமரேயிருவருமன் யோன்யமிஷ்டம் ... *
ஆதலினாலன்னோனைக் காணவேண்டி ... *
அடைந்தனன்யானென்பெயரோ குசேலனென்பார் ... *
நீதில்லாக்கண்ணபிரானுக்கேயிங்கச் ... *
செய்தியுரைத்தென்னையவிடஞ் சேர்ப்பிப்பீரே ... *

வசனம்.

கேட்பீர்களய்யா த்வாரபாலகரே, சிறுபருவத்திலே நானும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் சாந்தீபருஷியிடத்தி லொன்றாய் வாசித்தவர்கள், நாங்களிருவரும் ரம்பக்கூட்டாளிகள், என்பெயரோ குசேலனென்று சொல்வார்கள். நானிப்போது மேற்சொல்லிய ஸ்வாமியைக்கண்டு தரிசிக்கவந்திருக்கிறேன். இதைநீங்கள் தயைசெய்து அந்த மஹானுபாவருக்குத் தெரிவித்து என்னை யவரிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பீர் அய்யா.

பொது - விருத்தம்.

முனிவரிவ்வாறுமொழிந்திட வருகிலுள்ள ... *
ஜனங்களிற்சிலர்களந்தச் செவிகொடுத்திதனைக்கேட்டு ... *
மனமகிழ்ந்திடவேகிட்ட வந்தெகதாளவார்த்தை ... *
அனுவாகினைத்தேசொல்ல ஆரம்பித்தார்கள்மாதோ ... *

வசனம்.

அகோதப்படியென்றால் ஸ்ரீகுசேலமுனியானவர் த்வாரபாலகரிடத்தில் சொல்லியதை அவர்பக்கத்திலிருந்த சிலர்கேட்டு, மேற்கண்ட முனிவரிடம்வந்து சிரித்து அவரை அனுவாகினைத்துப்பரிகாசஞ் செய்கிறவிதங்காண்க.

வாசலிலிருப்போர் - ஸ்ரீகுசேலமுனிவரைப் பரிகாசஞ் - செய்கிற - தரு.

இராகம் - கல்யாணி - அடதாளம்.

என்னவோயேழைப்பார்ப்பானே ஸ்ரீகிருஷ்ணனை
எப்போதுங்காணுவாய்நீ தானே
என்னவோயேழைப்பார்ப்பா னிந்தயோசனையுனக்
கெவர்கள்சொன்னார்களிது கஷ்டமானகாரியம் (என்ன
நாள்பலவாய்க்கண்டவுன்றன் கந்தையைப்பார்த்தால்
நகைக்காமல்யார் இருப்பார்
கால்கள்நோகவிந்தனை கடுந்தூரமேன்வந்தாயோ
கண்ணபிரானையுன்றன் கனவிலுங்காணமாட்டாய் (என்ன

உயரவுயரப்பறந்தாலும் சிறு
குருவிக்குருவிகருடனாமோ
பயித்தியகாரா கிருஷ்ண பகவானைக்காணமாட்டாய்
பார்த்தீபர்காத்துமசேவை யபேக்காமலிலேகிறார் (என்ன)

கண்ணனைத்தரிசிப்போர்க்கு நல்ல
கனத்த சேனைகள் வேண்டும்
திண்ணியவிரல்பத்தும் சிறக்கமோதிரம்வேண்டும்
செல்வம்வேண்டும்வேலை செய்யவாள்கள்வேண்டும் (என்ன)

மகராஜனைக்காண அவனைப்போல்
மகராஜன்போனால் கண்யம்
ஜகத்திலுனையொத்த தரித்திரர்கள்போனால்
தயையாகவாவென்று சாற்றுவொருக்காலமும் (என்ன)

எத்தனையோகோடி ராஜாக்கள்
இங்குவந்திருக்கின்றார்
அத்தனைபெயருக்கும் ஆகவில்லையேசேவை
அப்படிக்குஇருக்க எப்படிநீகாண்பாய் (என்ன)

தினந்தோறும்பிச்சைபெடுக்குந் தொழில்விட்டு
மனதிலிதையே னெண்ணினாய்
உனக்கிதுபொருந்தாது ஊருக்குப்போதிரும்பி
மனக்கவலையோடிங்கே மயங்கினாலென்னபலன் (என்ன)

கால்வயிறோ அரைவயிறோ அகப்பட்டதை
களிப்புடன்சாப்பிட்டு விட்டு
காலத்தைப்போக்காமல் கஷ்டப்பட்டிவ்வளவு
களைத்துவந்தாயேயென்ன கனத்தையடையப்போறாய் (என்ன)

செய்கிறதைவிட்டு கைக்கோளன்
நீனெடுத்தானென் பதைப்போல்
அய்யனே திவசங்க ளாகும்வீட்டிலிற்சென்று
குய்யோமுறையோவென்று கூவிப்பிச்சையெடாமல் (என்ன)

வாசலிலிருப்போர் - விருத்தம்.

எத்தனைதினங்களோதா னிங்குகாத்திருக்குமன்னர் ... *
மெத்தவுமுண்டவர்க்கு வேண்டியபொருள்களுண்டு ... *
நித்தனைக்காணவேண்டி நினைத்தாலும்பறைவாயில்லை ... *
சுத்தமாய்ப்பொருளில்லாநீ சுலபத்திற்காணலாமோ ... *

வசனம்.

நான்சொல்வதைக்கேளாய் ஏழைப்பிராமணனே? இங்கே ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியைக்காண எத்தனையோ ராஜாக்கள் அநேகம்நாளாய்வந்து காத்துக்கொண்டிருந்தும், அவர்களுக்குச்சேவைகிடைக்கவில்லை. இவர்களுக்கோ வேண்டிய ஸம்பத்துமுண்டு, எத்தனைநாள் காத்திருந்தாலும் பாதகமில்லை. ரம்பவும் தரித்திரத்தையுடையநீ அந்த மஹானுபாவனை எப்படிகாணப் போகிறாய் குசேலனே.

வாசலிலிருப்போர் - சொல் - விருத்தம்.

ஆதிகாலத்திலிந்த பழமையகண்ணனுக்குதான் ... ... *
ஓதினாயென்றவார்த்தை உண்மையாயிருக்குமானால் ... *
தூதனையனுப்பியுன்னைத் துரிதமாயழைப்பிக்காரா ... ... *
ஏதேனுஞ்செலவுக்காக இனிதுடனனுப்பிடாரோ ... ... *

வசனம்.

கேளாய்பிராமணனே? சிறுபருவத்திலே நீயும்ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியும் ஒன்றாய் வாசித்துவந்த கூட்டாளிகளென்று சொல்லுகிறாய். இந்தவார்த்தை யுண்மையாயிருக்குமானால், அந்தஸ்வாமியானவர்ஒருதூதனையனுப்பி உன்னைத்தமதிடம் அழைப்பிக்கமாட்டாரா? அல்லது உனக்குச்செலவுக்காக ஏதாவதுகொஞ்சம் திரவியம்கொடுத் தனுப்பமாட்டாரா? அய்யா.

வாசலிலிருப்பவர் - சொல் - விருத்தம்.

கந்தையைத்தரித்தவிந்தக் கடுந்தரித்திரனைக்கூடி ... ... *
நந்தகுமாரனுதி நாளையில்வாசிப்பாரோ ... ... *
விந்தைதானிந்தவார்த்தை மெள்ளவேயுள்ளேபோக ... *
தந்திரமாகப்பொய்யைச் சாற்றினாயிந்தமேரே ... ... *

வசனம்.

நான்சொல்வதைக்கேளீர் த்வாரபாலகரே, கந்தையையுடுத்துக்கொண்டிருக்கும் இந்தத்தரித்திரம்பிடித்த பார்ப்பானோடுகூட அஷ்டலக்ஷ்மீ ஸமேதராய் வாழும்படியாகிய ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி வாசித்திருப்பாரா? அப்படி யொருக்காலமுமிராது. இந்தவார்த்தை ரம்பவும் விந்தையாகவிருக்கின்றது. உங்களையேமாற்றி மெதுவாயுள்ளேபோகிறதற்காக இப்பேர்க்கொத்த பொய்யை இந்தப் பிராமணன்சொன்னான். இதை நம்பவேண்டாம் த்வாரபாலகர்களே.

வாசலிலிருப்பவர் - சொல் - விருத்தம்.

அரவமும்நெருப்பும்போலா மரசர்களுடையவிஷ்டம் ... *
தரணியிலிதனைநம்பிச் சார்ந்திடக்கூடாதென்றும் ... ... *
பெருமையாய்த்திரும்பிப்போனால் பெருமையுண்டில்லையாகில் *
வருமவமானமெய்யே வழுத்தினேன்விளங்கத்தானே ... *

வசனம்.

கேளாய்பிராமணனே! பாம்புக்கும் செருப்புக்கும் சமானமானது ராஜாக்களுடையஇஷ்டம். ஆகையால் அந்தஇஷ்டத்தைநம்பி நீருபோதிலும் போகக்கூடாது. எங்கள்வார்த்தைகளைதட்டி வந்தவழியைப் பார்த்துக்கொண்டு திரும்பிப்போனால் பெருமையுமன்றி, இதைமறுத்து உள்ளேபோவையேயானால் நமக்கும் அவமானம்வந்து சேரும்அய்யா குசேலமுனிவனே.

த்வாரபாலகர் - சொல் - விருத்தம்.

மேதினிதன்னில்ஞான மென்பேதும்பெற்றிருக்கும் ... *
மாதவரிவரை நீங்கள் வாயினில்வந்தபடும் ... *
ஏதேதோபிதற்றிவிட்ட தென்னபோங்காலமய்யோ ... *
ஓதுகின்றேனோயின்னே ருடையானன்னடக்கைதானே ... *

வசனம்.

ஓகோகோ இதென்ன விபரீதம் இந்தமஹாநுபாவருடைய தன்மையறியாமல் உங்கள் வாயில்வந்ததெல்லாம் தூஷித்துப் பரிகாசஞ் செய்துவிட்டீர். அய்யய்யோ உங்களுக்கென்ன போங்காலம்சேரிட்டது. இவருடைய நல்லநடக்கைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கோள் மூடர்களே.

வாசலிலிருப்பவர் - சொல் - தரு.

இராகம் - ஆநந்தபயிரவி - அடதாளசாப்பு.

இந்தக்குசேலமுனிவர் மிகவும்யோக்கியர் இவர்க்
கிணையெவரைச்சொல்லலாம் ஸத்தியவாக்கியர் (இந்த)
தாமரையிலைஜலம்போல் தங்கியிருப்பார் இதைப்
பூமியிலறியமாட்டார் புத்தியில்லாதோர் (இந்த)
ஒன்றுந்தெரியாதவர்போ லிருப்பார்நல்லோர் இவர்
வென்றிசேருமகிமையை விரும்பார்பொல்லோர் (இந்த)
ஆதிநாயகன்பாதத்தை யன்பாய்த்துதிப்பார் மிகப்
பாதகங்களெக்காலமும் பார்க்காதிருப்பார் (இந்த)
எடுப்பார்கைக்குழந்தைபோ லென்றுமிருப்பார் பொல்லா
மடவார்களாசையிலே மனத்தைத்திருப்பார் (இந்த)
அநியாயாதனை களைறுமினஞ்செய்வார் நல்ல
பதிவிரதையைக்கூடிப் பலத்தைக்கொய்வார் (இந்த)

பித்தருமைகளைப்போல் பேசவேமாட்டார் இவரை
எத்தனைவைதாலுங்கோப மென்றுமேமாட்டார் (இந்த)
விருப்புவெறுப்புகளை விலக்கினவர்நீறு பூத்த
நெருப்பைப்போலஜொலிக்கும் நினைக்கவரியோர் (இந்த)
அபராதம்க்ஷமிக்கவிவ ரடியைப்போற்றுங்கள் உங்கள்
அபரிமிதவினைகளனைத்துமாற்றுங்கள் (இந்த)

த்வாரபலகர் - சொல் - விருத்தம்.

பித்தரைப்போலேயிந்தப் பேதைகளுமதுசக்தி ... ... *
சித்தத்திலறிந்திடாமல் செய்தனர்பரிகாசங்கள் ... ... *
சித்தரேயிதனையிப்போ திருவுளம்பற்றவேண்டாம் ... ... *
இத்தரைதனிலுந்தன்மை யெவரறிந்திடவல்லோரே ... *

வசனம்.

நாம்சொல்வதைக்கேளீர் ஸ்வாமி? உம்முடையமகிமை தெரியாமல் இந்த மூடர்கள் அநேக பரிகாசங்கள்செய்து தூஷித்துவிட்டார்கள். இதைத்தேவரீர் திருவுளத்தில்வைக்கக்கூடாது. இவர்பேரில் பூர்ணகடாக்ஷம் வைக்கவேண்டும் மஹாநுபாவரே.

த்வாரபாலகர் - சொல் - விருத்தம்.

அருந்தவக்குன்றேநீர்தா னரைக்ஷணமிங்கிருப்பீர் ... ... *
கருமுகில்மேனியோனைக் கண்டுஸேவித்தேயும்ம ... ... *
வருகையைச்சொல்லிவிட்டு வருகிறோம்விடைகொடுப்பீர் ... *
சரணபங்கஜங்கள்போற்றி தாசரையாள்வீர்போற்றி... ... *

வசனம்.

தேவரீர் கிருபையுடன் அரைக்ஷணம் இவ்வாஸனத்தின்பேரில் எழுந்தருளியிருப்பீரானால், நாங்கள்போய் விரைந்துபோய் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிக்கு உமது வரவைச் சொல்லிவருகிறோம். எங்களைக்காப்பாற்றவந்த மஹாநுபாவரே உத்தரவுகொடுக்கவேண்டும் ஸ்வாமி.

பொது - விருத்தம்.

பழுத்தமுனியைத்வார பாலகரங்கிருத்தி ... ... *
எழுபத்திரண்டுவாச லிசைந்தகாவலையுந்தாண்டி ... ... *
முழுமுதற்கண்ணனென்போன் மொய்குழலார்களோடும் ... *
அழகாகவிருக்குமந்தப் புரத்தினையணுகினாரே ... ... *

பொது வசனம்.

அநேகோதேப்படியென்றால், குசேலமுனிவரை ஆசாரவாசலிலெழுந்தருளப்பண்ணி, எழுபத்திரண்டு வாசலின் காவல்களையுந்தாண்டி, ஸ்ரீகிருஷ்ணபகவான் ஸ்திரீரத்தினங்களுடன் லீலாவிநோதமாயிருக்கும் அந்தப்புரத்தின் வாசற்படியண்டையில் த்வாரபாலகர் வந்தாரெனக்காண்க.

த்வாரபாலகர் - சொல் - விருத்தம்.

அரும்புகழிந்தவார்த்தை யனுதினங்காத்திருக்கும் ... ... *
அரிவையீர்நாங்களிங்கே யடைந்தனமென்பதாகக் ... ... *
கருணையங்கடலாம்நம்ம கண்ணபிரான்றனக்குத் ... ... *
தெரிவிக்கவேண்டுமிப்போ சீக்கிரமாகத்தானே ... ... *

வசனம்.

கேளீர் அந்தப்புரவாசற்காவற்பெண்களே? நாங்களிங்கேவந்திருக்கிறோமென்றுகருணாசமுத்திரமாகிய ஸ்ரீகிருஷ்ணபகவானுக்குத் தெரிவிக்கவேண்டும்.

காவற்பெண்கள் - சொல் - விருத்தம்.

நந்தநந்தனயசோதை நாளுமேமகிழ்ச்சிகொள்ளும் ... ... *
சுந்தரமுகவிலாசா தூயவிவ்வாசல்வந்து ... ... *
வந்திருக்கின்றார்நல்ல மகிமைசேர்த்வாரபாலர் ... ... *
விந்தைசேர்சமுகந்தன்னில் விண்ணப்பஞ்செய்திட்டோமே *

வசனம்.

சரணம்சரணம் எங்களாண்டவனே? இந்தஅந்தப்புரத்தின் வாசலில்நமது த்வாரபாலகர் வந்திருக்கிறார். இதைவிண்ணப்பஞ் செய்தோம் ஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - மட்டுவிருத்தம்.

நாரிமாரிங்கே ... ... *
த்வார பாலகரை ... ... *
சீருடனழையின் ... ... *
தாராள மாய்த்தான் ... ... *

வசனம்.

த்வாரபாலகரைத் தக்ஷணம் உள்ளேவரச்சொல்வீர் காவற்பெண்களே.

காவற்பெண்கள் - சொல் - விருத்தம்.

த்வாரபாலகரேயிங்குத் தோன்றிநீர்வந்தசெய்தி ... ... *
சீரியகண்ணனுக்குச் செப்பினோமன்னோர்கேட்டுத் ... ... *
தாராளமாகவுள்ளே தான்வரச்சொல்லினாரே ... ... *
நீரிப்போபோவீருங்கள் நெஞ்சமகிழ்ந்துதானே ... ... *

வசனம்.

கேளீர் த்வாரபாலகரே? நாங்கள் உள்ளேபோய் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிக்கு உங்கள்வரவைச் சொன்னோம், தமது சமுகம்வரும்படிக்கு எம்பெருமான் உத்திரவு ஆச்சுதய்யன்மாரே.

த்வாரபாலகர் - போற்றி - தரு.

இராகம் - ஆரபி - தாளம் - திரிபுடை.

போற்றிபோற்றிஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியே
போற்றித்வாரகை வாசனே
போற்றிகஞ்சனை வதைத்தவல்லவ
போற்றியாயிர நாமனே (போற்றி)

போற்றிபஞ்சபாண் டவர்கள்தூதனே
போற்றியகிலாண்ட நாதனே
போற்றியெங்கும் நிறைந்ததேவனே
போற்றிகருமுகில் வண்ணனே (போற்றி)

போற்றிபரம்பொரு ளாகுமச்சுத
போற்றிதாஸானு தாஸனே
போற்றிபாஞ்சாலி மானங்காத்தவ
போற்றிகாளிங்க நட்டனனே (போற்றி)

போற்றியஷ்டலக்ஷ் மீவிலாசனே
போற்றியநாத ரக்ஷகா
போற்றியெங்களை யடிமைகொண்டவ
போற்றிகோபிகா லீலனே (போற்றி)

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

மேருவையிகர்த்ததோளீர் மேன்மையாசாரவாசல் ... ... *
த்வாரபாலகரேநீங்கள் தக்கவும்மிடத்தைவிட்டு ... ... *
நாரியர்சூழுமென்னை நாடியேன்வந்தீரந்தக் ... ... *
காரியமென்னமோதாங் கழறுவீரிப்போதானே ... ... *

வசனம்.

கேளீர்த்வாரபாலகரே? நீங்கள் காவலிலிருக்கும் இடத்தைவிட்டு ஸ்திரீகளுடன்கூடி இருக்கும்படியாகிய என்னைத்தேடி வந்தீர். அந்தக்காரியத்தைச்சொல்வீரய்யா.

த்வாரபாலகர் - சொல் - எண்சீர்விருத்தம்

அய்யனேசாந்திப ருஷியிடத்தில் ... ... *
ஆதியிலேயும்மோடு வாசித்தாராம் ... ... *
துய்யரேயவர்பெயரோ குசேலனென்றார் ... ... *
சொல்லரியவேதியர்தங் குலத்தில்வந்தோர் ... *
மெய்யரேயவரும்க்கோ மிகவுமிஷ்டர் ... ... *
என்றுரைத்தார்விண்ணப்பஞ் செய்திட்டோமே.. *
மெய்யினிலேகதையன்றி வேறேகாணோம் ... ... *
மேவினார்வாசலிலே யிப்போதானே ... ... *

வசனம்.

நாங்கள்சொல்வதைக் கேட்டருளவேண்டும்ஸ்வாமி. இப்போது நமதுவாசலில் ஓர்பிராமணர் வந்திருக்கிறார். சிறுபருவத்திலே தேவரீரும் அவரும் சாந்திபருஷியிடத்தில் ஒன்றாய் வாசித்திருக்களாம். உமக்கோ ரம்பவும்இஷ்டராம் தம்பெயர் குசேலனென்று சொன்னார். அவர்இப்போது ரம்பவுந்தரித்திரராய்க் காண்கிறார். உம்மைக்காணவந்திருக்கிறாராம். இதுதான்விண்ணப்பம் எங்களாண்டவரே.

ஸ்ரீகிருஷ்ணர் சொல் - கொச்சகம்.

இராகம் - புன்னாகவராளி.

பந்தனைகள்நீக்கிஞானம் படைத்திடுங்குசேலரென்போர்... *
வந்திருக்கின்றாரென்று வழுத்தலைக்கேட்குறுன்னே ... *
சிந்தைமகிழ்ந்தேனவர்க்குச் சீக்கிரமாயோடியென்றன் ... *
(வந்தனைகள்சொல்லியிங்கே வரவழைப்பீரிப்போதே ... *

வசனம்.

கேளீர்த்வாரபாலகரே? எனதுப்ராணஇஷ்டராகிய குசேலமுனிவர் வந்திருக்கிறாரென்று நீங்கள் சொன்னமாத்திரத்தில், ரம்பவும்சந்தோஷத்தையடைந்தேன். நீங்களிப்போது ஓடிப்போய் அந்தம்ஹானுபாவருக்கு என்னுடைய வந்தனங்களை ரம்பவும்சொல்லிச் சீக்கிரமிவ்விடம் அழைத்துவருவீர்களப்பா.

த்வாரபாலகர் - சொல் - விருத்தம்.

அருந்தவமுனிவேயுன்றனனுமதிப்படியேயென்று ... ... *
புரந்தரன்முதலோர்போற்றும் புனிதனைநாங்கள்கண்டு ... *
வரந்தருமன்னீதானிங்கே வந்திருக்கின்றீரென்று ... ... *
உரைத்ததைக்கேட்டேயன்னோர் உள்வரச்சொன்னார்தானே *

வசனம்.

நாங்கள்சொல்வதைக் கேளீர்குசேலரே? உம்முடையஉத்திரவின்படி ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியைக்கண்டு, தேவரீருடைய வரவைச்சொன்னோம். க்ஷணம்உள்ளேவரஉத்திரவுசெய்தார். எழுந்தருளவேண்டும் மஹாநுபாவரே.

த்வாரபாலகர் - சொல் - தரு.

இராகம் - அடாணா - தாளம் - ரூபகம்.

கண்ணனுக்குன்றன் வரவையறிவித்தோம் அப்போதவர்கொண்ட
களிப்பையெம்மொருநாவாற் சொல்லப்போமோ?
எண்ணிலாப்பலகாவல்தாண்டியே யின்பமகளுகின்றோமப்பால்
மாதர்சூழவிருக்குமய்யனை மனதிலன்புடன்மிகவும்போற்றியே ()
தாயின்வரவையெதிர் பார்க்குங்கன்றுபோல் கிருஷ்ணபகவானுந்
தழைத்தவரவுக்கெதிர் பார்த்திருக்கிறார் [தம்
நேயமுந்தம்மே வர்வைத்திருக்கும்
நேர்த்தியையெவர் சாற்றவல்லவர்
நீரேமிகவு மஹாநுபாவர்
பூர்ணமாய்ச்செய்தீர் புண்யபலன்களை (கண்ண)
மறையைவிரும்பி வாடியபயிர்போல் கோபாலமூர்த்தி
வரச்சொன்னாருமமைத்தேக புளகாங்கிதராய்
சொழுமறையோரே யெத்தனைமன்னர்
சேர்ந்துவாசலிற்காத் திருந்துமே
சேவைகிட்டாமலேகிறார்நீர்
செய்தபுண்யமே புண்யமய்யரே (கண்ண)
நீரேமிக்வும மஹாநுபாவரே உமதுசேவை
பாரில்நாங்கள் பார்த்ததேபுண்ணியம்
சிருலாவிய கண்ணபெருமான்
சிந்தைமகிழ்ந்து அழைத்துவரச்சொன்னார்
சீலரேயெழுந் தருளாவிட்டால்
சீக்ரமிங்கே சேருவாரவர் (கண்ண)

ஸ்ரீகுசேலர் - சொல் - தரு.

இராகம் - புன்னாகவராளி - அட தாளம்.

போவோம்வாரீர் த்வாரபாலரே
போவோம்வாரீர்
போவோம்வாரீர்ப்போ தாவல்மிகவுங்கொண்டு
புனிதனைத்தரிசித்துப் பொல்லாப்பாவமொழிக்க (போ)

நவரத்னமிழைத்த இந்தச்சுவர்
நாகரீகம்பாரீர்.
புவியிற்புகழைப்பெற்றுப் பொலியுமிக்கூடத்தில்
பொருந்துந்தூண்களொட்டும் புஷ்பராகரத்னமே. (போ)

கும்பகும்பலாக நவரத்தினம்
கொட்டியளக்கின்றார்
சம்ப்ரமமாயெங்கும் சாய்ந்துபார்த்தபோதிலும்
எம்பெருமானுருவம் எழுதியிருக்கின்றதே (போ)

பற்பலமாதர் பரதநாட்யப்
படியாடுகின்றார்
அற்புதமாமிந்த அரண்மனையைப்பாரீர்
எப்போதுங்கண்டதில்லை என்னவிந்தவிந்தை (போ)

எத்தனையோகாவல் இதனைத்தாண்ட
எவராலேயாகும்
அத்தனெந்தமூலையி லமர்ந்திருக்கின்றாரோ
சித்தமவரைநாடித் தேடியோடியிப்போது (போ)

இந்திரநகரம் இதற்கீடாமோ
இயம்புவீரய்யா
சந்தனக்தபஜனை பக்கப்பக்கம்பார்த்தாலும்
நாடிச்செய்கிறவிந்த வேடிக்கையென்னசொல்வேன் (போ)

கஸ்தூரிபுனுகு ஜவ்வாதுத்தர்
கமகமவென்றே
விஸ்தாரமாயெங்கும் வீசுகின்றதைப்பாரீர்
மேன்மைத்தேவேந்திரன் விபவமிதற்கீடாமோ (போ)

நடந்தஆயாசம் இதைப்பார்க்கக்
கடந்தோடிப்போமே
படர்ந்தபுகழ்கின்னரர் பார்த்துவெட்கமடையத்
திடந்தரும்டவார்கள் செப்புகின்றார்பதங்கள் (போ)

எழுபத்திரண்டு காவல்வாசல்
இப்போதுகடந்தோம்
செழுமடவார்களோடுஞ் சேர்ந்தகிருஷ்ணர்சமீபம்
சேரவந்தோமினி நோரர்நமக்கிப்போது (போ)

ஸ்ரீகுசேலர் - சொல் - தரு.

இராகம் - இரேகுப்தி - தாளம் - ஆதி.

ஆதிபரஞ்சோதி கிருஷ்ணமூர்த்தி என்னை
அடிமைகொண்டாளுவாய் கிருஷ்ணமூர்த்தி
சோதிநிற்சொரூபனே கிருஷ்ணமூர்த்தி கந்தன்
சுதனுவந்துதித்தோனே கிருஷ்ணமூர்த்தி
மூலமானபொருளே கிருஷ்ணமூர்த்தி நல்ல
நீலமேகரூபனே கிருஷ்ணமூர்த்தி
சீலவன்பர்கள்போற்றும் கிருஷ்ணமூர்த்தி உன்றன்
திருவருளென்மேல்வைப்பாய் கிருஷ்ணமூர்த்தி
ஆதிநாளுன்னுடனே கிருஷ்ணமூர்த்தி யான்
ஓதினேனோர்பள்ளியில் கிருஷ்ணமூர்த்தி
ஆதலாலுன்னைத்தேடிக் கிருஷ்ணமூர்த்தி இப்போ
தடைந்தேனென்னைரக்ஷிப்பாய் கிருஷ்ணமூர்த்தி
தந்தைதாய்குருநீயே கிருஷ்ணமூர்த்தி என்றன்
தழைத்தபந்துவும்நீயே கிருஷ்ணமூர்த்தி
வந்தனைகள்செய்கின்றேன் கிருஷ்ணமூர்த்தி பொல்லாப்
பந்தனைகளொழிப்பாய் கிருஷ்ணமூர்த்தி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

அருமைருக்மணியேநல்ல வழகியஸத்யபாமா ...
பெருமைசேர்ராதையின்னும் பிரியமாம்பெண்கள்கேளீர்
சிறுபருவத்திலென்னைச் சேர்ந்துவாசித்தவந்த ...
அருந்தவக்குசேலர்தம்மை யன்புடனெதிர்காண்போமே.

வசனம்.

நான்சொல்வதைக்கேளீர் பெண்களே? ஆதிகாலந்திதல் என்னோடுகூட வாசித்த இஷ்டராகிய குசேலமுனிவர் அதோவருகிறார் முன்னதாய் அவரை நாமெதிர்கொண்டு காண்போம் வாரீர் பெண்களே.

ஸ்ரீருக்மணிபிராட்டியார் - சொல் - மட்டு - விருத்தம்.

உத்தரவின்படி - சித்தமாய்நாங்கள் ... ... *
அத்தனைவருகிறோம் - சுத்தனைக்காணவே ... ... *

வசனம்.

இதோஉமது கட்டளைப்படி குசேலமுனிவரைத் தரிசிக்கவருகிறோம் என்கள் பிராணநாதரே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - பியாக்கு - அடதாளம்.

பைங்கொடியாரேபாரீர் அந்தப்
பரிசுத்தகு சேலரை
இந்தப்பூமியி லெவர்க்குமிகர்
எவரைச்சொல்ல லாமே (பைங்)

சாந்தமாகிய தன்மையும் இவர்
தயவான பார்வைகளும்
ஆத்தரியஞானமும் ஜெசல்ல
ஆரால்தர யாகும் (பைங்)

ஆதிகா லென்னுடனே இவர்
ஓதினரே கலைகள்
சாதுவானமுனிவர் நான்கு
வேதங்களையுங் கற்றோர் (பைங்)

என்றனுக்கே யிவர்தான் சம்ப
இஷ்டமானவ ரறிவீர்
அன்றிய ஜபதபங்கள் இவர்
என்றும் பிசகாதவர் (பைங்)

இவரைப்பார்த்து வெகுநாள் ஆச்சு
இன்றைக்குக்காணப் பெற்றேன்
புவியிலென்னைப்போல் நல்ல
புண்ணியஞ் செய்தவராரர் (பைங்)

இந்தவரன் மனைதான் முன்னாள்
என்னதவஞ் செய்ததோ
இந்தமுனிவரர் இங்கே
எழுந்தருளி னரே (பைங்)

எத்தனை ப்ரார்த்தித்தாலும் இவர்
ஏதேது வருகிறது
உத்தமப்பெண்களே நானே
ஓடித்தெண்ட மிடுங்கள் (பைங்)

ஐம்புலச்சேஷ்டை நீக்கி பர
மானந்தத்தைப் பெற்றவர்
அம்புஜபாதம்போற்றி எதிர்போய்
அழைத்துக்கொண்டு வரலாம் (பைங்)

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - அபுரூபம் - அடதாளம்.

தெண்டமிடுங்க ளென்னுடன் பெண்களே
தெண்டமிடுங்க ளென்னுடன்
எண்டிசையிலும்புகழ் கொண்டவிந்தக்குசேலர்
புண்டரீகபாதத்தை அண்டிக்கீழேவிழுந்து (தெண்)

பாபக்கிலிச வாசமாய் இப்போது
கபமுடன் சுத்திவந்து
மயலறுத்துய்ந்தவிம் மாதவரடிகளை
வந்தனைகள்செய்வீர்கள் சிந்தைமகிழ்ந்தவரை (தெண்)

அருமைசேர் புட்பங்களால் இவர்
திருமேனியை நிறைத்து
பெருமையாய்ப்பூசனை புரியக்கிடைத்ததே
தனையினிவரைப்போல் தன்னியாரார்சொல்வீர் (தெண்)

அடியற்றபனை மரம்போல் கீழ்விழுந்
தடிக்கடிதெண்ட மிட்டு
இடாறவருவீர்க ளிம்முனிவரர்சேவை
என்னகோத்திரமோகோ அன்னம்போன்றநடையீர் (தெண்)

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

அக்கியானத்தைநீக்கு மய்யவென்னிஷ்டர்தம்மில் ... ... *
முக்கியமானவல்லை முனிவரே போற்றிபிக்கப் ... *
பக்குவவாசனத்திற் பரிவுடன்கருணைகூர்ந்து ... ... *
சிக்கெனவீற்றிருப்பீர் திருவுளமகிழ்ந்துதானே ... ... *

வசனம்.

என்னுடையஇஷ்டர்களில் முக்கியமாகிய குசேலமுனிவரே? இதோயான் போட்ட இந்தநவரத்தினமிழைத்த பொன்ஆசனத்தின்மேல் மிகவுங்கிருபை செய்து எழுந்தருளவேண்டும்ஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - கொச்சகம்.

இராகம் - புன்னாகவராளி.

எத்தனையோநாளாக வேழையேனுமைக்காணச் ... ... *
சித்தம்வைத்தேனிதுவரையிற் சித்திக்கவில்லையிப்போ ... *
தத்தம்மையிருவர்களு மன்புடனேசந்தித்தோம் ... ... *
உத்தமனேயானடைந்த வுவப்புரைத்துமுடியாதே ... *

வசனம்.

கேளீர் குசேலமுனிவரே? எத்தனையோநாளாக யான் தேவரீரைக்கண்டு சேவிக்க நினைத்திருந்தேன். இப்போது நாமிருவரும் ஒன்றாகக்கூடும்படி யாகிய நல்லகாலம்வந்தது. நானடைந்தசந்தோஷம் சொல்லிமுடியாதய்யா ஸ்ரீ புருஷோத்தமரே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - கொச்சகம்.

இராகம் - புன்னாகவராளி.

இந்தவரண்மனைசெய்த வினையில்லாப்புண்ணியமோ ... *
பைந்தொடியார்திதஞ்செய்த பகாரியநற்றவமோ ... ... *
சிந்தைமகிழ்ந்தடியேன்முன் செய்திடும்பூஜாபலனோ ... *
வந்துசுவாமிகளிங்கே மனமகிழ்ந்துதோன்றியதே ... ... *

வசனம்.

இந்த அரண்மனைசெய்த புண்ணியமோ? அல்லது இதோவிருக்கும்வனிதா ரத்நங்கள்செய்த நல்லதவமோ? அடியேன் முன்னஞ்செய்த பூஜாபலனோ? தேவரீர்இவ்வளவுதூரம் கடாக்ஷித்தெழுந்தருளியது ஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

பைந்தொடியாரேநீங்கள் பகருமென்சொல்லைக்கேளீர் ... *
சிந்தைதானமகிழ்ந்திப்போது சீக்கிரமாகவோடி ... ... *
விந்தைசேருதகத்தினை விரைவுடன்குடத்திற்கொண்டு ... *
வந்திடிவரைஸ்நானம் வண்மையாய்ச்செய்விப்போமே ... *

வசனம்.

நான்சொல்வதைக்கேளீர் ஸ்திரீரத்நங்களே? இந்தக்குசேலமுனிவருக்கு
இப்போது ஸ்நானஞ்செய்விக்கவேண்டும். ஆகையால் நீங்கள் சீக்கிரமாய்க்
குடங்களில் பரிசுத்தமாகிய புதியஜலங்கொண்டுவாரும் பெண்களே.

ஸ்ரீருக்மணிபிராட்டியார் - முதலானோர் - சொல் விருத்தம்.

புருஷருக்கிரவைத்தள்ளும் பூவையருலகிலுண்டோ ... *
கருமுகில்வண்ணனேநின் கட்டளைப்படியேயிப்போ ... *
தருமையாம்புதியநீரை அன்புடன்கொண்டுவந்தோம் ... *
பிரியமாயிவரைஸ்நானம் பெருமையாய்ச்செய்விப்பீரே ... *

வசனம்.

கேளீர்எமது ப்ராணநாதரே? புருஷருத்திரவைத் தள்ளத்தக்கஸ்திரீகள் உலகத்திலுண்டோ? தங்களுத்தரவின்படி இதோபொற்குடங்களில் புதியஜலம் கொண்டுவந்தோம். இந்தக்குசேலருக்கு ஸ்நானஞ்செய்விப்பீர் ஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - கண்டா - தாளம் - மிசுரம்.

ஸ்திரீகளே முனிக்கு ஸ்நானஞ்
செய்விப்போம்
ஸ்திரீகளேநாம் வேகமாக
நாகரிகமாம் யோகியைப்போற்றி (ஸ்திரீ)

மங்கைகாள் உத கங்கொண்டு
வருவீர்கள்
துங்கருசேலர் தங்கமுழுவதும்
செங்கையாற்கழுவி அங்கம்பூரித்து (ஸ்திரீ)

உதகக்கைமெதுவா யிவர்மே
லூற்றுவீர்
அதிகபிரயாச முதிக்கவொட்டாமல்
மெதுவாயுடல்முழு வதையுந்தடவி (ஸ்திரீ)

காலமோ வந்தமாச்சு
காணுவீர்
சீலசிந்தைக்கு சேலமுனிபதம்
சாலவுங்கழி காலத்திலென்று (ஸ்திரீ)

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

அருந்தவமுனிக்குஸ்நான மாசகுதிவ்வஸ்திரத்தால் ... ... *
பெருமையாயிவருடம்பைப் பிரியமாயிதோதுடைத்தேன் ... *
கருங்குழலமைந்தநல்ல காரிகைமாதர்களே ... ... *
இரும்பீதாம்பரத்தைக்கொண்டுவாருங்கள் [illegible] ... *

வசனம்.

இந்தக்குசேலமுனிவருக்கு ஸ்நானஞ்செய்வித்தாச்சு. இதோ உலர்ந்த வஸ்திரத்தால் இவர் உடம்பைத்துடைத்தேன். ஸ்திரீகளே இவருக்கு உடுத்த பீதாம்பரத்தைக் கொண்டுவந்து என்கையில்கொடுங்கோள் பெண்களே.

ஸ்திரீகள் - சொல் - கட்டளைக்கலித்துறை.

மகிதலத்தோர் துதி த்வாரகைவாசமகிமைபெறும் ... ... *
மிகுபுகழுனதுமதியின்படி வேகமதாய் ... ... *
அகமகிழ்ந்தேகிப்பொற்பீதாம்பரத்தை யரைநொடியில் ... *
இகழ்வின்றிக்கொண்டுவந்துன் செங்கரத்திலளித்தனமே ... *

வசனம்.

கேளீர்ஸ்வாமி? உமதுஉத்திரவின்படி இதோபோய்ப்பீதாம்பரத்தைக்கொண்டுவந்து உமதுகையில்கொடுத்தோம், எங்களாண்டவரே!

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - நேரிசைவெண்பா

பாதகத்தைப்போக்கிப் பரமஞானத்தன்னைப்
போதவும்பெற்றேவிளங்கும் புண்ணியனும் - ஓதபுகழ்
இம்முனிவரன்ற னிடையிற்பீதாம்பரத்தைச்
செம்மையுறக்கட்டினனியான் றேர்ந்து

வசனம்.

இதோஇந்தக் குசேலமுனிவருடைய இடையில் இந்தப்பீதாம்பரத்தைக் கட்டினேன் பெண்களே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - கட்டளைக்கலித்துறை.

மிஞ்சும்பசாரமைட்பொற் பீடம்போட்டனன்வேகமதாய் ... *
கொஞ்சங்களித்துத்திருமண்ணை யிட்டனனெற்றியிலே ... *
வஞ்சனைநீக்குமிவர்கர்த்தையை யிதோவாங்கினைவத்தேன் ... *
செஞ்சரண்போற்றிமலர்கொண்டு பூசனைசெய்குவனே ... *

வசனம்.

இதோபொன்னாலாகிய மணையை இவருக்குப்போட்டேன். திருமண் ஸ்ரீசூர்ணத்தை இவர்நெற்றியிலிட்டேன். இந்தப்பழையகந்தையையாகிலும் அப்புறம் வைத்தேன். இந்தமஹானுபாவனைப் பூஜைசெய்கிறேன் பெண்களே.

பூசனைசெய்கிற - தரு.

இராகம் - கமாஸ் - அடதாளம்.

பூசனைசெய்கின்றேன் இந்தப்
புண்ணியகுசேலனைக் கண்யமாக (பூசனை)
அன்றுபூத்தபுஷ்பமெடுத்து இவர்
வென்றிசேர்திருமேனியை மிகவும்கிளைத்து (பூசனை)
வாசனையாகியமல்லிகை இதை
நேசமாய்க்கையிலெடுத்து கெஞ்சங்களித்து (பூசனை)
வண்டுமொய்க்கத்தேனொழுகும் இந்தப்
புண்டரிகபுட்பங்கொண்டு பொன்னடிகளை (பூசனை)
பலவிதமலர்கள் திருத்தமாய் கைக்கொண்டு
நலம்பெறுமொரேமனதாய் நான்கடைத்தேற (பூசனை)

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - மட்டுவிருத்தம்

கருத்துடனே யிதோ ... ... *
அருக்கிய பாத்தியம் ... ... *
திருத்தமா யளித்தேன் ... ... *
பெருத்தமா முனிக்கே ... ... *

வசனம்.

இந்தக் குசேலமஹானுபாவருக்கு இதோ அருக்கியபாத்தியம் ஸமர்ப்பித்தேன் ஸ்திரீகளே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

சாபானுக்ரகத்தைப் பெற்ற தக்கவிம்மாதவர்க்கு ... ... *
தூபதீபங்களாதி சோடசவுபசாரங்கள் ... ... *
தாபமதறவேசெய்து நடையறமுடிந்ததிப்போ ... ... *
பூபுகழ்பூதம்போன்ற பொசிப்பளிக்கின்றேன் [illegible] ... *

வசனம்.

சாபானுக்ரகத்தைப்பெற்ற இந்தக்குசேலருக்குத் தூபதீபங்களை ஸமர்ப்பித்தேன். சோடசவுபசாரங்களையும் இதோசெய்தேன். இவருக்கு [illegible] [illegible] செய்விப்போம் பெண்களே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - மட்டுவிருத்தம்.

இக்குநன் மொழியீர் ... ... *
பக்குவ போஜனம் ... ... *
இக்கண முனிக்குத் ... ... *
தக்கணந் தோணர்வீர் ... ... *

வசனம்.

இந்தக் குசேலமஹாநுபாவருக்குப் போஜனம் சீக்கிரமாய்க் கொண்டுவருவீர் பெண்டிர்காள்.

ஸ்திரீகள் சொல் - மட்டுவிருத்தம்.

அண்டர்கள் துதிக்கும் ... ... *
புண்டரீ காக்ஷா ... ... *
கொண்டுவந்தோ மிவர்க் ... ... *
குண்டிதா னிப்போ ... ... *

வசனம்.

உம்முடைய கட்டளைப்படி இதோ போஜனபதார்த்தங்கள் கொண்டுவந்தோம் ஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - சங்கராபரணம் - அடதாளசாப்பு.

இந்தவுண்டிகளைச் சாப்பிடுவீர் சாப்பிட்
டிளைத்துவந்தவாயாசமவிடுவீர் (இந்த)
பக்ஷணங்கள் பாக்கியவானே
பிக்ஷைதமகிழ்ஞான சிலாக்கியவானே (இந்த)
வல்லன்பாணபத விஷ்டரே வாழை
இலைபோடக்கொண்டுபோட்டேன் சிஷ்டரே
அன்னமபிஷேகத்தக்கச் செய்யுமினிற்றீர்த்தம்
இன்பமுடன் வைத்தேன் இனியபதார்த்தம் (இந்த)
பாயசமுடன் சர்க்கரைச் சேர்த்தேன் அதன்மேல்
பரிபூரணமெய் நெய் வார்த்தேன்
இருப்புடன் புசிக்கவும் மினிர்வார் இட்டுகிறேன்
தனிப்பிடிக்கோருக்கோன் தருமிஷ்டம்காட்டுகிறேன் (இந்த)
கடந்துவந்த வாயாசம் இப்போ
கடந்தோடக்கொள்வீர் பாயசம்
இடக்காதமேட்டோங்கு சேருக்கபிர்குடிப்பீர்
படர்ந்தபுகழோயென்மன்பால் கிருபைவைப்பீர் (இந்த)

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - மட்டுவிருத்தம்.

மேயரிற் சிறந்த ... ... *
தூயமாதவ ரின் ... ... *
வாலையுங் கையையும் ... ... *
தோயத்தி லலம்பினேன் ... ... *

வசனம்.

எனதுஇஷ்டர்களிற் சிறந்துவிளங்கும் இந்தக்குசேலர்சாப்பிட்ட வாயையும், கையையும் இதோஜலம்விட்டு அலம்பினேன் ஸ்திரீகளே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - மட்டுவிருத்தம்.

குற்றமில் லாத ... ... *
நற்றவா கொள்வீர் ... ... *
வெற்றிசே ரிந்த ... ... *
வெற்றிலைப் பாக்கே ... ... *

வசனம்.

நான் தேவரீருக்குக் கொடுக்கும் இந்தவெற்றிலைப்பாக்கை அங்கீகரிக்கவேண்டும் ஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - கொச்சகம்.

வஞ்சனைகள் தீர்ஞான மாமணியே யடியேன்றன் ... ... *
மிஞ்சியமேயரிற்சிறந்த வித்தகனேயிதோவிருக்கும் ... *
பஞ்சணைமெத்தையின்மீது பரிபூர்ணகிருபையுடனே ... *
கொஞ்சமிளைப்பாறித்தா கொள்வீர்மாதவக்கடலே ... *

வசனம்.

ஐம்புலச்சேஷ்டைகளையடக்கிப் பிரகாசித்துவரும் ஞானசிரோமணியாகிய ஓகுசேலமுனிவரே? அடியேனுடைய இந்த இலவம்பஞ்சுமெத்தையின்மேல்தேவரீர்கொஞ்சம் இளைப்பாறக்கிருபையுடன் சயனித்துக்கொள்வீர்மஹாநுபாவரே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - எமுனாகல்யாணி - தாளம் - ரூபகம்.

ஐயாகுசேலரே அருந்தவசீலரே
மெய்யாவிசிறியின்றே மேவிவிசிறுகின்றேன் (ஐயா)
திருமேனியில்துன்பம் ஜெனித்ததோவின்பம்
மருவவிசிறுகின்றேன் வந்தனைதருகின்றேன் (ஐயா)

திருவுளமிப்போது திரும்பிற்றோவென்மீது
பெருங்கன்னியறுனே னிரங்காமுந்தானே (ஐயா)
இவ்வளவுகாதம் ஏன்வந்ததோபாதம்
செவ்வைஞானப்ரகாச செழுங்கரும்புமேல்வீசு (ஐயா)

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

உத்தமமுனிவரியாமீ குருமடிமீடம்வரவேசொல்லி ... ... *
உத்தரமெழுதிவிட்டா லுடனேயாள்வரமாட்டேனோ ... *
இத்தனைகாததூர மேன்வந்தீர்வருத்தப்பட்டே ... ... *
அத்தரேயும்பாதத்தை யன்புடனமுக்குவேனே ... ... *

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - செஞ்சுருட்டி - அடதாளம்,

அமுக்குகிறேனையா திருவடியை
அமுக்குகிறேனையா

இமையவர்க்குமெட்டா இனியபுகழ்பெற்ற
கமலபாதங்களைக் கையால்தடவியிப்போ (அமு)

வழிநடந்திளைத்ததோ இந்தவடி
வாடியேகளைத்ததோ

முழுமையன்புடனிப்போ பழையவென்னையே
பிழையறமெதுவாகப் பிடிக்கிறேன் தூயரே (அமு)

சங்கோசத்தையோட்டும் அடியேன்பேரில்
தாளிரண்டும்நீட்டும்

அங்கமேன்கூசுவீர் அடியேனுமதுதொண்டன்
செங்கையால்பிடித்திடோ செய்கிறேன்கோடிதெண்டன் ()

கருணையென்மேல்செய்யும் மடியின்மேல்
கமலபாதம்வையும்

திருவடிநொந்ததோ சிவந்துகொப்புளித்ததோ
மருவவென்றலைதன்னில் வைத்துக்களித்ததோ (அமு)

பொது - எண்சீர் - விருத்தம்.

மகிமைபெறுங்கண்ணபிரா னுலகிலுள்ள ... ... *
மானிடர்போலபினயித்து மேலுமேலும் ... ... *
அகமுருகியுபசாரஞ் செய்யவப்போ ... ... *
தருந்தவருக்கொன்றுந் தோன்றுமல்தாழும் ... *

ஜகமுண்டபெருமானை மனத்திருத்தித் ... ... *
தத்தேகத்யானமாயேதுஞ் சிந்தையின்றி ... ... *
நருநீடம்போலவசை வற்றுகின்றார் ... ... *
நாதன்பின்னடத்தியதை நவிலுவேனே ... ... *

வசனம்.

ஸாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியானவர் உலகத்திலுள்ள ஸாதாரணமனிதர்களைப்போலக் குசேலமுனிவரைக்கண்டு, அநேகவித வந்தனைகளைச்செய்து ரம்பவும் சோடசஉபசாரங்களைசெய்ய, மேற்படி முனிவர் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியைத்தம்மனத்தில் மிகவுந்துதித்து ஆனந்தப்பரவசராய்த் தம்சரீரம்மறந்து அசையாமல் பிரமித்திருந்தார். அதன்பின் எம்பெருமான் நடத்தியிட்டது வருமாறு காண்க.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - சேருப்பி - அடதாளம்.

நீர் என்னுயிர்க்குயிரானவி வினையில்லாதநல்ல இஷ்டரே
மன்னியகுசலமதாய் வாழ்ந்திருக்கிறீரா இஷ்டரே
எந்தவூரினிலேநீ ரிருக்கின்றீரதைச்சொல்லும் இஷ்டரே நல்ல
அந்தவூரினில்மழை யுண்டாவறிவிப்பீர் இஷ்டரே
இத்தனைநாளாக ஏனென்னைமறந்தீரோ இஷ்டரே உமது
சித்தமென்மேலிப்போ திரும்பிக்கடாக்ஷித்ததோ இஷ்டரே
மலையைப்போலச்செல்வம் வந்திருந்தாலுமே இஷ்டரே இந்த
உலகில்மறப்பாரோ வுத்தமர்சிநேகத்தை இஷ்டரே
விமலரேயுமைக்கண்டு வெகுநாள்களாச்சுது இஷ்டரே எப்போ
தமைந்ததுகலியாண மரும்பிள்ளையெத்தனை இஷ்டரே
மனைவியின்பேரென்ன மக்கள்பேர்களென்ன இஷ்டரே உமது
அனுமதியின்படி அவள்நடக்கின்றாளா இஷ்டரே
குழந்தைகள்கேட்டதைக் கொடுத்துவருகிறீரா இஷ்டரே நல்ல
செழுமனையைக்கட்டிச் சீராய்வாழ்கின்றீரா இஷ்டரே
தனயர்க்குபநயனச் சடங்குகள்முடிந்ததா இஷ்டரே உம்
மனைவிபதிவிரதா வழியிலிருக்கிறாளா இஷ்டரே
பதினெட்டுவகையான பலகாரங்களுடன் இஷ்டரே என்
அந்தரேபோஜன மனுதினமுண்பீரா இஷ்டரே
எவ்வளவுநகை யியற்றினீர்மனைவிக்கு இஷ்டரே அந்தச்
செவ்வையானநகை திறுசுகின்னவென்சொல்வீர் இஷ்டரே

வருவீர்வருவீரென்று வழிபார்த்துக்கண்பூக்க இஷ்டரே பல
திருப்பங்களையெழுதி நேற்றுவரையிற்போட்டேன் இஷ்டரே
வரப்பட்டவர்களிடமுமதுக்ஷேமலாபத்தை இஷ்டரே நேற்று
வரைக்கும்விசாரித்தேன் வாயுமநோகிறதய்யா இஷ்டரே

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

கட்டியும்புரண்டுங்கீழ்மேல் களிப்புடன்விழுந்தெழுந்தும்... *
இட்டமாம்பாலியத்தில் செய்திடும்விளையாட்டெல்லாம் ... *
கெட்டியாயுமதுநெஞ்சில் வியாபகமிருக்குதோதான் ... *
மட்டில்லாஞானம்பெற்ற மாதவருணர்த்திடீரே ... *

வசனம்.

கேளீர்குசேலரே? பாலியத்தில் நீரும்நானும் ஒருவரோடொருவர் கட்டிக்கொண்டும், புரண்டும், உம்மைநான் தள்ளியும், என்னைநீர் தள்ளியும் விளையாடிவந்தவிளையாட்டுகளெல்லாம் உமதுவியாபகத்தில் வைத்திருக்கிறீரா? சொல்வீர் அய்யா.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - அகவல்.

இராகம் - எதுகுலகாம்போதி.

என்னுயிர்க்குயிர்போ லிருக்குமிஷ்டரே
முன்னாள்சாந்திப் முனிவருடைய
நன்றிசேர்பள்ளியில் நாமிருவர்களும்
ஒன்றாய்க்கூடி ஓதிடும்போது
குருபத்தினியாம் கோதிலாத்தன்னை
வருவீரெனநமை மகிழ்வுடனழைத்து
அடுப்பெரித்திடவே அடர்விறகில்லை
இடப்படுங்காட்டிற் சென்றேநீங்கள்
கட்டைகள்வெட்டிக் கட்டிவாருமென்
றட்டியில்லாமல் அனுப்பியபோது
கஷ்டப்பட்டுக் காடெலாந்திரிந்து
வெட்டினோமப்போ வேண்டியவிறகு
காலிலநேகம் கடினமாமுள்ளுகள்
சாலவுந்தைத்துத் தத்தளித்தோமே
இரண்டுபெருஞ்சுமை யிணைக்கவேகட்டிச்
சிரசினில்வைத்துத் திரும்பியேவருகையில்
திரண்டதோர்மேகம் சேணிடைப்பரவி
இருண்டிடவுலகம் ஏகமாயிடிகள்

இடிக்கவேகேட்டு இதயங்கலங்கித்
திடுக்கிட்டோமே சிக்கெனவங்கே
மருவியவோர்பாழ் மண்டபந்தனிலே
இருவருமேபோய் இருக்குமச்சமயம்
இரவுமுழுதும் இடைவிடாமல்மழை
வருஷித்திடவே மயங்கிவாடினோம்
பொழுதுவிடியும் போதுமட்டுக்கும்
வழுவறவந்த மண்டபமிருந்தோம்
சூரியோதயத்தில் துரிதமாகத்தான்
சீரியகுருவும் தேடியேவந்து
நம்மைக்கண்டு நனிமகிழ்வுடனே
செம்மைசேராசிகள் செப்பியேபின்பு
அழைத்துவந்துதம் அகத்தினில்விட்டார்
செழித்தவிச்சங்கதி சிந்தையிலிருக்குதோ

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

பேயொடுபழகினாலும் பிரிகிறதருமையென்றே ... ... *
தூயவர்சொல்லும்வார்த்தை தொல்லுலகத்திற்பொய்யோ... *
நேயரேமுன்னாள்கொண்ட நிலைத்தபாலியத்தினிஷ்டம் ... *
காயமுள்ளளவும்போமோ கழறுவீர்முனிவர்கோவே ... *

வசனம்.

கேளீர்குசேலமுனிவரே? பேயொடுபழகினபோதிலும் பின்புஅதைவிட்டு நீங்குகிறது அருமையென்று பெரியோர்கள் சொல்வார்கள். ஆகையால் நீரும் யானும் ஆதிகாலத்தில் ஒன்றாய்க்கூடி விளையாடிவந்த அந்தப்பாலிய இஷ்டம் இந்தச்சரீரம்உள்ளளவும் போகாதுஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - அடாணா - தாளம் - ரூபகம்.

எனக்கென்னகொண்டுவந்தீர் குசேலரேநீர் (எனக்)
எனக்கென்னகொண்டுவந்தீ ரித்தனைநாள்பொறுத்து
எழுந்தருளினீரே செறுந்தவசிகாமணி (எனக்)
இஷ்டனைக்காணவந்தீர் ரம்யச்சந்தோஷம்
என்னவெனக்குத்தந்தீர்
இட்டமாகும்பாலிய சிநேகத்தைமறந்தீரோ
சிறுதிண்டியின்பேரிலென் கருத்தோவோடுகிறது (எனக்

வெறுங்கையாய் வரமாட்டீர் கொண்டுவந்ததை
மேன்மையாயெடுத்துக்காட்டீர்

தரைபுகழுமது சங்கோசந்தக்கபடி
பிரியமாய்க்கழுட்டாலும் பெரியபொன்னுவேலனை (என)

சங்கோசத்தைவிடும் கொண்டுவந்ததைத்
தாராளமாகக்கொடும்

துங்கரேகங்களை இங்குநீகொடுத்தாலும்
அங்கம்பூரிக்குமலே ஆளவாலென்னுவேலனை (என)

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

பற்பலநாள் தரித்துப்பார்க்கவேவந்திரென்னை ... ... *
இப்பொழுதுபோதுக்கே என்ன[illegible]தான்கொண்டுவந்தீர். ... *
அப்பமேனுமெனைப்போ தன்புடன்கொடுப்பீராவல் ... *
செப்புமாகந்தங்கொள்வேன் செழுக்தவருளவர்தோலே... *

வசனம்.

அநேகநாள்கழித்து இந்த இஷ்டனைககாணவந்தீர். எனக்கென்ன கொண்டுவந்திருக்கிறீர். அதையிப்போதெடுத்தென்கையில் தேவரீர்கொடுத்தால் அடியேன்மிகவும் சந்தோஷமடைவேன் குசேலரே.

ஸ்ரீகுசேலர் - சொல் - விருத்தம்.

ஜெகம்புகழ்கபடநாடக தாரியின்றிருடத்தைப் ... ... *
பகர்ந்திடவெவராலாகும் பாமரர்களைப்போல்நீதான் ... *
மிகவபிநயித்தநேக விதவினோதஞ்செய்கின்றாய் ... ... *
நிகரிலாவென்றன்சக்தி நெஞ்சத்திலறிந்திடாயோ ... ... *

வசனம்.

கபடநாடகதாரியாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஒன்றுந்தெரியாதவர்களைப் போலஅபிநயித்து நீயென்னோடு இப்போதுசெய்கிற இந்தத்திருவிளையாட்டை என்னவென்றுசொல்லுவேன். என்னுடையசக்தி யுனக்குத்தெரியாதா என் அய்யனே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

விமலரேநீர்தாமிங்கே வெறுங்கையாய்வரவேமாட்டீர் ... *
சமமிலாவுனதுதேவி தந்தனுப்பியேயிருப்பாள் ... ... *
அமர்பக்ஷணத்தின்மேலி லாசையோமிகவுமுண்டு ... ... *
இமையவரேத்துமென்ற னிஷ்டரேயறிந்திடீரே ... ... *

வசனம்.

ஏதோகோநல்லவார்த்தைசொன்னீர் குசேலரே? நீர் என்னைப்பார்க்கவந்தீர். ஒருகாலத்திலும்மெ[illegible]கொன்றும் கொண்டுவராமல் வெறுங்கையாய்வந்திருக்கமாட்டீர். நீர் ஒருவேளை அப்படிவந்தபோதிலும் உம்முடையமனைவியெனக்கொன்றும் உம்மிடத்தில் கொடுத்தனுப்பாமல் இருக்கமாட்டாள் இப்போது ஏதாவது பக்ஷணம் சாப்பிடவென்வாய் ஊறுகிறது அறிந்துகொள்வீரென்னிஷ்டரே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

கந்தையிலோர்பக்கத்தில் தாரிப்புடன்முடிந்திருக்கும் ... *
விந்தையாமுடிதானென்ன விசேமானவஸ்துவையா... ... *
அந்தமூட்டையையவிழ்த்தே அதிலுள்ளபொருளெடுத்தச் *
சிந்தைதான்களிவுகொண்டு சீக்கிரமாய்ப்பார்ப்பேனே ... *

வசனம்.

இதோ உமதுகந்தையிலொருபக்கத்தில் முடிந்துவைத்திருக்கிறீரே இதனைமுடிச்சை என்கையால் அவிழ்த்துப்பார்க்கிறேன். ஒருசேலமாதுறாது [illegible].

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - சாப்பு.

இந்தவவல்மிகயோக்யம் [illegible] இதை
இன்றுநான்சாப்பிட[illegible]பாக்யம் (இந்த)

எவர்க்குமிதுகிட்டாது [illegible] நல்ல
இனியதேவர்கட்கு[illegible]கிட்டாது
பலக்ஷதாரவொட்[illegible] இதை
பரிவுடனின்று[illegible]தட்டாது (இந்த)

ஏதோகோவிதென்ன [illegible] இதில்
ஒருபிடியவல்தின்றேன் பெற்றேனேகீர்த்தி
வாகைபெற்றஞான [illegible] கொண்டு
வந்ததுலயித்ததென் புண்யமெ[illegible] (இந்த)

வாயினிலேயள்ளிப் போட்டேன் இதை
மற்றொருவர்கண்ணில்காட்டவேமாட்டேன்
தாயமனதையெங்கும் நாட்டேன் இப்போ
துள்ளமிதன்ருசிகண்டு கோட்டமிட்டேன் (இந்த)

வீசுகின்றதுநல்ல வாசம் மிக
வெகுப்பாயொன்றைப் போலென்னப்ரகாசம்
காசினியிலிவரைப்போல் நேசம் நான்
காணக்கிடைக்குமோர் நல்லசகவாசம் (இந்த)

பொது - எண்சீர் - விருத்தம்.

எம்பெருமான் குசேலமுனி கொண்டுவந்த ... *
இணையில்லாவவலினிலோர் பிடியெடுத்துச் ... *
செம்பவளவாயதனிற் போடும்போதே ... *
செல்வமிகவுண்டாச்சு குசேலருக்கே ... *
சம்ப்ரமமாகவே மற்றோர்பிடியெடுத்துச் ... *
சாப்பிடும்தன்னேநுங் கிருஷ்ணருமோசென்று ... *
உம்பர்துதிக்கும் ஏவல்செய்வோமென்றே ... *
யுளம்நினைத்து ருக்மணிதான்மறுத்திட்டாளே ... *

வசனம்.

அகோதெப்படியென்றால் குசேலமுனிவர்கொண்டுவந்த அவலினில் ஒருபிடியெடுத்து ஸாக்ஷாத் ஸ்ரீகிஷ்ணமூர்த்தி தன்வாயிலெடுத்துப் போட்டுக்கொண்டதக்ஷணம் மேற்படிமுனிவருக்கு அளவில்லாதசம்பத்துகள் அவரிருக்குமிடத்திலுண்டாச்சு. இன்னுமொருபிடியவலெடுத்து ஸ்வாமிதன்வாயில்போட்டுக்கொள்வாராகில் தானும் தனது நாயகராகிய கிருஷ்ணபகவானும்போய் அந்தக்குசேலருக்குஎப்போதும் பணிவிடைசெய்துகொண்டு அவரிடத்திலேயேயிருக்கவேண்டிவருமென்று,பின்வரப்போகிறதையோசித்து ஒகோகோ என்னவிபரீதமென்றுநினைத்து எம்பெருமான் மற்றோர்பிடியவலெடுத்து வாயில் போட்டுக்கொள்ளும்போது அப்படிசாப்பிடாதபடி உடனேயோடிவந்து ருக்மணிதேவி தன்புருஷர்கையைக் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு அப்போது சொல்லுகிறவிதங்காண்க.

ஸ்ரீருக்மணிபிராட்டியார் - சொல் - விருத்தம்.

உம்முடையிஷ்டரிங்கே உவப்புடன்கொண்டுவந்த ... *
செம்மைசேரவல்நீர்மாத்ரம் தின்றுதலடுத்திடாது ... *
எம்மாலேயெனக்குங்கொஞ்ச மின்புடனளிக்கவேண்டும் *
சம்மதமில்லையோதான் சாற்றுவீரடியாருக்கே ... *

வசனம்.

உமதுப்ராணவிஷ்டர்கொண்டுவந்த இந்த அவலை நீர்மாத்திரந்தானா?சாப்பிடுகிறது. எனக்குங்கொஞ்சம் அவல்கொடுக்கக்கூடாதா? அப்படிகொடுக்க உமக்குச்சம்மதமில்லையாசொல்வீர் ஸ்வாமி.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - கொச்சகம்.

இந்தவவலைனிலோரா னிப்போதோர்பிடியெடுத்துப் ... *
புந்திமகிழ்ந்தென்வாயில் போட்டுக்கொள்தக்ஷணமே ... *
அந்தமறவாழ்ந்த மனைக்கிட்டேனிதுபோதும் ... *
கந்தையிலிவ்மிக்கவைபான் கட்டிசறுத்தோய்முடிந்தனனே *

வசனம்.

ஐயாகுசேலரே நீர்கொண்டுவந்த இந்த அவலினில் ஒருபிடியெடுத்து என்வாயில் போட்டுக்கொண்டதக்ஷணம் ரம்பவும்சந்தோஷமடைந்தேன். இவ்வளவே அடியேனுக்குப்போதும் மிகவும் திருப்தியாச்சு. மற்றமீதியாகிய அவலை மிகுதாவும்முடைய கந்தையில் முடிந்துவிட்டேன். என்னிஷ்டசிகாமணியே.

பொது - வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியானவர் தமது இஷ்டராகிய குசேலமுனிவருக்கு இராத்திரிபோஜனஞ்செய்வித்துப்பிறகு தமது பஞ்சணைமெத்தையின்மேல் நித்திரைசெய்வித்து,உதயமானவுடனே அந்தமஹானுபாவர் நித்யகர்மானுஷ்டானம் முடிந்ததே அவர் கையைக்கோர்த்துக்கொண்டு ஸ்திரீகளெல்லாம் தம்மைச்சூழ்ந்துவர - எட - வாசற்காலல்களையுந்தாண்டித் தெருவாசற்படிவரையிலும்வந்து, மேற்படியெம்பெருமான் குசேலரைப்பார்த்துச்சொல்லுகிறவிதங்காண்க.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - தரு.

இராகம் - கருட்டி - தாளம் - ஆதி.

ஊருக்குப்போய் வருகின்றீரா
உள்ளதறிந்திட்டீரே என்னுடையவிஷ்டரே (ஊரு)

பாருக்குளுமது சேனை யாருக்குக்கிடைக்கும்காணே
படைத்தனேனிர்த்தி கடைக்கேதினேன்பூர்த்தி (ஊரு)

திரும்பியெப்போ நீர்வருவீர்
செப்புமெனக்கய்யிர் அற்புதமாக்துய்யிர்
தேவரீர் கருணையையும்

அருள்பெற்றோனமூர்த்தி இருமறைகளையுணர்
அருமைமனத்தீர் பெருமைகனத்தீர் (ஊரு)

உம்முடைய தேவியாருக்கே
உரைப்பீரென்க்ஷேமத்தை மறைத்திரேகாமத்தை
ஓகோவெப்போ தும்மைக்காண்பேன்

செம்மைசேர்க்ஷேமமாயச் செழுங்கடிகமெழுதும்
எம்மானேமெய்யாய் இம்மாத்திரஞ்செய்யீர் (ஊரு)

பொது - வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி குசேலரை அவருடைய ஊருக்கனுப்பிவிட்டு, தம் அரண்மனையிலே போயிருக்கும்போது ஸ்திரீகள் எம்பெருமானைப்பரிகாசஞ்செய்கிறவிதங்காண்க.

ஸ்திரிகள் - சொல் } தரு.
இராகம் - தன்னியாசி - தாளம் - ரூபகம்.

அந்தவேழைமொண்டிலக்க அவனைத்திசைநோக்கினே கிருஷ்ணன்
புத்திமகிழ்ந்தொன்றுங் கொடுக்காமல்போனியென்றனே (அந்த)
அய்யோபாவயிந்தவேழை மலேந்துவாந்தானே இவன்
சைமிலொன்றுக்கொடுக்கத்தோனே கமலநாபனே (அந்த)
பெண்டாட்டியுமருமக்கள் பிள்ளைகளுமே என்னமோ
கொண்டுவருவாரென்று சொல்லிக்கொண்டெதிர்பார்ப்பார் (அந்த)
வாயோவாழைப்பழமிந்த மாதவனுக்கோ இவன்
தாயனையோகாணக்கிழக்கென்று சொலமிடலாமே (அந்த)
எட்டிபழுத்தாலென்ன வியாதார்கள் இந்த
வட்டலுலகில்வாழ்ந்தாலென்ன மங்கையர்களே (அந்த)
கட்டிகுன்புரண்டாலும்மேல் காலகளமுக்கினேன் பின்பு
வெட்டியவர்த்தைசொன்னானன்றி வேறொன்றுங்காணேம் (அந்த)
கொடுக்கும்விதையமெனிடத்தில் கொஞ்சமுமில்லை இவனை
அடுத்தானடுத்தெருவில்விடுவானெட்டியிலேயே (அந்த)
வாய்புளிக்கதோமாங் காய்புளிக்கதோ என்று
மாயவனையிப்படி நாகூனே வார்த்தைசொல்வாரோ (அந்த)
பெரியவீட்டை சொல்லிப் பிச்சைக்குப்போனால் அங்கே
கரியைவாரிமுகத்திற்பூசின கதைபோலாச்சதே (அந்த)
வந்தவந்தவேழைமிக மானமுள்ளவன் ஆகையால்
இந்தகிருஷ்ணனையொன்றுங்கேட்காமலேயிருந்தானம்மா (அந்த)
தானேபழுக்காததைப்பெருந் தடிகொண்டடிச்சாலா பழுக்கும்
மானம்விட்டுக்கேட்டபோதிலும் வழங்காதொருகாசும் (அந்த)

பொது - விருத்தம்.

மாதவமணியாமிக்க மகிமைசேர் குசேலமேலோர் ... *
நிதிஇல்லாவழிமைப்பழித்திருப்பியேவாருங்காலத்தில் ... *
காதன்றனைகுளிருலே நல்லசோமகுபெற்றே ... *
ஆகாகங்களோடு மனையுடன்விளங்கிற்றே ... *

வசனம்.

அதேதெப்படியென்றால் குசேலமுனிவர் ஜகந்நாத ஸ்ரீகிருஷ்ணபகவானிடத்தில் உத்தரவுபெற்று துவாரகாபுரத்தைவிட்டுத் தம்முடையவூருக்கு வருகின்றவழியில் மேற்படி எம்பெருமானுடைய பரிபூர்ணகடாக்ஷத்தினால் மன்மதனுக்குச்சமானமான நல்லவடிவையும் பலவித அலங்காரங்களோடும் விளங்குகின்றாரென்றறிக.

ஸ்ரீகுசேலர் - சொல் - தரு.
இராகம் - பைரவி - தாளம் - ஆதி.

என்னவிந்தவிந்தைவிந்தை என்னுடம்புபூரித்ததே
உன்னதப்பவனங்கள் ஒன்றாய்பிரகாசிக்கிறதே (என்ன)
விலையுள்ளரத்னமுடி தலையில்மின்னுகிறதே
துலங்குமகரகுண்டலம் ஜொலிக்கிறதே காதில் (என்ன)
அழுத்தமிகவுமுள்ள அணிமுத்துமாலைகள்
கழுத்திலேயேயாய்க் காணுகிறதே யிதோ (என்ன)
தங்கமுத்துக்கோர்த்த அங்கியென்றனுடைய
அங்கத்தைமூடிக்கொண்ட அதிசயமென்னசொல்வேன் (என்ன)
கோடானுகோடியிலே கொடுத்தாலுங்கிடைக்காத
தாஷ்டிககோமேதகம் தழைத்தகைக்காப்பென்ன (என்ன)
எத்திசையிலும்புகழ் பத்துவிரல்களுக்கும்
சுத்தரத்னம் பொத்தியபொன்மோதிரம் (என்ன)
மாதவனுடுத்திடும் வண்மையுள்ள நல்ல
பீதாம்பரத்தைப்போலப் பேர்பெற்றவஸ்த்ரமென்ன (என்ன)
சரிகைபனுத்துஜோடு தழைக்கவென்காலில்வந்து
மருவியதென்னபுதுமை மனதிலுமியேனோ (என்ன)
கருப்புமோதிரம்போச்சே சாங்கலைவிகம்போச்சே
விருப்புடன்ராஜரிகம் மேவினதென்னகொள்ளோ (என்ன)
துதிகொள்கண்ணன்முடிந்த தூயவலதுள்ள
பிதுராஜிதமான பெருமபுரங்கண்டுயெங்கே (என்ன)
அப்பனேயாதிமூல முராரேலோகரக்ஷகா
இப்படியேவுனதையை என்மனமேலவைத்தாய் (என்ன)

பொது - எண்சீர் - விருத்தம்.

எம்பெருமானனுக்கிரகத்தாலே நல்ல ... ... *
இணையில்லாக்குசேலமுனி யிருப்பிடத்தில் ... *
செம்பொன்மயமான பலவுப்பரிகை ... ... *
சேர்ந்தெங்குசம்பத்து மிகவுமுண்டாய்ச் ... *
சம்ப்ரமமாய்ப்பிள்ளைகளுஞ் சுசீலைதானும் ... ... *
தழைத்தவிசித்திரங்களுடன் விளங்க ... *
இம்பர்திசைதாங்க சேனையிரா ... *
எதிர்கொண்டார் முனிவராதாந்துதிகொண்டாரே *

வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி அநுக்கிரகத்தினாலே குசேல முனிவருடைய இருப்பிடத்தில் ஆகாயத்தையளாவத்தக்க பொன்மயமாகிய அநேககோடிமாளிகைகள் உண்டாய், அவைகளில் அதிகசம்பத்துகளும் நிறைந்திருந்தன. பிள்ளைகள் - உ௭ - பெயரும், சசீலையம்மாளும், அநேகவித விசித்திரகளைகளுடன் பிரகாசித்தார்கள். அப்போது ரதகஜதுரகபதாதிகளாகிய சதுரங்கசேனைவீரர் மேற்படி குசேலமஹானுபாவரை யெதிர்கொண்டுவர்தாரெனக்காண்க.

மந்திரி சொல் - விருத்தம்.

கருணையாங்கடலேபோற்றி கரிசறுதவத்தோய்போற்றி ... *
பெருமைசேர்குபேரனைப்போல் பெற்றிடுந்தனத்தோய்போற்றி
அருமையாமஷ்டலக்ஷ்மி அடைந்தபுண்ணியனேபோற்றி ... *
திருவுளமிரங்கியிந்தச் சிறியனைக்காப்பாய்போற்றி ... *

வசனம்.

சரணம் சரணம் அய்யா ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர் - சொல் - விருத்தம்.

மண்ணினிற்செல்வம்பெற்று மகிழ்வுடனுளும்வாழி ... *
திண்ணியதருமசிந்தைத் திடம்பெறப்பெற்றுவாழி ... *
புண்ணியதெய்வபக்தி பொருந்தியெப்போதும்வாழி ... *
கண்ணியபந்துமித்ர களத்திரமுடனேவாழி ... *

வசனம்.

நீயெப்போதும் உனது புத்ரமித்ரகளத்ராதிகளுடன் அதிகசம்பத்தைப் பெற்று வாழக்கடவாய் மந்திரீ.

மந்திரி - சொல்லுகிற - ஜம்பை.

சதுரங்கசேனைகளும் சம்ப்ரமமாய்வந்தவிதோ
இதயங்களிகூர்ந்திடபோ தெழுந்தருள்வீரய்யா
அலங்காரயானைநல்ல அம்பாரிபோட்டிருக்கும்
இலங்குமிந்தயானையின்மே லேறியுட்காரும்
சுத்தமாகியகழிகள் துன்னிப்பொன்ஜீனியுள்ள
உத்தமவிக்குதிரையின்மீ துவந்தேறுமய்யா
ஓரெட்டுத்திசைபுகழு முன்னதநற்குதிரைகட்டும்
ஸாரெட்டின்பேரிலென்றன் சாமியேயேறும்
மட்டில்லாவிலைபெற்ற மாணிக்கங்கொண்டிழைத்த
பெட்டிவண்டிமேலேறப் பிரியமோவய்யா
நல்லநவரத்தினத்தால் நாகரீகமாய்ச்செய்த
பல்லாக்கைத்திருஷ்டிவைத்துப் பாருந்தவமுனியே

ஸ்ரீகுசேலர் - சொல் - கொச்சகம்.

சொல்லரியதைரியத்தை மேவியநல்மந்திரியே ... ... *
செல்லுமிந்தச்சேனையென்னைச் சூழ்ந்துநாற்புறம்வரட்டும் *
எல்லவரும்புகழ்கண்ணனெழிற் கருணையிப்படியோ ... *
பல்லாக்கைக்கொடுவாராய் பரிவுடனேயிப்போதே ... *

வசனம்.

மகாதைரியசாலியாகிய மந்திரியே! இந்தச்சதுரங்கசேனைகள் என்னைச்சூழ்ந்து நாலுபுறத்திலும் வரக்கடவன. ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியின் கிருபாகடாக்ஷம் இப்படியாயிருக்கிறது நல்லது. யானேறிக்கொள்ளப் பல்லாக்கைக் கொண்டுவருவாய்.

மந்திரி - சொல் - மட்டுவிருத்தம்.

உத்தமரே யான் ... ... *
உத்தரவின் படி ... ... *
சித்தங் களிக்கச் ... ... *
சித்தஞ் செய்தேன் ... * ௨

வசனம்.

இதோஉமது ஆக்கினைப்படி முத்துப்பல்லாக்கைக் கொண்டுவந்தேன் ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர் - சொல் - தேவாரம்.

அப்பனேயாதிமூல மானவோர்பரமமூர்த்தி ... ... *
ஒப்பில்தேஜோமயத்தா யுயரருட்கடலேபோற்றி ... ... *
இப்படியோவென்மேலுமின்னருள்வைத்தரயென்னே ... *
தப்பறுஞ்சிவிகைமீதே தடையறவுட்கார்ந்தேனே ... *

வசனம்.

ஆதிமூலமாகியபரம்பொருளே தேஜோமயமானவனே இப்படியா அடியேன்மேல்உன்கிருபைவைத்தாய்இதென்ன? இதோ எதிர்நிறுத்திய முத்துப்பல்லாக்கிலேறி யுட்கார்ந்தேன் கர்த்தனே.

ஸ்ரீகுசேலர் - சொல் - எண்சீர்விருத்தம்.

ஆதாகாவிதென்னநேத்தி யிங்கே ... ... *
யடர்ந்தபெருங் காடெல்லாங்காணகிலேனே ... *
ஓகோகோவென் சிறியகுடிசைகாணேம் ... ... *
உயர்தருமென்மக்களுடன் சுசீலையெங்கே ... *

ஏகாம்பரகிரைக்கொன்றைப்போல ... *
எப்படியுண்டாச்சுதிது விந்தையிந்தை ... *
பாகாரிகாபுரிதனிலே யோர் ... *
பங்காமோபளபளாமிகவுநன்றே ... *

வசனம்.

ஆகாகா இதுவென்னவாச்சரியம்! இங்கே முன்னிருந்தமகத்தரிய காடுகளைக்காணோமே. இங்கேயிருந்த எனது சிறியகுடிசையுங்காணோம். இவ்விடத்திலொன்றைப்போல ஆகாசத்தையெட்டத்தக்க பெரன்மயமாகிய அநேக கோடிமாளிகைகள்; நான் த்வாரகைக்குப்போய்வருவதற்குள்ளெப்படியுண்டாச்சு தேவேந்திரன் அமராவதிபட்டணத்திலும் இதில் நாலிலொருபங்காமா? கர்த்தனே.

சுசீலைபோற்றி - விருத்தம்.

வேதங்களுன்குமோர்ந்த வேதியமணியேபோற்றி ... *
தீதுசேர்மாயைநீக்குந் திடச்சிந்தையனேபோற்றி ... *
ஓதருந்தவத்தில் மிக்கவுத்தமசிலாபோற்றி ... *
ஆதரமாகவிந்த வடியாளையாள்வோய்போற்றி ... *

வசனம்.

சரணம் சரணம் மஹாதவத்தாற்சிறந்து விளங்குமென் ப்ராணநாதா.

ஸ்ரீகுசேலர் - வாழ்த்து - மட்டுவிருத்தம்.

ஒப்பில்லா நல்ல ... *
கற்பினைப் பெற்ற ... *
அற்புத மயிலே ... *
எப்போதும் வாழி ... *

வசனம்.

மஹாபதிவிரதாசிரோமணியாக விளங்கும் எனதுப்ராணநாயகி போதும் வாழ்வாயாக.

பிள்ளைகள் - சொல் - மட்டுவிருத்தம்.

தந்தையே யுன்றன் ... *
சுந்தர பதத்தை ... *
வந்தனஞ் செய்தோம் ... *
இந்தப் பிள்ளைகளே ... *

வசனம்.

எங்கள் பிதாவே இதோவுமது திருவடித்தாமரைகட்கு யாங்கள் உள பெயரும் வந்தனஞ்செய்கிறோம் ஸ்வாமி.

ஸ்ரீகுசேலர் - சொல் - மட்டுவிருத்தம்.

மேதினி தன்னில் ... *
போதவுங் கல்வி ... *
நீதருஞ் செல்வம் ... *
நீதமாய்ப் பெறுக ... *

வசனம்.

கல்வியுடனே செல்வமும் இன்னமும் நீங்கள் பெற்றுவாழக்கடவீர்கள் மைந்தர்களே.

சுசீலை - சொல் - விருத்தம்.

ஆரடிதோழிமாரே அதிசீக்ரமாகவோடிச் ... ... *
சீரியபனிநீர்கொண்டு தெளிப்பிரகனிவருடம்பில் ... ... *
சேரில்லாவிசிறியாலே சின்பின்கேவிசிறுவீர்கள் ... ... *
பார்புகழாசனத்தைப் பரிவுடனபோடுவீரே ... ... *

வசனம்.

ஆரடி அடி தோழிமார்களே? நீங்கள் சீக்கிரமாகவோடிப்போய்ப் பனிநீரைக்கொண்டுவந்து இந்த மஹானுபாவர்மேல் தெளியுங்கள். இவருடைய ஆயாசம் நீங்கும்படியாக நீங்களிரண்டுபக்கங்களிலும்நின்றுவிசிறிகளைக்கையிற்பிடித்துக் குளிர்ந்தகாற்றுவீசும்படியாக விசிறுங்கள், இவரெழுந்தருளப்பொன்னாசனத்தைப்போடுவீர்பெண்களே.

சுசீலை - சொல் - மட்டுவிருத்தம்.

மாசிலா விந்தப் ... *
பூசுர ருக்கு ... *
நேசமா யிப்போ ... *
போசன மளிப்பீர் ... *

வசனம்.

இந்த மஹானுபாவருக்குப் போஜனபதார்த்தங்கள் கொண்டுவருவீர் தோழிகளே.

தோழிகள் - சொல் - வசனம்.

உமது ஆக்ஞைப்படி இதோ திவ்வியமாகிய போஜனபதார்த்தங்கள் கொண்டுவந்தோமெங்கள் தாயே.

சுசீலை - சொல் - கொச்சகம்.

வந்தவுமதாயாசம் மாறுவிதமாய்ப்படைத்த ... ... *
இந்தப்போஜனமுண்பீ ரினிதிருக்கும்விசித்திரமாம் ... *
விந்தையிலவம்பஞ்சி மெத்தையின்மேல்படுத்தருள்வீர் ... *
சுந்தரமோதவத்திற் றுலங்குமெங்கள்பெருமானே ... *

வசனம்.

தேவரீர் ஆயாசம் நீங்கும்படி இந்தப்போஜனத்தையுண்டீர். இதோவிருக்கு மிந்த இலவம்பஞ்சிப்பட்டுமெத்தையின்மேல் படுத்தருள்வீர். உத்தமமாதவசிகாமணியே.

சுசீலை - மனை - விசாரணை.

சுசீலை.

அரிவைபோகம்முடைய வகையெலாமொழுகியே
யாச்சுதா பரிசுத்தமாய்

தோழி.

அர்மணியேயும்முடைய கட்டளைப்படிமெழுகி
யாயிற்றென் னுச்சியாரே

சுசீலை.

அலங்காரமானநவ ரத்தினதூள்களால்
அருக்கோல மிட்டையாசொல்

தோழி.

அம்மாவுன்னுத்தரவு சிரசின்மேற்றாங்கியே
அமைத்தனன் சித்ரகோலம்

சுசீலை.

தெரிவையேயென்னுடைய நாயகர்ஸ்நானந்தான்
செய்தாச்சுதா சொல்லுவாய்

தோழி.

தேவியேநின்புருஷர் ஸ்நானஞ்செய்தாயிற்று
செப்பினே னிப்பேதையே

சுசீலை.

திவ்யபரிமளபுட்ப மெனதுபதிபூசைக்குச்
சித்தமா யிருக்கின்றதா

தோழி.

சீலமாகிய கந்தபுட்பங்கள்தமையிதோ
சித்தஞ்செய்தே னிறைவியே

சுசீலை.

அரியமாதவாநுஷ்டான வாராதனைகள்
ஆச்சுதா சம்பூர்ணமாய்

தோழி.

அம்மையேசெம்மையாய் நித்தியவநுஷ்டான
வாராதனை யாச்சுது

சுசீலை.

அதிதிகள்போஜனஞ் செய்யவிப்போதுதான்
ஆஜ்ஞா யிருக்கிறாரா

தோழி.

அன்புடன்பலகோடி யதிதிகள்வந்திதோ
அண்டியேயிருக்கிறார்கள்

சுசீலை.

புனையில்பொன்வாழையிலை போஜனஞ்செய்யவே
போட்டையா வரிசையாக

தோழி.

புண்ணியபதிவிரதநலைவியே யிப்போது
போட்டேன் பொன்வாழையிலைகள்

சுசீலை.

புனிதபக்ஷண பதார்த்தங்களுடனன்னமிப்
போது வட்டித்தையாசொல்

தோழி.

புகழுடையவன்னையே போஜனஞ்சாதித்துப்
போதவும் விசாரித்தனே

பொது - விருத்தம்.

எம்பெருமான்றன் றிவ்ய விணையிலாக்கருணையாலே... ... *
சம்பத்துமிகவும்வந்து சார்ந்திடமுனிவர்பார்த்து ... ... *
நம்போலியர்க்கேயீது நன்மைதானலவென்றோர்நாள் ... *
உம்பர்கள்துதிக்குங்கண்ண னுடையநற்றுதிசெய்வாரே ... *

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் கடாக்ஷத்தாலே ஸ்ரீகுசேலருக்கு அதிகஸம்பத்துகளவந்து சேர்ந்திருப்பதை மேற்படிமுனிவர்பார்த்து, இந்தச்செல்வமநம்முடைய ஞானத்தைக்கெடுக்குமென்று எண்ணி, ஒருநாள் அந்தரங்கமாகிய ஒருதலத்தில்போய் த்வாரகாபுரவாசராகிய கண்ணபிரானைத் துதிக்கிறவிதங்காண்க.

ஸ்ரீகுசேலர் - சொல் - தேவாரங்கள்.

மூவிதவாசையென்னு மூடியகாட்டிற்சிக்கிப் ... ...
பாவத்துக்காளாயுன்னைப் பணிந்திட்டமனையில்லாமல் ... ...
தாவியேயலையுமான்போல் சஞ்சலங்கொண்டேனையா ...
ஆவலாயென்முன்வந்தே ஆண்டுகொள்கிருஷ்ணமூர்த்தி ...
பிள்ளைகள்செய்ததப்பைப் பெற்றவர்பொறுத்திடாமல் ...
தள்ளித்தான்விடப்பட்டோர்கள் ஜகத்தினிலில்லைகண்டாய் ..
வள்ளலேயடியேன்செய்த வரம்பிலாவபராதத்தை ... ...
உள்ளத்திற்கொள்ளாதாள ஓடிவாகிருஷ்ணமூர்த்தி ... ...
கன்றுதான்கூப்பிடுங்கால் கதறியேயோடிவந்து ...
நின்றிடும்பசுவைப்போல க்ஷேமங்கருணைகூர்ந்து ...
என்றன்முன்றடையில்லாம லெப்பொழுதுமேவிவந்து ...
ஒன்றுனபாயமேகாப்பாய் ஒப்பிலாக்கிருஷ்ணமூர்த்தி ... ...

ஸ்ரீகிருஷ்ணர் - வருகிற - தரு.

இராகம் - மணிரங்கு - தாளம் - ரூபகம்.

நாதன்வந்தான் செந்தாமரைப்
பாதன்வந்தான் குசேலர்முன் (நாத
பூதலத்தோர்புகழ் த்வாரகையைவிட்டு
மாதவனோடி மனதிலருள்நீடி (நாத
பாஞ்சஜன்யன் சக்ராயுதன்
படைத்ததன்யன் கருடாரூடன்
பாஞ்சாலியானவள் பிரார்த்தித்தகாலத்தில்
வாஞ்சையுடன்றுகில் வளரும்படிசெய்த (நாத
ஆய்ச்சியர்நேயன் பாண்டவருக்
காளசகாயன் எப்போதுமே
தோய்ச்சதயிருக்கா யுயிரின்மேற்றுயிலும்
துங்கவெம்பெருமான் தங்குங்குருநாதி (நாத
பீதாம்பரத்தோன் புள்ளாங்குழல்
பிறங்குஞ்செங்கரத்தோன் நந்தநந்தனான்
நீதிசேர்செங்காடு சேஷாத்ரிகவிஞனை
ஆதரமாகவே அன்றினம்ரக்ஷிக்கும்

ஸ்ரீகுசேலர் - சொல் - எண்சீர்விருத்தம்.

மாதவனேகேசவனே ஸ்ரீவைகுந்த ... ...
மதுசூதனமுகுந்தா வாசுதேவா ... ...
வேதமுடிவானவொரு பரமமூர்த்தி ... ...
மெய்ஞ்ஞானியோருளத்தில் விளங்குஞ்சோதி...
ஆதியெனமுறையிட்ட யானைதன்னை ... ...
யன்புடனேகாத்தருளும் பத்மநாபா... ...
ஏதென்றுசொல்லுவன் யானென்றன்புண்ய ...
மெய்பொருளிலும் நிறைந்தோய்போற்றிபோற்றி

வசனம்.

போற்றிபோற்றி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே.

சுசீலைபோற்றி - விருத்தம்.

கண்ணனேபோற்றிபோற்றி கறுத்தமேனியனேபோற்றி ...
தண்ணருட்கடலேபோற்றி த்வாரகைப்பதியேபோற்றி ...
விண்ணவர் துதிக்கும்நல்ல வித்தகமூர்த்திபோற்றி ...
புண்ணியவஷ்டலக்ஷ்மி பொருந்துமெம்பெருமாபோற்றி ...

வசனம்.

எம்பெருமானே சரணம்சரணம் ஸ்வாமி.

சிறுவர்கள்சொல் - மட்டுவிருத்தம்.

சரணம் சரணம் ... ...
முரஹரி மூர்த்தி ... ...
கருணை வைப்பாயிச் ...
சிறுவர்பே ரிலெயே ...

வசனம்.

இச்சிறுவர்களை ரக்ஷிக்கவேண்டுமாலேவனே.

ஸ்ரீகுசேலர் - சொல் - மட்டுவிருத்த

அங்கனே யிந்த ... ... *
தங்க வாசனத்தில் ... ... *
இங்கித மாக ... ... *
இங்கெ யுட்காராய் ... ... *

வசனம்.

இதோ யான் போட்ட பொன்னாசனத்தில் எழுந்தருளவேண்டு கர்த்தனே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

பூதலவாழ்க்கைதன்னைப் பொய்யெனமனத்திலெண்ணி
நீதிசேர்ஞானமார்க்க நிலைதனைமுழுதுந்தேர்ந்த
மாதவமணியேநீர்தான் மனமிகமெலிந்தேயென்னை
ஏதுக்காய்நினைத்தழைத்தீ ரியம்பிடுவீரிப்போதே

வசனம்.

மஹாஞானத்தைப்பெற்றுவிளங்கும் குசேலரே உம்முடையமனது வும் வியாகூலப்பட்டு என்னையேன் அழைத்தீர் அதைச்சொல்லுவீர் அய்

ஸ்ரீகுசேலர் - சொல் - விருத்தம்.

ஒன்றுமேயறிந்திடாத வொருமனிதனைப்போல்நீர்தான் ...
என்றனையழைத்தகார்ய மென்னெனக்கேட்டீர்நீரே ...
நன்றிதுவிந்தைவிந்தை நானிதோசொல்லுகின்றேன் ...
குன்றெடுத்தாக்கள்காத்த கோவிந்தவெம்பிரானே ...

வசனம்.

ஒன்றுந்தெரியாதவொருமனிதனைப்போல நீர் என்னையேன் அழைத்தீரென்று இப்போது என்னைக்கேட்கிறீர். இது ரம்பவும் ஆச்சரியமாயிருக்கிறது யானேசொல்லவேண்டுமென்று உமக்கு அபிப்பிராயமிருப்பதால் இதோசொலுகிறேன் கேட்டருள்வீர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே.

ஸ்ரீகிருஷ்ணருக்கும், ஸ்ரீகுசேலருக்கும், நடக்கிற தர்க்கம், தரு.

இராகம் - மத்தியமாவதி - தாளம் - அடதாளசாப்பு.

ஸ்ரீகுசேலர்.

கருணைக்கடலாகும் வைகுந்தவாசனே
கருமுகில்மேனியனே இந்தப்
பெரியசெல்வமெனக்கேன் கொடுத்தாயோவெம்
பெருமானே ஸ்ரீகிருஷ்ணனே

ஸ்ரீகிருஷ்ணர்.

செல்வங்கொடுத்தே னீயுமுன் சதிமனைவியும்
க்ஷேமமாய் வாழ்ந்திடவே இது
நல்லகாரியந்தானே யென்னவுனக்குக்குறை
நவிலுவாய் குசேலனே

ஸ்ரீகுசேலர்.

ஞானத்தைக்கெடுத்த கங்காரத்தையுண்டாக்கும்
நாளுமே சம்பத்துதான் இது
ஏனெனக்கென்புத்ரர் மனைவியைக்காக்கநீ
இருக்கிறாய் ஸ்ரீகிருஷ்ணனே

ஸ்ரீகிருஷ்ணர்.

உன்னைப்போன்றநல்ல ஞானிக்குத்தனம்வந்தா
லொருகாலத்திலேயும் ஐயா
மன்னியவிவேகந்தான் கெட்டுப்போகாது
மாதவ குசேலனே

ஸ்ரீகுசேலர்.

களிக்கவுனைக்கண்டு சேவிக்கவந்தவற்கு
கனத்த செல்வத்தினையே தந்தாய்
குளிக்கப்போய்ச்சேற்றைத்தா னள்ளிப்பூசிக்கொள்ளும்
கொள்கைபோல் ஸ்ரீகிருஷ்ணனே

ஸ்ரீ குசேலவிலாசம்.

ஸ்ரீகிருஷ்ணர்.

இல்லையாமேதெனீயிந்தச் செல்வமொன்றும்
செய்யாது உன்றனையே ஒரு
பகலவன்முன்னிருளிற்குமோசொல்லுவாய்
பரிசுத்த குசேலனே

ஸ்ரீகுசேலர்.

மண்பெண்பொன்னாசையால் புத்திசஞ்சலப்பட்டு
வருந்துமே தனம்வந்தால் ஐயா
புண்ணியப்பெரியோர்களிச்சிக்கமாட்டாரே
புகலுவாய் ஸ்ரீகிருஷ்ணனே

ஸ்ரீகிருஷ்ணர்.

பூமியில்மாயைதான் சோராதநல்லோர்க்குப்
பொருள் வந்தடைந்தாலுமே கேளாய்
தாமரையிலேமேலிருக்குஞ் சலத்தைப்போல்
தங்குவார் குசேலனே

ஸ்ரீகுசேலர்.

செழுமைவைகுந்தனே வேண்டாம்வேண்டாமிந்தச்
செல்வந்தானென்றனுக்கு என்
பழையதரித்திரங்கொடுத்தால் ஞானத்திற்குப்
பழுதில்லை ஸ்ரீகிருஷ்ணனே

ஸ்ரீகிருஷ்ணர்.

என்றனுயிர்போன்ற லக்ஷ்மியையேநக்கா
யிகழ்ச்சி நீசெய்கின்றாய் இது
நன்றல்ல போகபாக்கியங்களுடனே
நண்ணுவாய் குசேலனே

ஸ்ரீகுசேலர்.

அப்பனேயுன்க்ருபை யடியேன்மேலெப்போதும்
அன்புடன் வைப்பாயானால் போதும்
ஒப்பில்லாமூர்த்தியே லக்ஷ்மியென்னிடம்வேண்டா
முரைத்தனன் ஸ்ரீகிருஷ்ணனே

ஸ்ரீகிருஷ்ணர்.

எனதுதேவியானலக்ஷ்மியை நிந்தித்தால்
எப்போதுமென்கிருபை உன்மேல்
நினையாதும்மையே நிச்சயமாகவே
செப்பினேன் குசேலனே

ஸ்ரீகுசேலர் - சொல் - விருத்தம்.

அப்பனேநின்கடாக்ஷமப்படியிருக்குமானால் ... ... *
மெய்யனேயிந்தச்செல்வம் விருப்பமாயனுபவிப்பேன் ... *
துய்யநற்றிவ்யநாம தோத்திரஞ்செயவுமப்பால் ... ... *
உய்யஸ்ரீவைகுந்தத்தை உதவவும்வேண்டுந்தானே ... *

வசனம்.

இந்தப்பெருத்த சம்பத்துடனே அடியேன் வாழ்ந்திருக்கவேண்டுமென்று உனதுதிருவுளம் ரம்பயுமிருக்கிறது. அதேபிரகாரம் யான் நடந்துகொள்ளுகிறேன். எந்தக்காலத்திலும் உன்தோத்திரங்களை மறவாமலிருக்கவும் எனது அந்தியகாலத்தில் ஸ்ரீவைகுந்தபதவியை யான்பெற்றுப் பிரமானந்தமடையவும் எனக்கிப்போது வரங்கொடுக்கவேண்டும் ஸ்ரீகிருஷ்ணபகவானே.

ஸ்ரீகிருஷ்ணர் - சொல் - விருத்தம்.

அப்பனேயெனதுக்யான மன்புடனுன்றனெஞ்சில்... ... *
எப்போதுமறந்திடாம லிருக்கவேவரங்கொடுத்தேன் ... *
ஒப்பிலிச்செல்வத்தோடே உலகினிற்புனைநாள்வாழ்வாய்...... *
அப்புறம்ஸ்ரீவைகுந்த மனுக்ரகஞ்செய்கின்றேனே... ... *

வசனம்.

என்னுடையத்யானம் எப்போதும் உன்மனத்தைவிட்டு நீங்காமலிருக்கும்படி இதோ வரங்கொடுத்தேன். இந்த மஹத்தாகியசம்பத்துடனே நீயும் உன் மனைவி இந்தச் சுசீலையம்மையும் பிள்ளைகள் இருபத்தேழுபெயரும் அநேககால வருஷங்கள் சந்தோஷமாயிவ்வுலகில் வாழ்ந்திருக்கக்கடவீர்கள். பின்புகுடும்ப சமேதமாயுன்னை யென்னுடைய ஸ்ரீவைகுந்தத்திற்சேர்த்துக்கொள்ளுகிறேன் யாஞ்போய்வருகிறேன் குசேலமஹானுபாவனே.

ஸ்ரீ குசேலவிலாசம்

மங்களம்.

இராகம் - சௌராஷ்டிரம் - தாளம் - ஆதி.

கருணைமூர்த்திகண்ணா மங்களம்   த்வாரகைவாச
கருணைமூர்த்திகண்ணா மங்களம்
தருணமிதுவேயென்னை யாள- சந்ததமுன்னைநம்பினேன்
அருமைசேரும் நந்தகோபால
திருவைகுந்தலக்ஷ்மி லோல   (கருணை
தாசர்கள்வணங்கும் பாதனே   பாண்டவர்வேண்ட-
நேசமாகச்சென்ற தூதனே
பாசபந்தம்நீக்கி யென்னைப்
பாதுகாப்பாய் ஸஹஸ்ரநாம
மாசிலாத கச்சிவரத
மாதவனே பரந்தாம
நீலமேகரூபமங்களம் அநாதரக்ஷக
பாலிப்பாயிப்போது மங்களம்
தாலமுழுதுமுண்ட [illegible]
சங்குசக்ர[illegible] ஐயா
காளவிஷத்தைக் கக்குங்கொடிய
காளிங்கன்மே னடித்தவைய
எங்குநிறைந்தபரமசோதியே தாஸாநுதாஸ
னென்றிடும்பெயர்பெற்ற வாதிய
துங்கனேசேஷாத்ரி தாஸன்
துதித்திடுந்தூமணி[illegible]
ரங்கநாத ஸ்ரீவைகுண்ட
மங்களம் மங்களம் மங்களம்

ஸ்ரீகுசேலவிலாசம்

முற்றிற்று.